
SLSB
Sri Lanka Savings Bank
Brighter Tomorrow . . .

## தூர நோக்கு

நுண்நிதியியலில் முதன்மை வாய்ந்த வங்கியாகத் திகழ்தல்.

## குறிக்கோள்

சேமிப்பு பழக்கத்தினை ஏற்படுத்தி பல்வேறு பொருளாதார துறையினருக்கும், நுண் முயற்சியான்மை துறையினருக்கும் நிதி ம ற்றும் நிதி சார்பற்ற வளங்களை வழங்குதல்.

## எமது மதிப்புக்கள்

எங்களின் சேவைகளினூடாக எதிர்பார்க்கப்படும் விழுமியங்கள் மற்றும் ஒழுக்கங்களை நிலை நிறுத்துவதற்கான அர்ப்பணிப்புக்கள்:

- தொழில்தேர்ச்சி
- ஒழுங்குபடுத்தல
- செயற்திறன
- நம்பிக்கை
- வெளிப்படை த்தன்மை
- சமூக பொறுப்புக்கள

# கூட்டுறவுத் தகவல்கள்

### பதியப்பட்டுள்ள பெயர்
வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

### சட்ட ரீதியான நிலைமை
1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்ட விசேட வங்கி யொன்றாகும். 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட அரச கம்பனியொன்றாக உருவாக்கப்பட்டு 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கத்தைக் கொண்ட கம்பனிச் சட்டத்தின் கீழ் பீ.பீ. 296(PB296) ஆம் பதிவு இலக்கத்துடன் மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

### பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இலக்கம் 265, வோட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி இலக்கம: 0112691721-2, 0112674700/1/2/3,
பெக்ஸ் இலக்கம : 0112674705/6
மின்' அஞ்சல : slsbl@sltnet.lk

### கம்பனியாக உருவாக்கப்பட்ட திகதி
**07th ஜூலை 2006**

### கம்பனிச் செயலாளா
திருமதி. வை எம் ஜே பெர்ணான்டோ
*எல்எல்.பீ (கொழும்பு) சட்டத்தரணி, பிரபல நொத்தாரிஸ் வாக்குறுதி அளித்த ஆணையாளா*

### கணக்காய்வாளர்
பீ.வீ.பெர்ணான்டோ அன்ட் கம்பனி
பட்டயக் கணக்காளர்
இலக்கம் 70/பீ/8/5 பீ பௌத்த இளைஞர் சங்க
பழைய கட்டடம், கொழும்பு 08

## மதிப்பெண்
**நீண்டகால** : BBB
**குறுகிய கால** : P2

## இயக்குநர் வாரியம்

திரு. ஆரிய திலக தஹநாயக்கா (தலைவர்)

திரு பிரியங்க அல்கம (**கஜானா பிரதிநிதி**)

திரு கோஸல ரட்ணவீர

திரு. திலக் வண்ணிகம

திரு. உடுவகே தொன் சுமித் பராக்கிரம பெரேரா

திரு. இந்திகஹவெல கமகே பாலித

திரு. சனத் வீரதுங்க (இயங்கும் பணிப்பாளர்)'

திரு. ஊரகொடகே விஜித பெரேரா

திரு டிலுஸ் அபேயசூரிய (16.05.2012 **அன்று நியமிக்கப்பட்டார்**, 02.11.2012 **அன்று ராஜினாமா**)

திரு. முதுபண்டகே கமல் பண்டார திசாநாயக்கா

**பொது மேலாளர்/தலைமை நிர்வாக அதிகாரி** - Mr. H. J A Weerasekera - **2012.01.18 விளைவாக நியமனம்**

# தவிசாளரின் செய்தி

இலங்கை சேமிப்பு வங்கியின் 2012 டிசெம்பர் 31 ஆம் திகதி நிறைவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கூட்டிணைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளாகை யால், வங்கியின் கடந்த கால நினைவுகளை மீட்டிப்பார்ப்பது முக்கியமானதென நான் நம்புகின்றேன்.இந்த வங்கியின் ஆரம்பமானது 2002 ஆம் ஆண்டில் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் பிரமுக வங்கியின் வைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின் விளைவினாலாகும் என்பது மறக்க முடியாததொன்றாகும். இதன்படி, வைப்பாளர்களுக்கு உதவும் எண்ணத்தில் 2006 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட துடன், அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் 2006 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. கூட்டிணைக்கப் பட்டதன் பிரதான நோக்கமாக இருக்கின்ற எமது பிரதான கடமையையும், வங்கி யொன்றாக சாதாரணமான வங்கியியல் தொழிற்பாடுகளைத் தொடர்வதனை வெற்றிகரமாக நிறைவேற்றுகின்றோம் என்பதை நாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விசேடமாக 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில், பல பெரிய, நடுத்தர அளவு அபிவிருத்திக் கருத்திட்டங்களும், தற்போது இப்பிரதேசங்களில் தோன்றுகின்ற புதிய வாய்ப்புக்களும் தென்,வட மத்திய மாகாணங் களில் பொது மக்களுக்கு கையளிக்கப் பட்டிருந்தன. ஆகவே, இலங்கை சேமிப்பு வங்கி அத்தகைய தோன்றுகின்ற சந்தை வாய்ப்புக்களை இனங்காண்பதுடன், நாட்டில் சிற்றின நிதியில் தலைமைத்துவத்தை அடையும் தொலைநோக்கில் முதலிடுகின்றது.

முழுமையான அரச உடமை வங்கியாக, முயற்சிசார் திறமைகளுடன் புத்துருவாக்கம் உள்ளவர்களை நாம் நாடுவதுடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ‘மஹிந்த சிந்தனை தொலைநோக்கு - 2010’ மற்றும் ‘கிராமத் திலிருந்து நகரத்திற்கு’ என்ற தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணைந்து தற்போது தொடர்கின்றவை மீது கவனம் செலுத்தி மாற்றமடையச் செய்வதில் அவர்களை ஊக்குவிக்கின்றோம்.

கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் சிற்றின நிதித் துறையில் முன்னோடியாக இருக்கின்ற வங்கியாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களது வணிகத்தை விரிவாக்குவதற்கு நிதியினை வழங்கியுள்ளது.

நாட்டின் அபிவிருத்தி முயற்சிக்காக 2008 ஆம் ஆண்டில் தொழிலை ஆரம்பித்த இலங்கை சேமிப்பு வங்கியினால் விசேடமாக, வங்கியானது இன்னமும் வளரும் நிலையில் இருக்கின்றபோதிலும், சிற்றின தொழில்முயற்சி அபிவிருத்தி விடயப்பரப்பில் வகித்த பங்கு பாராட்டத்தக்கது. 2012 ஆம் ஆண்டுக்கான நிதி வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன.

- மொத்த வருமானம் - 759.9 மில்லியன் ரூபா  
  முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 32% அதிகரிப்பு
- பெறுமதி சேர் வரிக்கு முன்னர் - 594.6 மில்லியன் ரூபா  
  2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 20% அதிகரிப்பு

*“රටට බරක් නැති වීරවන්තයන්ට අතහිත ”*

“ගම් මට්ටමේ සිට නගරය දක්වා විශාල පිරිසක් තම දෑතේ වෙර වීරියෙන් ජීවිතය ගොඩ නගා ගන්නා බව මම දනිමි. මේ පිරිස හැම විටම එදිනෙදා ජීවිකාව ගැන විනා අනාගත දියුණුවක් ගැන නොසිතන මානසික මට්ටමෙන් මුදාගත යුතුව ඇත. ඒ සඳහා අවශ්‍ය වටපිටාව මම සකස් කර දෙන්නෙමි”

- புதிய வைப்புக்கள் – 295 மில்லியன் ரூபா
  18% அதிகரிப்பு

- பிரமுக வங்கியினால் முன்னர் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் 132 மில்லியன் தொகையாகவிருந்தது (வட்டி உள்ளடங்கலாக)

- தோல்வியுற்ற பிரமுக வங்கியின் தீர்க்கப்பட்ட மொத்தப் பொறுப்புகளின் தொகை 2012 ஆம் ஆண்டில் 1,021 மில்லியன் ரூபாவாகும்.

- பங்குதாரர்களின் நிதி –3.4 மில்லியன் ரூபா
  19% அதிகரிப்பு

எமது வங்கிக்கு வழங்கிய வழிகாட்டல் மற்றும் பணிப்புரைக்காக அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். எமக்கு தடங்கலற்ற ஒத்துழைப்பினை வழங்கியமைக் காக கௌரவ பிரதி நிதி, திட்டமிடல் அமைச்சருக்கும், அமைச்சிலிருக்கின்ற சிரேஷ்ட அலுவலர்கள் அனைவருக்கும் எனது வெளிப்படையான பாராட்டுதலும், நன்றியும் உரித்தாகின்றது.



மேலும், கூட்டிணைக்கப்பட்ட--திலிருந்து வங்கிக்கு நியமிக்கப்பட்டிருந்த பணிப்பாளர் களுக்கு வங்கியின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான அவர்களது அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டிற்காக எனது பாராட்டுக் களைத் தெரிவித்துக-கொள்கின்றேன். வங்கியின் இந்த குறிப்பிடத்தகு முன்னேற்றத்திற்கு மனித வளம் என்பது முக்கியமானதொரு வளமாகும். எந்தவொரு நிறுவனத்தினதும் வெற்றி அல்லது தோல்வி யென்பது அந்த நிறுவனத்தில் தொழில் புரிகின்ற அனைத்து மட்டப் பணியாளர் களிலும் தங்கியிருக்கின்றது. வங்கியானது, தற்போது தொழிற்படு பணிப்பாளராக இருக்கின்ற திரு.சனத் வீரதுங்க அவர்களை முகாமையாளராகக் கொண்டு, குறைந்த வசதிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையான பணியாளர்களுடன் ஆரம்பித்திருந்தது.

நாம் இன்றிருக்கும் நிலைக்கு வங்கியைக் கொண்டு வருவதற்கு அன்றிலிருந்து இன்று வரை அனைத்து பதவி அங்கத்தவர்களும் வங்கியின் அபிவிருத்திக்காக கடமையாற்றி யிருந்ததுடன், அர்ப்பணிப்புடன் செயற்பட்டு ள்ளனர். ஆகவே, அவர்கள் முகம்கொடுத்த கஷ்டங்கள் மற்றும் வங்கியின் வெற்றிக்காக அவர்கள் எடுத்த முயற்சிக்காக அவர்கள் அனைவரையும் நாம் பாராட்டுவதுடன் நன்றி களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இது வெற்றிகரமான கதையின் ஆரம்பம் மட்டுமே என்பதுடன் இன்னமும் நீண்ட தூரம் செல்ல வேண்டிருக்கின்றது. இந்த வெற்றிப் பாதையினை முன்னேடுப்பதற்கு பதவியணி யின் தொடர்ச்சியான ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து பாரிய பலமாக வந்திருந்த இலங்கை கூட்டுத்தாபன கிராமிய வங்கிகள் சமாஜம் லிமிடெட், கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுத்தாபன கிராமிய வங்கிகளின் சங்கங்கள் மற்றும் எமது வங்கி மீது தமது தொடர்ந்தேர்ச்சியான பற்று, நம்பிக் கையைக் கொண்டிருந்த எமது பெறுமதிமிகு வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களும், நன்றிகளும் உரித்தாகின்றன.



**ஆரியதிலக தஹாநாயக**
**தவிசாளர்**

# பொது முகாமையாளரின் மீள்நோக்கு

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற நிதி ஆண்டுக்கான இலங்கை சேமிப்பு வங்கியின் தொழிற்பாடு மற்றும் நிதி மீளாய்வினை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.
வங்கியின் ஐந்து ஆண்டு வரலாற்றில் ஒருபோதும் கண்டிராத உயர்வான இலாபத்தைப் பதிவு செய்து விதிவிலக்கான செயலாற்றுகையுடன் வங்கிக்கு சிறந்ததொரு ஆண்டொன்றாக 2012 ஆம் ஆண்டு திரும்பியிருந்தது. இந்த குறிப்பிடத்தகு செயலாற்றுகைக்கு கைக்கொள்ளப்பட்ட உறுதியான உபாயங்களே முக்கிய பங்காற்றியிருந்தன.




### நிதிப் பெறுபேறுகள்

வரிக்கு முன்னரான இலாபம் 20% வளர்ச்சியுடன் 2011 இல் 494.1 மில்லியன் ரூபாவாக இருந்து 2012 இல் 594.6 மில்லியன் ரூபாவாக வளர்ச்சியடைந்திருந்தது. ஆண்டுக்கான மொத்த வருமானம் 759.9 ரூபா தொகையாகும். சிற்றின நிதிச் செயற்பாடுகளிலிருந்தான வட்டி வருமானம் மற்றும் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் செயற்படாத கடன்களின் வட்டியிலிருந்து அறவிடப்பட்ட வட்டி என்பவை முறையே 78.2 மில்லியன் ரூபாவாகவும், 48.7 மில்லியன் ரூபாவாகவும் இருக்கும்இடத்து வாடிக்கையாளருக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் 126 மில்லியன் ரூபாவிலிருந்து 139 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.
நிதி ஆண்டு காலப்பகுதியில் சொத்துக்கள், பொறுப்புகள் முகாமைத்துவத்தின் பயனுறுதி வாய்ந்த சாதகமான விளைவினால் நிலையான வருமான பிணைப்பொறுப்புக்களிலிருந்தான வட்டி 444 மில்லியன் ரூபாவிலிருந்து 603 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. வளர்ச்சிக்கான பிராதன பங்களிப்பு காரணியாக பங்கிலாபத்திலிருந்தான வருவாய் இருக்கின்றவிடத்து, வட்டியற்ற வருமானம் முக்கியமான வளர்ச்சியுடன் 2011 ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 5 மில்லியன் ரூபாவிலிருந்து 13.5 மில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டிருந்தது. நிதி ஆண்டு காலப்பகுதியில், முழுமையான ஏற்பாடுகள் செய்யபட்டுள்ள நட்ட வகைப்பாட்டிற்குள் இருந்த பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயற்படாத முற்பணங்களாக 137.6 மில்லியன் ரூபாவை அறவிட முடிந்தது. புதிய இலங்கை நிதி நியமங்களுடன் இணங்கும் நோக்கில், கைவரப்பெற்றிராத முதலீட்டு பிணைப் பொறுப்புக்களின் நட்டம் 41 மில்லியன் அளவாக ஏனைய பரந்த வருமானத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நட்டம், நிதிக் கூற்றில் கருத்தியல் கணக்குப் பதிவாக மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும் என்பதுடன், கம்பனியின் பண ஓட்ட நிலைக்கு தாக்கமேதுமில்லை.
கடன் நட்ட ஏற்பாடுகள் மற்றும் இலாபத்தின் மீதான நிதிச் சேவை பெறுமதி சேர் வரியின்றி வங்கியின் தொழிற்பாட்டுச் செலவினம் 20% இனால் அதிகரித்துள்ளது. அதிகரித்துள்ள தொழில் அனுகூலங்கள் மற்றும் ஏனைய மேற்செலவுகளின் அதிகரிப்பிற்கான பிரதான காரணியாகும். வைப்பாளர்கள், கடனிடுநர்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து அதிகரிப்பினைக் கொண்டிருக்கின்ற 136.2 மில்லியன் ரூபா தொகையாகும். இது, பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி வைப்பாளர்களுக்கு மீட்பு வைப்புக்களின் விளைவாக குறைவடைந்த வைப்பின் அடிப்படையுடன் தொடர்புபட முடியும்.

புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர்கள் மற்றும் உயர் பதவியினரின் வேதன அளவுத்திட்டத்திற்கு 2012 சனவரியிலிருந்து வலுப்பெறும் வகையில் செய்யப்பட்ட ஏற்பாடுகள்,தனிநபர் செலவு 41.07 மில்லியன் ரூபா தொகையாக 17% அதிகரிப்பை விளை வாக்கியுள்ளது. வளாகங்கள், உபகரணம் மற்றும் நிருவாகச் செலவினங்கள் முகாமைத் துவத்தினால் கைக்கொள்ளப்பட்ட பயனுறுதி வாய்ந்த செலவுக் குறைப்பின் விளைவாக 9.8% குறைவினை ஏற்படுத்தி 47.4 மில்லியன் ரூபாவாக வந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சுற்றிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் ஒருங்கிசைவுடன் கடன் நட்டங்களுக்காக வங்கியினால் மேற் கொள்ளப்பட்ட திரட்டிய ஒதுக்கம் 1,255 மில்லியன் ரூபாவாகும்.

வங்கியின் 2012 ஆம் ஆண்டுக்கான செலவு வருமான வீதம், 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 0.33 இலிருந்து 0.24 ஆக முன்னேற்றமடைந்திருந்தது.

வரிக்கு முன்னரான இலாபத்தில் மற்றும் சராசரி சொத்துக்களின் வியக்கத்தகு வளர்ச்சி காரணமாக 2012 இல் ROA 7.5% அதிகரித்துள்ளது.

### வைப்புக்கள்

ஆண்டுக்கான வைப்புக்கள் மொத்தப் பொறுப்புகளின் 12% இனைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இது, 488 மில்லியன் ரூபா பெறுமதியானது என்பதுடன், வைப்பாளர்களின் வைப்புப் பொறுப்புக்களைத் தீர்த்ததன் காரணமாக 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடு மிடத்து 11% வீழ்ச்சியடைந்துள்ளது. எனினும், புதிய வாடிக்கையாளரிடமிருந்து இயங்குகின்ற வைப்புக்கள் 2011 ஆம் ஆண்டில் 249.2 மில்லியன் ரூபாவிலிருந்து 2012 ஆம் ஆண்டில் 295.5 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. கால வைப்புக்கள், புதிய வைப்புக்களில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்குதாரராக இருந்திருந்தன. எளிது படுத்துதல் என்பதை மட்டுமே கவனத்தில் கொள்ளாது சிற்றின நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் அங்கத்தவர்களின் வங்கித் தேவைகளை வழங்குவதில் முன்னுரிமை வழங்குவதற்கு ஆண்டு காலப்பகுதியில் இலங்கை சேமிப்பு வங்கி முயற்சி




செய்துள்ளது.மேலுள்ளவற்றின் அடிப்படையில், சிற்றின நிதி நிறுவனங்களுடன் பங்குதாரரா வதற்கு நட்புரீதியான ஒரு தொடர் வாடிக்கை யாளர் வைப்புக்களை ஆரம்பிப்பதற்கு வங்கி ஆரம்ப முயற்சிகளை எடுத்துள்ளது.

### கடன்பெறுதல்

கடன்பெறுதல் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் 1,536.7 மில்லியன் ரூபா தொகையாகும். இலங்கை சேமிப்பு வங்கியுடன் 2010 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (NDTF) , பல்வேறு சர்வதேச நிதியிடல் முகவர் களிடமிருந்து 75.2 மில்லியன் ரூபாவினை கடனாகப் பெற்றிருந்தது. இது, சிற்றின நிதி நிறுவனங்களின் அங்கத்தவர்களின் வருமானத்தை உருவாக்குகின்ற செயற்பாடு களை மேம்படுத்துவதற்கு அவற்றிற்கு (பங்குதாரரர் அமைப்புகள்) கடனாக வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதி நிதி ஆவணங்களின் வழியாக முதலீட்டாளர்களிடமிருந்தான PSDB கடன் பெறுகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றது. இந்தக் கடன் பெறுகைகளைத் தீர்ப்பது, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வகுத்தமைக்கப்பட்ட பொறுப்புக்களைத் தீர்க்கும் திட்டத்தின் நியதிகளின்படி செய்யப்படுகின்றது.

### வரையறுக்கப்பட்ட மூலதனம்

பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் மூலதன அடிப்படை உரித்தளித் ததனைத் தொடர்ந்து 2,141 மில்லியன் ரூபா எதிர்மறையான நிகர மதிப்பின் விளைவாக தேவைப்படுத்தப் பட்டிருந்தது. அன்றேல்,

அரசாங்க நிறுவனங் களினாலான பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி வைப்புக்களின் மூலதனம், NDTF உடனான இணைப்பு, கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து வைத்திருக்கின்ற வருமானங்கள், இலங்கை மத்திய வங்கியினால் குறிப்பிடப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்று கின்றன. சந்தர்ப்பவசமாக, வங்கியின் கடன் சொத்துக்கள், திரவச் சொத்துக்கள் அதனது சொத்துக்களை மாற்றியமைத்து குறிப்பிடத்தக் களவு அதிகரித்துள்ளது.

வங்கியின் மொத்தத் தேறுமதி, 2011 ஆம் ஆண்டில் 2,845 மில்லியன் ரூபாவாக இருந்து 2012 ஆம் அண்டில் 3,373 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதுடன், மொத்தச் சொத்துக்களின் 46% இனைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.




### சொத்துக்கள்

வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் 7,385.1 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், இந்த ஆண்டு காலப் பகுதியில் சொத்து அடிப்படை 9% இனால் வளர்ச்சியடைந்துள்ளது. வங்கிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணை களில் வைக்கப்பட்டிருக்கின்ற திரவச் சொத்துக்கள் மொத்தச் சொத்துக்களின் 45.6% இனை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

### கடன்கள் மற்றும் முற்பணங்கள்

வாடிக்கையாளர்களுக்கான தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் வங்கியின் மொத்த சொத்துக்களின் 33% இனைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்றன. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2,528.6 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் 1,272.9 மில்லியன் ரூபாவாக இருந்தது.

வங்கியின் இலக்குச் சந்தை, பிரதானமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி களாகும். NDTF உடன் இணைக்கப்பட்டதன் பின்னர், நாளாந்த உயர் வாழ்விலிருந்து சீர்ப்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்திற்கு உரியவையான சிறந்த வருமானம், சுகாதாரம், போஷாக்கு மற்றும் சிறுவர் கல்வியுடன் திட்டமிடப்பட்ட நிலையான எதிர்காலத்திற்கு முன்னேறுவதற்கு வறுமைக் குட்பட்ட குடும்பங்களை சிற்றின கொடு கடன்கள் இயலச்செய்யும் என்ற காரணத் தினால் சிற்றின நிதித் துறைகளுக்கு எமது கடன்களை வழங்குவதில் கவனம் செலுத்து வதற்கு முயற்சி எடுத்திருந்தோம். ஆகவே, சிற்றின நிதி நிறுவனங்களினூடாக கொடு கடன் ஏற்பாடுகளை நாம் நிலையாக தொடர்ந்துள்ளோம்.

இந்த ஆண்டு காலப்பகுதியில், 41 சிற்றின மட்ட நிறுவனங்கள் எமது சிற்றின நிதிப் பட்டியலுடன் இணைந்துகொண்டமையுடன் செயற்படும் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 279 ஆக அதிகரித்திருந்தது. வங்கியானது, இந்த நிறுவனங்களுக்கு 848.4 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. எமது சேவை நாடுநர்களில் பெரும்பான்மையானோர் மேல் மாகாணத்திற்கு வெளியே பகுதி யளவான நகரம் மற்றும் கிராமப் பிரதேசங் களிலிருந்து சிற்றின தொழில்முயற்சியாளர் களை உள்ளடக்கியிருக்கின்ற சிற்றின நிதி அலகினை அடிப்படையாகக் கொண்டிருப்பது கவனத்திற்குரியது.

சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு பயனுறுதிவாய்ந்த முறையில் உதவும் நோக்கில் ஆய்வாண்டு காலப்பகுதியில் குத்தகை மற்றும் வர்த்தக கொடுகடன் வசதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### அறவீடுகளும் செயற்படாத கடன்களும்

செயற்படாத முற்பணங்களின் மொத்தப் பெறுமதி 2012 ஆம் ஆண்டின் இறுதியில் 1,259 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், இந்த முற்பணங்களுக்கான திரண்ட ஒதுக்கீடுகள் 1,255.8 மில்லியன் ரூபாவாக

இருந்தது. கடன் நட்ட ஏற்பாட்டினைச் சீராக்கியதன் பின்னர் (தேறிய NPL விகிதம்) செயற்படாத முற்பணங்களின் விகிதமாக மேவுகின்ற ஏற்பாடு 99.7% அளவாகியுள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

**பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் பங்குதாரர்களின் பொறுப்புக் களைத் தீர்த்தல்**

தோல்வியுற்ற பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் தொழில் உரித்தளிக் கப்பட்ட நேரத்தில் பற்றாக்குறையான பொறுப்புகளைத் தீர்ப்பதில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வகுத்தமைக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பணி இலக்கு வங்கிக்கு ஒப்படைக் கப்பட்டுள்ளது. வைப்பாளர்கள் மற்றும் கடன் கொடுநர்களின் கோரல்களை எளிதுபடுத்தும் செயன்முறை வங்கியின் விசேட பணி இலக்காக நடைபெறுவதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவு-செய்வதற்கு எதிர்பார்-க்கப்படுகின்றது. கடந்த 4 ஆண்டு காலப்ப-குதியில் தீர்க்கப்பட்ட மொத்தப் பொறுப்-புக்கள் 1,021 மில்லியன் ரூபாவாகும்.

**மனித வள அபிவிருத்தி**



நிதி, திட்டமிடல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்திற்காக இரண்டு சிரேஷ்ட முகாமை யாளர்கள் இணைக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் இறுதியில் பதவியினரின் எண்ணிக்கை 49 ஆக இருந்திருந்தது.

மேலும், வங்கி பயிலுநர் வங்கி உதவியாளர் களை ஆட்சேர்ப்புச் செய்திருந்ததுடன், மொத்தப் பதவியினரின் எண்ணிக்கை 72 ஆக அதிகரித்திருந்தது. பதவியினரே வங்கியின் எதிர்காலம் என்பதை நாம் நம்புவதுடன், திறன்களை விருத்தி செய்வதற்கான முக்கியத்துவத்தை நாம் இனங்கண்டுள்ளோம். ஆகவே, அலுவலகத்திற்குள்ளும் அதே போன்று வெளிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் பயிற்சி, விருத்தி என்பவற்றின் மூலம் மனித மூலதனத்தில் முதலிடுவதில் நாம் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளோம்.

**தொகுப்பு**

வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குதல் மற்றும் அனைத்து அக்கறை தாரர்களினது அபிலாசைகளை நிறை வேற்றுதல் வங்கியின் பிரதான பொறுப்பாக இருக்கும். எனக்கும், எனது பதவியினருக்கும் வழங்கியிருந்த ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பிற்காக தவிசாளர், தொழிற்படும் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது வாடிக்கையாளர்களின் பற்றுக்கும், வங்கியின் வெற்றிக்கான எனது பதவியினரின் அர்ப்பணிப்பிற்கும், ஈடுபாட்டிற்குமாக அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக, வங்கித் தொழிலை நடத்து வதற்கும், கையாளுவதற்குமான வழி காட்டலுக்காக நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களுக்கும் எனது மனமுவர் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



**ஆதிரயன் வீரசேக**
**பொது முகாமையாளர் / பி.நி.அ**

# பணிப்பாளர்கள் சபை



**திரு. ஆரியதிலக தஹநாயக**

*B.A.(Sri Lanka), L.L.B.(Sri Lanka), Attorney-at-Law, N.P., J.P, Commissioner-for Oaths*

திரு.ஆரியதிலக தஹநாயக அவர்கள், 2006 யூலை 07 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர், 2007 யூலை 04 ஆம் திகதியிலிருந்து தவிசாளராக நியமிக்கப் பட்டிருந்தார். இவர் 2010 மே 07 ஆம் திகதி சபையிலிருந்து இராஜினாமாச் செய்வதாக சமாப்பித்திருந்ததுடன், 2010 மே 10 ஆம் திகதியிலிருந்து தவிசாளராக மீள நியமிக்கப்பட்டிருந்தார். இன்று வரை இவர் தவிசாளராக சேவையாற்றுகின்றார். திரு.ஆரியதிலக தஹநாயக அவர்கள், பெலியத்த பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினதும், அம்பாந்தோட்டை மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கியினதும் தவிசாளருமாவார். இவர், கூட்டுறவு காப்புறுதிக் கம்பனி லிமிடெட் மற்றும் இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கிகள் சமாஜம் லிமிடெட்டின் பணிப்பாளருமாவார். திரு.ஆரியதிலக தஹநாயக சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாவார். இவர், தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைப்பதற்கு தீர்மானத்தைத் தொடர்ந்து 2010 செப்ரெம்பர் 06 ஆம் திகதி உத்தரவாதக் கம்பனியான தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபைக்கும் (NDTF) நியமிக்கப்பட்டிருந்தார்.



**திரு.கோசல ரத்னவீர**

*Attorney-at-Law, N.P, J P, U M, Former Director, Fisheries Corporation*

திரு.கோசல ரத்னவீர திறைசேரியின் செயலாளரினால் 2010 மே 24 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார் என்பதுடன், இந்தத் திகதியிலிருந்து பணிப்பாளராக சபையில் சேவையாற்றுகின்றார். இவர், இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக்கான குழும சட்டத்தரணியுமாவார். திரு.கோசல ரத்னவீர சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாக செயற்படுகின்றார்.



**திரு.உடுவகே டொன் சுமித் பராகிரம பெரேரா**

*Attorney-at-Law, N.P*

திரு. உடுவகே டொன் சுமித் பராகிரம பெரேரா அவர்கள், 2010 யூன் 30 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர், தென்னை பயிரிடுதல் சபை (2000-2002),லங்கா மின்சாரக் கம்பனி (2006-2010), லிகோ கருத்திட்ட (பிறைவேட்) லிமிடெட் (2008-2010) மற்றும் அன்ரி லிகோ (பிறைவேட்) லிமிடெட் (2008-2010) ஆகியவற்றின் சபைகளிலும் இருந்துள்ளார். திரு. உடுவகே டொன் சுமித் பராகிரம பெரேரா அவர்கள், சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாக செயற்படுகின்றார்.



**திரு.திலக் வன்னிகம**

*B.Sc. (Mgt) Special, M .Sc (T&CP), Attorney-at –Law, N.P, J.P, Commissioner for Oaths*

திரு.திலக் வன்னிகம அவர்கள், 2007 யூலை 04 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர் 2010 மே 07 ஆம் திகதி சபையிலிருந்து இராஜினாமாச் செய்வதாக சமாப்பித்திருந்ததுடன், 2010 யூலை 16 ஆம் திகதி பணிப்பாளராக மீள நியமிக்கப்பட்டிருந்தார். திரு.திலக் வன்னிகம அவர்கள் இலங்கை கிரமிய வங்கி கூட்டுறவு சம்மேளனத்தின் நிதி முகாமைத்துவ ஆலோசகர் என்பதுடன், கூட்டுறவு குத்தகைக் கம்பனி லிமிடெட்டின் சட்ட ஆலோசகருமாவார், திரு.திலக் வன்னிகம அவர்கள் சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாக செயற்படுகின்றார். இவர், தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைப்பதற்கான தீர்மானத்தைத் தொடர்ந்து 2010 செப்ரெம்பர் 06 ஆம் திகதி உத்தரவாதக் கம்பனியான தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபைக்கும் (NDTF) நியமிக்கப்பட்டிருந்தார்.



**திரு.பிரியங்க அல்கம**

*Master's in Business Administration -Nanyang Technology University-Singapore and MIT Boston USA, Associate member (ASA) CPA Australia (2009-2011).*

திரு.பிரியங்க அல்கம அவர்கள், 2012 ஒக்டோபர் 08 ஆம் திகதி திறைசேரியின் செயலாளரினால் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர், பொது நிதித் திணைக்களத்தின் மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் அதிபதியுமாவார். திரு.பிரியங்க அல்கம அவர்கள், சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாக செயற்படுகின்றார். இவர், தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக/பணிப்பாளராகவும் (2000-2007), பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் (2012) மற்றும் கியுன்ஸ்லாண்ட் அரசாங்கத்தின் பங்கீட்டுச் சேவைகளின் சிரேஷ்ட நிதி அலுவலராகவும் சேவையாற்றியுள்ளார்.



**திரு.இந்திகவெல கமகே பாலித**

*B Com (Special)*

திரு.பாலித கமகே அவர்கள் 2007 யூலை 02 ஆம் திகதியிலிருந்து வலுவிற்குவரும் வகையில் நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர் 2010 மே 07 ஆம் திகதி தனது இராஜினாமாவைச் சமாப்பித்திருந்ததுடன், 2010 யூலை 15 ஆம் திகதியிலிருந்து மீள நியமிக்கப்பட்டிருந்தார். ஆந்தத் திகதியிலிருந்து சபையில் சேவையாற்றியுள்ளார். திரு.பாலித கமகே அவர்கள் பிரமுக வைப்பாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் மன்றத்தின் தலைவர் என்பதுடன், பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வைப்பாளர்கள் மற்றும் கடன்கொடுநர்களின் அக்கறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். திரு.பாலித கமகே அவர்கள் சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைப்பதற்கான தீர்மானத்தைத் தொடர்ந்து 2010 செப்ரெம்பர் 06 ஆம் திகதி உத்தரவாதக் கம்பனியான தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபைக்கும் (NDTF) நியமிக்கப்பட்டிருந்தார்.



**திரு.சனத் வீரதுங்க**

திரு.சனத் வீரதுங்க அவர்கள், பி.நி.அலுவலராக 2008 மார்ச் 10 ஆம் திகதியிலிருந்து 2011 ஏப்பிரல் 25 ஆம் திகதி வரை வங்கி ஆரம்பித்திலிருந்து வங்கியின் பொது முகாமையாளராக இருந்துள்ளார். அதன் பின்னர் நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரி செயலாளரினால் தொழிற்படும் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். திரு.சனத் வீரதுங்க அவர்கள் மக்கள் வங்கியில் 1972 இலிருந்து 2006 வரையான முப்பது வருட (30) நீண்ட காலம் சேவை யாற்றியுள்ளார். திரு.சனத் வீரதுங்க அவர்கள், இலங்கை சேமிப்பு வங்கியின் சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாக சேவையாற்றுகின்றார். இவர் தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சபைக்கு (NDTF) பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.



**திரு.உறகொட விஜித பெரேரா** - (22.2.2011 இலிருந்து 14.09.2012 வரை சேவையாற்றியுள்ளார்)

*B Sc.(Business Admn.), Chartered Licentiate*

திரு.உறகொட விஜித பெரேரா அவர்கள் 2011 பெப்ரவரி 22 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப் பட்டிருந்தார். இவர், நிதி, திட்டமிடல் அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராவர். இவரது நியமனத்தின் போது இலங்கை மத்திய வங்கியிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்தார். திரு.உறகொட விஜித பெரேரா அவர்கள் சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாவார். இவர் மத்திய வங்கிக்கு மீண்டும் மாற்றப்பட்டமையால் 2012 செப்ரெம்பர் 14 ஆம் திகதி தனது இராஜினாவை சமர்ப்பித்திருந்தார்.

**திரு.டிலுஸ் அபேயசூரிய** – (16.5.2012 இலிருந்து 2.11.2012 வரை சபையில் சேவையாற்றியுள்ளார்)

*B.Sc. Business Admin (Special) Hon., Chartered Accountant (FCA) Institute of Chartered Accountants*

திரு.டிலுஸ் அபேயசூரிய 2012 மே 16 ஆம் திகதி சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர் தபால் திணைக்களத்திலிருந்து பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இவர், சுயாதீனமற்ற, நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளராக 6 மாத காலப்பகுதி சேவையாற்றியிருந்தார். இவர் தபால் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டபோது 2012 நவம்பர் 02 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபை யிலிருந்து விலகுவதாக தனது இராஜினாவைச் சமர்ப்பித்திருந்தார். திரு.டிலுஸ் அபேய்சூரிய இலங்கை அரசாங்க கணக்காளர் சேவையின் அங்கத்தவருமாவார்.



**திரு.முதுபண்டகே கமல் பண்டார திஸ்ஸநாயக -** (4.8.2010 இலிருந்து 15.3.2012 வரை சபையில் சேவையாற்றியுள்ளார்)
*BA Special (Economics), Certificate in Public Administration, Postgraduate Diploma in Management*

திரு.முதுபண்டகே கமல் பண்டார திஸ்ஸநாயக அவர்கள் 2010 ஓகஸ்ட் 04 ஆம் திகதியிலிருந்து 2012 மார்ச் 15 ஆம் திகதி வரை திறைசேரியின் செயலாளரினால் வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இவர் சபைக்கு நியமிக்கப்படும் தருணத்தில் தபால் திணைக்களத்தின் தபால் அதிபர் அதிபதியாக இருந்திருந்தார். இவர் 27 வருடங்கள் நிருவாக சேவையில் சேவையாற்றியுள்ளார். திரு.முதுபண்டகே கமல் பண்டார திஸ்ஸநாயக தபால் திணைக்களத்தினால் சுயாதீனமற்ற, நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளருமாக நியமிக்கப்பட்டிருந்தார். இவர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டமையால் திறைசேரியின் செயலாளரினால் 2012 மார்ச் 15 ஆம் திகதி திரு.எம்.கே.பி.திஸ்ஸநாயக அவர்களின் நியமனம் மீளப்பெறப்பட்டது.



**Not in Picture:**
Mr. Dilus Abeysuriya, Mr. Uragodage Vijitha Perera, Mr. Muthubandage Kamal Bandara Dissanayake, Mr. Uduwage Don Sumith Parakrama Perera,

# கூட்டு முகாமைத்துவம்



**திரு.ஹேமபிரிய ஜோசவ் ஆதிரயன் வீரசேகர**
*MBA (Sri Jay), AIB.*
***பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அலுவலர்***

திரு.ஆதிரயன் வீரசேகர அவர்கள் 2012 சனவரி 17 ஆம் திகதி வங்கியின் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலராக பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப் பட்டிருந்தார். உள்நாட்டு, சர்வதேச கொமர்ஷல் வங்கிகளில் இருபது ஆண்டுகளுக்கும் அதிகமான வங்கித் தொழிற் றுறையின் வளமான அறிவுடன் வந்திருந்தார். இவர், கூட்டு கொடுகடன், கொடுகடன் மீளாய்வு, கூட்டு சேவைகள், வங்கித் தொழிற்பாடுகள், தர உறுதிப்பாடு, நிதி மற்றும் இடர் முகாமைத்துவத்தில் பரந்த அனுபவத்தினைக் கொண்டிருக் கின்றார்.



**திரு.கமகே சமரசிறி பெரேரா**
*B.Sc, AIB, Diploma in Bank Management*
***உதவிப் பொது முகாமையாளர்***

திரு.ஜி.எஸ்.பெரெரா 2007 ஓகஸ்ட் 01 ஆம் திகதி மீளப்பெறுகைகள் சிரேஷ்ட முகாமையாளராக இலங்கை சேமிப்பு வங்கியில் இணைந்திருந்ததுடன், 2011 மே 01 ஆம் திகதியிலிருந்து வலுவிற்குவரும் வகையில் உதவிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தா. இவர் தனது தொழிலை இலங்கை வங்கியில் ஆரம்பித்திருந்ததுடன், பத்து வருடங்கள் சேவையாற்றியுமிருந்தார். அதன் பின்னர், சிரேஷ்ட உதவிப் பணிப்பாளராக பதின் மூன்று ஆண்டுகள் சேவை யாற்றியிருந்த இலங்கை மத்திய வங்கிக்குச் சென்றிருந்தார்.



**டபிள்யு.ஏ.எஸ்.விஜயசிங்க**
*ACA, BBA Finance*

சிரேஷ்ட
முகாமையாளர்
நிதி, திட டமிடல்



**திரு.கே.கீரவெல**
*B. Com (Sri J), Intermediate (CASL), Diploma – Credit Mgt (IBSL), Diploma – Credit & Risk Mgt (IBSL)*
சிரேஷ்ட முகாமையாளர்
கொடுகடன்



**திரு.ஜி.எம்.எஸ்.என்.கே.எம். குணசிங்க** *B. ScBusi Admin (Sri J), Licentiate (CASL), DBF (IBSL)*
சிரேஷ்ட முகாமையாளர்
தொழிற்பாடுகள்/
இணக்கப்பாட்டு அலுவலர்



**திரு.ஜி.ஐ.ஆர்.விதானகே**
*MBCS*
சிரேஷ்ட
முகாமையாளர் தகவல்
தொழில்நுட்பம்



**திருவதி.எச்.வீரசேகர**
*MBA (Sri J), ACIS (UK)*
சிரேஷ்ட முகாமையாளர்
மனித வளத் துறை &
தாபனம்



**திருவதி.வை.எம்.ஜே.பெர்னாந்து**
*Attorney-at-Law, Notary Public, Commissioner of Oaths, LLB (Colombo)*
கம்பனி செயலாளர்/
முகாமையாளர் –
சட்டம்



**திரு.கே.ஏ.என்.றசிகபிரிய**
*B. Com,*
*Professional Part I (CASL)*
முகாமையாளர் –
அகக் கணக்காய்வு



**திருவதி.டி.என்.சேனாதீர**
*Attorney-at-Law, Notary Public*
முகாமையாளர் –
சட்டம்



# கூட்டுச் சமூகப் பொறுப்பு

இலங்கை சேமிப்பு வங்கி எதிர்மறையான தேறிய மொத்தத்துடனேயே 2007 ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப் பட்டிருந்ததென்பது இரகசியமானதொன்றல்ல. அன்றேல், குறைவாக அனுகூலமடைந தவர்களிடையே வறுமையைக் குறைக்கையில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்ற பரந்த செயற்பரப்புடன் கூடிய ஏனைய நிதி நிறுவனங்களுக்கு முன்னுதாரணமாக வருவதற்கு முடிந்திருக்குமென்பதைக் கூறுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது வங்கி இலட்சனையில் பதிக்கப்பெற்ற " ஜனஹடின் ஜனித" என்ற கருப்பொருளுடன் எமது கூட்டு சமூகப் பொறுப்பை நாம் ஆரம்பித்துள்ளோம்.

இந்த பரந்த செயற்பரப்பெல்லையின் கீழ், வங்கி, முழுமையாக நன்கொடைகளில் நம்பியிருப்பதிலும் பார்க்க சிற்றின நிதிச் செயற்பாடுகளினூடான வறுமை ஒழிப்பின் மீது கவனம் செலுத்துகின்றது. வெறுமனே நன்கொடையென்பது, மக்கள் அவர்களது சொந்த முயற்சிகளினூடாக சம்பாதிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கமாட்டார் களாகையால் அவர்களது எதிர்கால அபிவிருத்திக்கான அவர்களின் தனித்த முயற்சியை மறைக்கச் செய்கின்றது. அபிவிருத்தியடைந்த நாட்டினை நோக்கிச் செல்கின்ற பாதையில் நாட்டின் மொத்த ஜி.டி.பீ யில் பெறுமதி சேர்க்கின்ற சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களை வலுப் படுத்துவதன் மீது நாம் கவனத்தைச் செலுத்துகின்றோம்.

இலங்கை சேமிப்பு வங்கியானது, ஒவ்வொரு ஆண்டும் விருத்தியடையாத பாடசாலையொன்றினைத் தெரிவுசெய்து, அவர்களது கல்வி வசதிகளை விருத்தி செய்யும் நோக்கில் தேவைப்பட்ட நிதியினை வழங்குவதனை நடைமுறையில் கொண்டிருக் கின்றது. மேலும், நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் பெற்றோர் களின் நிதி நிலைப்பினை விருத்தி செய்வதன் மீது கவனம் செலுத்தப்படுகின்றது.

வங்கியின் முதலாவது CSR கருத்திட்டம், "கோரைம்பறகம" என்றழைக் கப்படும் கிராமப்புற கிராமமொன்றில் அக் கிராம மக்களின் மீதும், இணைந்த ஆரம்ப பாடசாலை மீதும் கவனம் செலுத்தி 2009 இல் நடத்தப்பட்டது. கோரைம்பறகம, தங்காலை தேர்தல் பிரிவில், அங்குனகொல பெலள மாகாண செயலகப் பிரிவில் அமைந்துள்ளது. இந்தக் கருத்திட்டம், முதலாவது கட்டத்தில் "கமி சிசு நகும" என்று பெயரிடப்பட்டுள்ளதுடன், அந்த கிராமத்திலிருக்கின்ற சிறுவர்களின் கல்வி மட்டம் விருத்திசெய்கையில் அந்த கிராமத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மீது கவனம் செலுத்தப் பட்டிருந்தது. வங்கியானது, பாடசாலையின் 4 ஏக்கர் வெற்று நிலத்தில் பழச் செய்கையை (வாழைப்பம், பப்பாசிப் பழம் போன்றவை) ஆரம்பித்திருந்ததுடன், அதனால் உருவாக்கப் பட்ட வருமானத்தை மாணவர்களின் கல்வி வசதிகளை உயர்த்துவதற்காகப் பயன் படுத்தியிருந்தது.

வங்கியானது, பொருளாதார அபிவிருத்தி அமைச்சினதும், அங்குணாகொல பெலேஸ்ச மாகாணச் செயலாகத்தின் உதவியுடன் தொடர்ந்தேர்ச்சியாக கிராமத் திற்கும், கிராமத்தவர்களுக்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவி யிருந்தது. கிராமத்தவர்களது பயிரிடுதலில் அதிகளவில் உதவியாக இருக்கின்ற நீர்த் தேக்கங்கள் இரண்டினை நாம் புதுப்பித் திருந்தோம். இலங்கை செமிப்பு வங்கியாக நாம், கத்தடுவ சந்தியிலிருந்து கோரைம் பறகம ஆரம்பப் பாடசாலைக் குறுக்காக வருகின்ற சுமார் மூன்று கிலோமீற்றர் தூர வீதியினை சீமெந்து திண்ம வீதியாக நிருமாணித்திருந்தோம். இது கிராமத் தவர்களுக்கு இலங்கை சேமிப்பு வங்கியின் ஞாபகார்த்த நிகழ்வாக இருந்தது. இச்செயற்பாடுகளின் வெற்றிகரமான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பின் இரண்டு வருடங்களின் பின்னர், வங்கியானது "கிமி சிசு நகும நய சமித்திய" (வங்கியின் "கமி சிசு நகும I" இற்குப் பின்னர் அரம்பிக்கப்பட்டது) என்றழைக்கப்பட்ட கிராமத்



திலிருக்கின்ற நலன்புரிச் சங்கமொன்றிற்கு வங்கி அனைத்துப் பொறுப்புக்களையும், கடமைகளையும் குறித்தொதுக்கியிருந்தது.

“கமி சிசு நகும” என்பதன் இரண்டாவது கட்டம் 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் “தெடியகல ஆரம்ப பாடசாலை” மீதும், அக்குரச தேர்தல் பிரிவிற்குள் வருகின்ற பாடசாலையுடன் இணைந்த கிராமங்கள் மீதும் அவதானம் செலுத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த குறித்த பாடசாலை மற்றும் கிராமங்கள், புனர்நிருமாணம், சிறைச்சாலை சீர்திருத்தங்கள் அமைச்சர் கௌரவ சந்திரசிறி கஜதீர அவர்களினால் கொண்டுவரப்பட்ட “சுற்றுலா கிராமம்” ஒன்றினை விருத்திசெய்யும் எண்ணக்கருவிற்கு ஆதரவளிக்கும் நோக்கில் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. இந்த அமைச்சர் (புனர்நிருமாணம், சிறைச்சாலை சீர்திருத்தங்கள் அமைச்சர் கௌரவ சந்திரசிறி கஜதீர) குறைந்தளவு அனுகூலமடைந்தோரினது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் வறுமையைக் குறைத்தல் என்பவற்றில் எப்போது ஆர்வமாக இருந்தார்.

இதன்படி, “கிமி சிசு நெகும” இரண்டாவது கட்டம், முதலாவது தேயிலைச் செடியை நாட்டுவதன் மூலம் 2012 பெப்ரவரி 25 ஆம் திகதி (இதே நாளில் சுற்றுலாக் கிராமத்தை அமைச்சர் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருந்தார்) ஆரம்பிக்கப்பட்டது. கௌரவ அமைச்சரினால் வேண்டப்பட்டதன் படி, “கிமி சிசு நெகும” முதலாவது கட்ட கருத்திட்டத்திலிருந்து சுமார் 1,500 இளம் வாழைக் குட்டிகளை நாம் சேகரித்திருந்ததுடன், அவற்றை கிராமத்தவர்களிடையே பகிர்ந்தளித்திருந்தோம். இந்த முயற்சி அவர்களை ஊக்குவித்திருந்தது. ஆரம்ப நிகழ்வில் உரையாற்றி கௌரவ அமைச்சர் தேசிய உணர்வுடன் அரச உடமையான சமூகப் பொறுப்புடைய வங்கியாக CSR கருத்திட்டத்தின் வெற்றியை கௌரவித்திருந்தார்.



தேயிலை வளர்ப்பானது, தெடியகல ஆரம்பப் பாடசாலைக்குச் சொந்தமான குடியிருப்பற்ற நிலப் பிரதேசத்தில் 30,000 ரூபா ஆரம்ப முதலீட்டுடன் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. தற்போது, இந்த வளர்ப்பானது, பயிரிடுகைக்குத் தயாரான 25,000 இளம் தேயிலைக் கன்றுகளாக வளர்ந்து பரந்துள்ளது. தேயிலை பறிப்பிலிருந்து மதிப்பிடப்பட்ட தேறிய வருமானம் 300,000 ரூபா என்பதுடன், தேறிய வருமானத்தை மே மாதம் இறுதியில் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவை மாணவர்களதும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசரியர்களது உதவியுடனான பாடசாலையையும், கல்வியையும் மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும்.

இலங்கை சேமிப்பு வங்கியானது, ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு மாற்றக் கூடிய வறுமையைக் குறைத்தல் என்ற எமது கருப்பொருளுக்கு ஆதரவளிக்கின்ற இந்தக் கருத்திட்டங்களினூடாக சமூக, தேசிய நலன்புரியினை வழங்குவதில் அனைத்து சாதகமான முயற்சிகளையும் எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

வறுமையானது, கல்வியறிவு இன்மைக்குக் காரணமாக வருகின்ற போது, மறுவகையில் கல்வியறிவின்மை வறுமைக்குக் காரணமாக வருகின்றது. நாம், சந்ததியிலிருந்து முழு சமூகத்திற்கும் கடத்தப்படுகின்ற இந்த வறுமை நச்சு வட்டத்தை முறியடித்து தொடர்ச்சியை இல்லாது செய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இதன் படி, அந்தக் கிராமத்திலிருக்கின்ற சிறுவர்களின் கல்விமட்டத்தை விருத்திசெய்கையில் பாடசாலை,கிராமம் மற்றும் கல்விக்கிடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதனூடாக மிகவும் விருத்தி செய்யப்பட்ட மட்டத்திற்கு விருத்தியடையாத அனைத்தையும் கொண்டுவருவது எமது தேசிய பொறுப்பு என்று வங்கி நம்புகின்றது. நாம், பயன்படுத்தாத 4 ஏக்கர் காணியில் பழ வகைகளை (வாழைப்பழம், பப்பாசி போன்றவை) பயிரிடப் பட்டுள்ளதுடன், பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் மாணவர்களின் கல்வி வசதிகளை உயர்த்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

# பணிப்பாளரின் அறிக்கை

இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டின் பணிப்பாளர்கள், 2012 டிசெம்பர் 31 அல் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் அவர்களின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப் பதில் மகழ்சியடைகின்றனர்.

**தொழில் பற்றிய மீள்கண்ணோட்டம்**

தவிசாளரின் செய்தி மற்றும் தொழிற்பாடுகள் பற்றி பொது முகாமையாளரின் / பிரதம நிறைவேற்று அலுவலரின் மீள்நோக்கு, 2012.12.31 இல் முடிவுற்ற நிதி ஆண்டு காலப்பகுதியில் இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டின் தொழிற்பாடுகள் மீதான விபரமான அறிக்கையொன்றினை வழங்கு கின்றது.இதற்கு மேலதிகமாக,பி.வீ.பொ்னாந்து & கம்பனி பட்டயக் கணக்காளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அவர்களின் தெளிவான காண்பிப்புகளை விபரிக்கின்றன.

**வங்கியின் சட்ட அந்தஸ்து**

வங்கியானது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மற்றும் 2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2006 யூலை 07 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந் ததுடன், N (NPS) 1336 ஆம் இலக்கத்தை பதிவு இலக்கமாகக் கொண்ட பொது கம்பனி யொன்றாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்கள் சபை**

இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டின் பணிப்பாளர்கள் சபை, 2012 நவம்பர் 2 ஆம் திகதி வரை எட்டு பணிப்பாளர்களைக் கொண்டிருந்ததுடன், பின்னர் ஆய்வாண்டு காலப்பகுதியில் 7 பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. வங்கியின் அமைப்பு அகவிதிகளுடன் இணங்கும் வகையில் பணிப்பாளர்கள் சபை முழுவதும் நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டது. சபையானது மாதத்திற்கொரு முறையேனும் கூடுவதுடன், 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12 தடவைகள் கூடியுள்ளது.

ஆய்வாண்டு காலப்பகுதியில் பின்றவருகின்ற பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

திரு.ஆரியதிலக தஹாநாயக (தவிசாளர்)

திரு.பிரியங்க அல்கம (திறைசேரி பிரதிநிதி)

திரு.திலக வன்னிகம

திரு.உடுவகே டொன் சுமித் பராகிரம பெரேரா

திரு.சனத் வீரதுங்க (தொழிற்படும் பணிப்பாளர்)

திரு.டிலுஸ் அபயசூரிய (நியமித்தது -16.5.2012 இராஜினாமா 2.11.2012)

திரு.உறகொட விஜித பெரேரா (நியமித்தது- 22.2.2011 இராஜினாமா - 14.09.2012)

திரு.எம்.கே.பி.திஸ்ஸநாயக - (நியமித்தது - 4.8.2010 இராஜினாமா - 15.3.2012)

| பெயர் | நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணி. | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணி. |
|---|---|---|
| திரு.ஆரியதிலக தஹாநாயக | 12 | 12 |
| திரு.பிரியங்க அல்கம (நியமித்தது *8.10.2012)* | 03 | 03 |
| திரு.கோசல இரத்னவீர | 12 | 10 |
| திரு.திலக வன்னிகம | 12 | 12 |
| திரு.உடுவகே டொன் சுமித் பராகிரம பெரேரா | 12 | 11 |
| திரு.இந்திகவெல கமகே பாலித | 12 | 12 |
| திரு.சனத் வீரதுங்க | 12 | 10 |
| திரு.டிலுஸ் அபயசூரிய (நியமித்தது *16.5.2012* இராஜினாமா *2.11.2012)* | 06 | 06 |
| திரு.உறகொட விஜித பெரேரா (இராஜினாமா *14.09.2012)* | 07 | 07 |
| திரு.எம்.கே.பி.திஸ்ஸநாயக (இராஜினாமா *15.3.2012)* | 02 | 02 |

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வம்**

"குறிப்பு 33" இல் நிதிக் கூற்றுக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு தவிர எந்த ஒப்பந்தத்திலும் அல்லது வங்கியுடன் முன்மொழியப்பட்ட எந்த ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணிப்பாளர்களுக்கு ஆர்வமில்லை.

**பணிப்பாளர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பினை பணிப்பாளர்கள் சபை எடுக்கின்றது. அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் உரிய கணக்குப் புத்தகத்தை வைத்திருக் கின்றது என்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் ஆண்டுக்கான அரச அலுவல்கள் மற்றும் இலாபம்/நட்டம் பற்றிய உண்மையான, நியாயமான தோற்றத்தை வழங்குகின்ற நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் என்பவற்றிற்கான பொறுப்பினை பணிப்பாளர்கள் சபை ஏற்கின்றது. மீளாய்கின்ற கிரமமான கூட்டங்கள், கணக்காய்வாளரின் சுதந்திரமான தொழிற்பாடு, மற்றும் கணக்காய்வுக் குழுவின் வழிகாட்டல், சபையின் அனைத்து அறிக்கைகள் அனைத்து அங்கத்தவர் களினாலும் மீளாயப்படுதல் என்பவற்றினூடாக நிதி அறிக்கையிடல் மீதான முகாமைத்துவப் பொறுப்பினை பணிப்பாளர்கள் சபை கண்காணிக்கின்றது.

**அகக் கட்டுப்பாட்டு முறைமைகள்**

பணிப்பாளர்கள் சபை, வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைக் கையாள்வதற்கும், இயலுமானவரையில் பதிவுகளின் நம்பகத்தன்மையை பாதுகாப் பதற்கும், சரியாந்தன்மையை உறுதிப்படுத்து வதற்குமாக ஒழுங்கான முறையில் வங்கியியல் செயற்பாடுகளை ஆற்றுவதற்குத் தேவைப்பட்டுள்ள நிதித் தொழிற்பாடுகள், இணக்கப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவத்தை உள்ளடக்கிய பயனுறுதி வாய்ந்த, பரந்த அகக் கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்குவதற்கு முயற்சித்துள்ளது.

**கூட்டாளுகை**

கூட்டாளுகை பின்பற்றப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கான முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இருக்கின்றன. இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள முக்கிய நடவடிக்கைகள் 23 ஆம் பக்கத்தில் கூட்டாளுகையின் கீழ் விபரிக்கப்படுகின்றன.

**கணக்காய்வுக் குழு**

பின்வருகின்ற சபையின் நிறைவேற்றதிகார மற்ற பணிப்பாளர் சபைக் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக சேவையாற்றி யுள்ளனர்.

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 65 ஆம் பக்கத்தில் தரப்படுகின்றது.

திரு.பிரியங்க அல்கம – தவிசாளர்

திரு.திலக் வணிகம – பணிப்பாளர்

திரு.கோசல இரத்னவீர – பணிப்பாளர்

திரு.விஜித பெரேரா மற்றும் திரு டிலஸ் அபயசூரிய ஆகியோர் முறையே 2012.09.14 மற்றும் 2012.11.02 ஆம் திகதிகளில் சபையிலிருந்து இராஜினாமாச் செய்வதற்கு முன்னர் கணக்காய்வுக் குழுவின் தவிசாளர் களாக சேவையாற்றியிருந்தனர்.

**தொலைநோக்கு, செயற்பணி மற்றும் கூட்டு நடத்தை**

வங்கியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவை 03 ஆம் பக்கத்தில் தரப்படுகின்றன. வங்கியின் வணிகச் செயற்படுகள், வங்கியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியினை அடையும் நோக்கில் உயர் மட்ட ஒழுக்க நியமங்களைப் பின்பற்றி நடத்தப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர்கள்**

ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பி.வி. பௌனாந்து கம்பனி பட்டயக் கணக்காய்வாளர் களினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்களை நியமிப்பதற்கு ஒப்புதலளித்தல் தொடர்பான தீர்மானமொன்று வருடாந்த பொதுக் கூட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ளது.

**பதவியினர்**

2012 டிசெம்பர் 31 அலுள்ளவாறு வங்கியினால் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அங்கத்தவர்கள் எழுபத்திரண்டு (72) ஆகும். இந்த எண்ணிக்கையின் உள்ளடக்கம் பின்வருமாறு:

| | |
|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | 5 |
| முகாமையாளர்கள் | 3 |
| கிளை முகாமையாளர்கள் | 2 |
| பிரதி முகாமையாளர்கள் | 3 |
| உதவி முகாமையாளர்கள் | 7 |
| கொடுகடன் அலுவலர்கள் | 3 |
| அறவீட்டு அலுவலர்கள் | 1 |
| சிரேஷ்ட வங்கி உதவியாளர்கள் | 5 |
| வங்கி உதவியாளர்கள் | 22 |
| சட்ட உதவியாளர்கள் | 1 |
| மொத்தம் | 52 |

மிகுதி செயலாளர்கள், சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களைக் கொண்டிருக்கின்றது.

**பிரதம நிறைவேற்று அலுவலர் (CEO)**

பொது முகாமையாளர் வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராவார் என்பதுடன், பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படு கின்றார். பொது முகாமையாளர் / பி.நி.அ அழைப்பின் பேரில் சபைக் கூட்டங்களுக்கு சமூகமளிக்கின்றார்.

**நிறுவனம் சார்பானது**

வங்கியானது தூரநோக்குள்ள எதிர்காலத்தில் தனது தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு போதுமானளவு வளங்களைக் கொண்டிருக் கின்றது என்பதில் பணிப்பாளர்கள் சபை திருப்தியடைகின்றது. இதன்படி, நிதிக் கூற்றுக்கள் நிறுவனத்தின் தொடர்ச்சியான எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

**நிதிக் கூற்றுக்கள்**

வங்கியின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனகத்துள்ள திருத்தங்கள் அத்துடன் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கும் வகையிலும் நிலையாக பிரயோகிக்கக்கூடிய வகையிலும், வங்கியின் தொடர்ச்சியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றபோது தேவையானவிடத்து நியாயமான, நுட்பமான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலாபம் மற்றும் ஒதுக்கீடுகள் (ஆயிரத்தில்)

| முடிவுற்ற ஆண்டு | 31.12.2011 (ரூபா) | 31.12.2012 (ரூபா) |
|---|---|---|
| வரிவிதிப்பிற்கு முன்னரான இலாபம் | 494மில். | 595 மில். |
| வரிவிதிப்பு | (57 மில்.) | (71) மில். |
| வரிவிதிப்பிற்கு பின்னரான இலாபம் | 437 மில். | 524 மில். |
| வைத்திருக்கப்படும் இலாபம் /(இழப்பு) முன்கொணர் நிலுவை | 1,025 மில். | 1,498 மில். |
| ஒதுக்கீட்டிற்காக இருக்கின்ற இலாபம் | 451 மில். | 524 மில். |
| ஒதுக்கிற்காக பின்வருகின்ற ஒதுக்கீடுகளை பணிப்பாளர்கள் ஆக்கியுள்ளனர் | (21 மில்.) | (67 மில்.) |
| வைத்திருக்கப்படும் இலாபம் பின்கொணர் நிலுவை | 1,498 மில் | 1,954 மில். |

**வருவாய்**

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற நிதி ஆண்டுக்கான வங்கியின் மொத்த வருமானம் 759.9 மில்லியன் ரூபாவாகும். வருமானப் பகுப்பாய்வு கணக்குகளில் “குறிப்பு 04” இல் வழங்கப்படுகின்றன.

**மூலதனச் செலவீனம்**

ஆண்டு காலப்பகுதியில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பெறுகை தொடர்பான மொத்தச் செலவினம் 8 மில்லியன் ரூபாவாகும். விபரங்கள் கணக்குகளில் “குறிப்பு 20” இல் காட்டப்படுகின்றன.

**நியதிச்சட்ட கொடுப்பனவுகள்**

அரசாங்கம் மற்றும் பணியாளர்கள் தொடர்பான அனைத்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் உரிய நேரத்திற்குச் செய்யப்பட்டுள்ளன என்று பணிப்பாளர்கள் தமது அறிவிற்கு எட்டியவரையில் நம்பு வதுடன், திருப்தியுமடைகின்றனர்.

**ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்**

ஐந்தொகை தினத்திலிருந்து கணக்குகளில் தேவைப்படுத்தப்படுகின்ற சீராக்கல் அல்லது வெளிப்படுத்தல் எதுவும் எழுந்திருக்கவில்லை.

சபையின் கட்டளையினால்,

வை.எம்.ஜே.பொன்நாந்து
சபையின் செயலாளர்
இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்

# கூட்டு ஆளுகை

கூட்டு ஆளுகை என்பது, கம்பனிகள் முகாமை செய்யப்படுகின்ற, கட்டுப்படுத்தப்படு கின்ற வழிமுறைகளாகும். அனைத்து கம்பனி களினாலும் சிறந்த கூட்டு ஆளுகைக் கோவையொன்றுடன் இணங்குவதானது அவர்களின் அபிவிருத்திக்கு அவசியமானது. கம்பனியின் உரிமையாளர்களான பங்கு தாரர்கள், அவர்கள் சார்பாக கம்பனியின் அலுவல்களை முகாமை செய்வதனைக் கண்காணிப்பதற்கு அவர்களினால் நியமிக் கப்படுகின்ற பணிப்பாளர்களில் தங்கியிருக் கின்றது. பணிப்பாளர்கள் சபை, கம்பனியின் நாளாந்த தொழிற்பாடுகளை நடத்துவதற்காக பங்குதாரர்களுக்குப் பொறுப்புடையவர்கள்.

கம்பனியின் குறிக்கோள், கம்பனியை இலாபத்துடன் கூடியதாக்குவதாகும்.

இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டானது, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், இலங்கை பிணைப்பொறுப்பு, நாணயமாற்று ஆணைக்குழு மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற அத்தகைய பல்வேறு ஒழுங்கு படுத்தும் அமைப்புக்களினால் பரிந்துரைக் கப்பட்ட கூட்டு ஆளுகை செய்முறைகளைக் கைக்கொள்வதற்கு தன்னார்வத்துடன் நடவடிக்கைகளை எடுக்கின்றது.

கூட்டு ஆளுகைக்கான பிரதான பொறுப்பு, சிறந்த கூட்டு ஆளுகையை உறுதிப்படுத்தும் நோக்கில் வங்கி பணியாளர்களிலிருந்து வங்கி வாடிக்கையாளர்கள் வரையான அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்புடன், பணிப்பாளர்கள் சபை மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் தங்கியிருக் கின்றது. ஆகவே, புதிய கூட்டு ஆளுகைச் செய்முறைகளை செம்மைப்படுத்துவதற்கும், கைக்கொள்வதற்கும் தொடருகின்ற வேளையில், பணிப்பாளர்கள் சபை மற்றும், பிரதம நிறைவேற்று அலுவலர் / பொது முகாமையாளர், சிறந்த ஆளுகையைக் கண்காணிப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் மற்றும் அதற்கான பல்வேறு சிறந்த தெரிவுச் செய்முறைகளைப் பரிந்துரைப்பதற்கும் சுயாதீனக் குழுக்களை நியமிப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

### சிறந்த கூட்டு ஆளுகையை நோக்கி

வங்கியானது, சிறந்த ஆளுகையை செம்மைப்படுத்தும் நோக்கில் கூட்டு ஆளுகைத் தொகுப்பினைக் கைக்கொண்டு ள்ளது. வங்கியானது, தனது ஆளுகை மிகவும் வெளிப்படையானதாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளதுடன், பின்வரு வனவற்றை விருத்தி செய்வதன், முன்னேற்று வதன் மூலம் இதற்கான அர்ப்பணிப்பினை நிரூபித்துள்ளது.

- முகாமைத்துவத்தினால் பொறுப்புக் கூறுதல், பதிலிறுத்தல் மற்றும் பெறுமதி அடிப்படையிலான செயலாற்றுகை ;
- வங்கியினதும், அதன் பங்குதாரர் களினதும் சிறந்த அக்கறையில் செயற் படுகின்ற நிறைவேற்றுத்தர அமைப்புக் களுன் கூடிய பயனுறுதிவாய்ந்த தொலை நோக்கு மற்றும் பங்குதாரர்களின் மதிப்பினைப் பொருத்தமான விதத்தில் அதிகரிப்பதனை நாடுதல்.

கூட்டு ஆளுகையென்பது, சிறந்த கௌரவத்தை கட்டியெழுப்புவதனை மேம் படுத்தக்கூடிய தொழிற்பாட்டு பயனுறுதி மற்றும் வினைத்திறன் மூலமான வழிவகை யாகும். சிறந்த ஆளுகை முறைமையென்பது, அது தொழிற்படுகின்ற சமூகத்திற்கு முக்கிய மான பங்களிப்பாளராகும். விசேடமாக, முழுமையாக அரசாங்க உடைமையான தொழில்முயற்சியான இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டைப் பெறுத்த வரையில் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர் காலத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது.

**இலங்கை பிணைப்பொறுப்பு, நாணயமாற்று ஆணைக்குழு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கூட்டு ஆளுகை மீதன சிறந்த நடைமுறைக் கோவையினை வங்கி கடைப்பிடித்தல்**

| விடயம் | கூட்டு ஆளுகைத் தத்துவங்கள் | SEC & ICASL இனால் வழங்கப்பட்ட சிறந்த செய்முறைத் தொகுப்பு தொடர்பானவை | இணங்குகின்ற மட்டம் |
|---|---|---|---|
| அ.பொது முகாமையாளர் பி.நி.அ மற்றும் தவிசாளர் | தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் பொது முகாமையாளர் ஒரே ஆளாக இருந்தால், நியமிக்கப்பட்ட தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் சிரேஷ்ட சுதந்திரப் பணிப்பாளரின் பெயரையும், பதவிகளை இணைப்பதற்கான தீர்மானத்தின் நியாயாத்தையும் வெளிப்படுத்துக. | A.2.1 & A.5.6 | தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் பொது முகாமையாளர் பதவிகள் வேறானவை என்பதுடன், இரு தனிநபர்களினால் வகிக்கப்படுகின்றன. அவர்களின் தொழிற்பாடுகளும், பொறுப்புக்களும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. |
| சபையின் நிலுவை | • சுதந்திரமான நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களை அடையாளங்காணுதல் வேண்டும்<br>• சுதந்திரமான நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளரொருவர் இருக்கின்ற ஏதேனும் பின்வருகின்ற காரணங்கள் இருந்தபோதிலும், "சுதந்திரமாக" இனங்காணப்பட்டால், அத்தகைய தீர்மானத்திற்கான காரணம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்<br>• பணிப்பாளரொருவர் சுதந்திரமானவராகக் கருதப்படவில்லையென்றால், அவர்,<br>○ பணிப்பாளராக நியமனம் தொடர்வதற்கு உடன் முன்னான இரண்டு ஆண்டு காலப்பகுதியில் கம்பனியால் நியமிக்கப்பட்டுள்ளார்;<br>○ பணிப்பாளராக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கம்பனியுடன் மூலதனத் தொழில் தொடர்புமுறையினை நியமனம் வழங்கப்பட்டதற்கு உடன்முன்னரான இரண்டு ஆண்டு காலப்பகுதியில் கொண்டிருந்தார் / தற்போது கொண்டிருக்கின்றார்;<br>○ பணிப்பாளர், பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரின் (அத்துடன்/ அல்லது மற்றும் சமமான பதவிகள்) நெருங்கிய குடும்ப அங்கத்தவரைக் கொண்டிருப்பார்.<br>○ கம்பனியில் முக்கியமான பங்குகளைக் கொண்டிருக்கின்றார்<br>○ முதலாவது நியமனத் திகதியிலிருந்து ஒன்பது ஆண்டுகளை விஞ்சிய காலப்பகுதியொன்றிற்கு கம்பனியின் சபையில் தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ளார்.<br>○ பிறிதொரு கம்பனியில் அல்லது தொழிலில் | A.5.5 | வங்கியின் அமைப்பு அக விதிகளின்படி நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரிச் செயலாளர் பணிப்பாளர்கள் சபையினை நியமிப்பதற்கு வலுவளிக்கப்படுகின்றார். அனைத்துப் பணிப்பாளர்களும் நிதி அமைச்சினால் நியமிக்கப்படுவதுடன், நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளராக இருக்கின்ற தொழிற்படும் பணிப்பாளர் திரு.சனத் வீரதுங்க தவிர ஏனையவர்கள் சுதந்திரமற்ற பணிப்பாளர்கள்.பணிப்பாளர்கள், வங்கியின் முகாமைத்துவத்தின் பகுதியாக இல்லாமையால் நடுநிலையான எண்ணத்தை உருவாக்க முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிகமர்த்தப்பட்டிருக்கின்றாரா;<br>▪ ஏனைய கம்பனியின் பணிப்பாளர்களில் பெரும்பான்மையானோர் எதில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் அல்லது பணிப்பாளர்களா ; அல்லது<br>▪ ஏனைய கம்பனியின் பணிப்பாளர்களில் பெரும்பான்மையானோர் எதில் முக்கியமான பங்கினை அல்லது முக்கிய தொழில் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றனர்; அல்லது<br>▪ கம்பனியில் முக்கிய பங்கினை அல்லது கம்பனியில் தொழில் தொடர்பினைக் கொண்டிருத்தல் ;<br>• பிறிதொரு கம்பனியின் பணிப்பாளரொருவரா;<br>▪ ஏனைய கம்பனியின் பணிப்பாளர்களில் பெரும்பான்மையானோர் எதில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் அல்லது பணிப்பாளர்களா ; அல்லது<br>○ கம்பனியுடன் முக்கிய பங்கினைக் அல்லது கம்பனியில் தொழில் தொடர்பினைக் கொண்டிருத்தல்<br>• பிறிதொரு கம்பனியில் அல்லது தொழிலில் கம்பனியின் முக்கிய பங்கினை அல்லது தொழில் தொடர்பினைக் கொண்டிருத்தல்:<br>▪ ஏனைய கம்பனியின் பணிப்பாளர்களில் பெரும்பான்மையானோர் எதில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் அல்லது பணிப்பாளர்களா ; மற்றும் /அல்லது<br>○ கம்பனியுடன் முக்கிய பங்கினைக் அல்லது கம்பனியில் தொழில் தொடர்பினைக் கொண்டிருத்தல் | | |
| புதிய பணிப்பாளர்களின் நியமனம் | புதிய பணிப்பாளரை நியமிக்கின்றபோது பின்வருகின்ற விபரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.<br>• அத்தகை ஒவ்வொரு பணிப்பாளர் பற்றி சுருக்கமான தற்குறிப்பு;<br>• உரிய தொழிற்பாட்டு விடயப்பரப்பில் அவரது நிபுணத்துவத் தன்மை; அத்துடன்<br>• பணிப்பாளர், பணிப்பாளராக அல்லது சபைக் குழுக்களில் அங்கத்தவராக இருக்கின்ற கம்பனிகளின் பெயர் ; அத்துடன்<br>• அத்தகைய பணிப்பாளர் சுதந்திரமானவராகக் கருதப்படுகின்றாரா | A.7.3 | இணங்கியுள்ளது. பணிப்பாளர்கள், திறைசேரியின் செயலாளரினால் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள அமைப்பின் அகவிதிகளின்படி நியமிக்கப்படுகின்றனர் |
| குழுவின் பெயர் குறிப்பீடு | குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களின் பெயர் குறிப்பீடு இனங்காணப்படுதல் வேண்டும். | A.7.1 | இணங்கியுள்ளது |
| சபையின் செயலாற்றுகையை மதிப்பிடுதல் | செயலாற்றுகை மதிப்பீடு எவ்வாறு நடத்தப்பட்டுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் | A.9.3 | சபை அதனது செயலாற்றுகை மற்றும் பயனுறுதியை ஆண்டு தோறும் மதிப்பிடுவதற்காக மதிப்பிடும் திட்டமொன்றை 2012 ஆம் ஆண்டில் கைக் கொண்டுள்ளது. |
| சபை | ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பிலும் பின்வருகின்ற | A.10.1 | இணங்கப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| தொடர்பான வெளிப்பாடுகள் | விபரங்கள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்;<br>• பெயர், தகைமைகள் மற்றும் சுருக்கமான முகக்குறிப்பு;<br>• உரிய தொழிற்பாட்டு விடயப்பரப்பில் அவரது /அவவினது நிபுணத்துவத் தன்மை;<br>• வங்கியின் ஏனைய பணிப்பாளர்களுடனான குடும்ப மற்றும் /அல்லது முக்கியமான தொழில் உறவுமுறைகள்;<br>• தொடர்புபட்ட பணிப்பாளர், இலங்கையில் பணிப்பாளராக சேவையாற்றுகின்ற பட்டியலிடப்பட்ட ஏனைய கம்பனிகளின் பெயர்கள்;<br>• தொடர்புபட்ட பணிப்பாளர், பணிப்பாளராக சேவையாற்றுகின்ற கம்பனிகளின் பெயர்கள் மற்றும் தொடர்புபட்ட பணிப்பாளர் அல்லது அவர் /அவ குழுமக் கம்பனிகளில் ஏனைய பணிப்பாளர் பதவியை வகித்தல் ;<br>• ஆண்டு காலப்பகுதியில் சமூகமளித்த வங்கியின் சபைக்கூட்டங்களின் எண்ணிக்கை /வீதம் ;<br>• பணிப்பாளர் அங்கத்தவராக சேவையாற்றுகின்ற குழுக்களின் பெயர்கள் ; மற்றும்<br>• ஆண்டு காலப்பகுதியில் சமூகமளித்த குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை/ வீதம். | | துடன், ஆண்டறிக்கையின் (11 ஆம் பக்கத்தில்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது |
| ஊதியம் பற்றிய வெளிப்பாடு | • ஊதியக் கொள்கை மற்றும் சபையின் மொத்த ஊதிய விபரங்கள் பற்றிய குறிப்பு<br>• நிறைவேற்றதிகாரமுள்ள மற்றும் நிறைவேற்றதி காரமற்ற பணிப்பாளர்களின் மொத்த வேதனம். | B.3 | நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களுக்கு சபை மற்றும் குழுக் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான வரவுக் கட்டணம் மட்டுமே செலுத்தப்படுகின்றது. தவிசாளர் கூட்டங் களுக்குச் சமூகமளிப் பதற்கான பணிப்பாளர் களின் கட்டணங்கள், நிதி, திட்டமிடல் அமைச்சினால் தீர்மானிக்கப்படுகின்றன. ஊதியமானது, நிதி அமைச்சின் வழி காட்டலுக்கமைவாக தவிசாளர் மற்றும் நிறை வேற்றுப் பணிப்பாள ருக்குமே செலுத்தப்படு கின்றது. பணிப்பாளர் களின் மொத்த வேதனாதிகள் நிதிக் கூற்றுக்களில் "குறிப்பு 09" இல் வெளிப் படுத்தப்பட்டுள்ளது. |
| பிரதான கொடுக்கல் வாங்கல்கள் | • வங்கியினால் பதியப்பட்டுள்ள பிரதான கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் வெளிப்படுத்துதல் வேண்டும் | C.2 | இணங்கியுள்ளது |
| கணக்காய்வுக் குழு | • கணக்காய்வுக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.<br>• கணக்காய்வாளரின் சுதந்திரத்தைத் தீர்மானிப்பதற்கான | D.3.4 | கணக்காய்வுக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள் பணிப்பாளர்களின் |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படை. | | அறிக்கையில் 21 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. வங்கியின் கணக்காய் வாளர்கள் கணக்காய்வாளர் அதிபதியின் அங்கீகாரத்துடன் திறைசேரியினால் நியமிக்கப்படுகின்றனர் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தாபனத்தின் சுதந்திரம் கணக்காய்வாளர் அதிபதியினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. கணக்காய்வாளரும் வங்கியின் கால அட்டவயைிலான கணக்காய்வுகளைச் செய்கின்றார். |
| **தொழில் நடத்தைகள் மற்றும் ஒழுக்கவியல் கோவை** | • வங்கியானது பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அணிக்கான தொழில் நடத்தை மற்றும் ஒழுக்கவியல் கோவையைக் கொண்டிருக்கின்றதா என்பதை வெளிப்படுத்துதல் வேண்டும்.<br>• அத்தகைய கோவையினால் அவர்கள் பிணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் உறுதிப்படுத்தல் பிரகடனத்தை வெளிப்படுத்துதல் வேண்டும்.<br>• இந்த கோவையின் ஏதேனும் ஏற்பாடுகளின் ஏதேனும் மீறல் பற்றி அவர் அவ அறிந்திருக்கவில்லையென்று தவிசாளர் சான்றுப்படுத்துதல் வெண்டும். | D.4.1 & D.4.2 | 2013 இல் நடை முறைப்படுத்தப் பட்டுள்ளது |
| **நிறுவனத்தின் தொடர்ச்சி** | • வங்கி நிறுவனத் தொடர்ச்சியுடையது என்பது தேவைப்பட்டவாறான அனுமானங்கள் மற்றும் தகைமைகளின் ஆதரவுடன் அறிக்கை செய்யப்படுதல் வேண்டும். | D.1.5 | நிதி அறிக்கைகள் மற்றும் கருத்துக் களில் கணக்காய் வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட வாறு வங்கி நிறுவனத் தொடர்ச்சியுடையது இணங்கியுள்ளது. |
| **ஊதியக் குழுவின் அங்கத்தவர்கள்** | • ஊதியக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள் ஊதியக் குழு அறிக்கையில் வெளிப்படுத்தப் படுதல் வேண்டும் | B.1.3 | ஊதியக் குழு அங்கத்தவர்களின் பெயர்கள், மனிதவள அபிவிருத்தி மற்றும் தாபனத்தில் 63 ஆம் பக்கத்தில் வெளிப் படுத்தப்பட்டுள்ளது இணங்கியுள்ளது. |
| **பணிப்பாளர்களின் அறிக்கைகள்** | பணிப்பாளர்களினால் செய்யப்பட்ட பின்வருகின்ற பிரகடனங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:<br>• சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் முரண்படுகின்ற ஏதேனும் செயற்பாடுகளில் வங்கி ஈடுபட்டிருக்கவில்லை;<br>• வங்கியுடன் தொடர்புபடுகின்ற ஒப்பந்தங்களில் முக்கியமான அனைத்து ஆர்வங்களையும் பிரகடனப்படுத்தியுள்ளதுடன் முக்கியமான ஆர்வமுள்ள விடயங்கள் மீது வாக்களித்தலிலிருந்து தவிர்த்திருந்தமை;<br>• பங்குதாரர்களை சமத்துவமாக உபசரிப்பதை | D.1.2 | இணங்கியுள்ளது.இணக்கப்பாடு, 2013 ஆம் ஆண்டில் சுதந்திர மான பணிப்பாளரின் கீழ் வேறாக்கப்படவுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்துவதற்கான அனைத்து முயற்சி களையும் வங்கி எடுத்துள்ளது;<br>• தொழில் தேவைப்பட்டவாறு அனுமானங்கள் அல்லது தகைமைகளுக்கு ஆதரவளிப்பதுடனான நிறுவனத்தின் தொடர்ச்சி; அத்துடன்<br>• நிதி, தொழிற்பாடு, இணக்கப்பாட்டுக் கட்டுப்பாடு கள் மற்றும் இடர் முகாமைத்துவத்தை உள்ளடக்கிய அகக் கட்டுப்பாட்டு மீளாய்வினை அவர்கள் நடத்தியுள்ளனர் என்பதுடன், அவர்களின் வினைத்திறன் மற்றும் வெற்றிகரமான பின்பற்றல்கள் பற்றிய நியாயமான உறுதிப்படுத்தல்கள் இங்கே பெறப்பட்டுள்ளன | | |
| **நிதிக்கூற்றுக்கள்** | • பணிப்பாளர்கள் சபை நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்புக் கூற்றொன்று உள்ளடக்குதல் வேண்டும் ;<br>• கணக்காய்வாளர்கள், அவர்களது அறிக்கையிடல் பொறுப்புப் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். | D.1.3 | இணங்கியுள்ளது |
| **முகாமைத்துவ அறிக்கை** | பின்வருகின்ற விடயங்களுக்கேனும் முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை கலந்துரையடல் உள்ளடக்கப்படுதல் வேண்டும் :<br>• தொழிற்றுறை கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி ;<br>• வாய்ப்புக்களும். அச்சுறுத்தல்களும்;<br>• அகக் கட்டுப்பாட்டு முறைமைகளும் அவற்றின் போதியளவும்,<br>• வங்கியினால் ஆற்றப்பட்ட சமூக, சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகள்;<br>• நிதிசார் செயற்பாடுகள் ;<br>• மனித வளங்கள் /தொழிற்றுறை தொடர்புகளில் முக்கியமான அபிவிருத்திகள்; அத்துடன்<br>• எதிர்காலத்திற்கான நல்வாய்ப்பு வளங்கள் | D.1.4 | இணங்கியுள்ளது. வங்கியானது, தேயிலை வளர்ப்பு சமூக மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாட்டிற்கு அனுசரணை வழங்குகின்றது. (பக்கம் 17). |
| **கூட்டு ஆளுகை அறிக்கை** | • கோவையின் தத்துவங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் வங்கி எந்த வகையில் எந்த அளவிற்கு இணங்கியுள்ளது என்பதை வெளிப்படுத்துதல் வேண்டும் | D.5.1 | இணங்கியுள்ளது |
| **கணக்காய்வு அறிக்கை** | • குழுவினால் ஆற்றப்பட்ட வேலை தரப்படுதல் வேண்டும். | D.3.3 | இணங்கியுள்ளது (பக்கம் 65) |

## இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கிப் பணிப்பாளர் சட்டத்தின் 3(8) ஆம் பிரிவினால் தேவைப் படுத்தப்பட்டவாறான கூட்டு ஆளுகை ஒழுங்குகளை வங்கி கடைப்பிடித்தல்

| கூட்டு ஆளுகையின் பிரிவு மற்றும் ஒழுங்கு | இணக்கப்பட்டின் மட்டம் |
|---|---|
| 3(1) சபையின் பொறுப்புகள் | |
| 3(1)(i) வங்கியானது, பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதன் மூலம் வங்கியின் பாதுகாப்பு மற்றும் நன்நிலைத்தன்மையைப் பலப்படுத்தும்: | |
| அ)வங்கியின் உபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டுப் பெறுமதிகளை அங்கீகரிப்பதுவும், கவனிப்பதுவும் மற்றும் இவை வங்கி முழுவதும் தெரிவிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துதலும்; | சபையானது, உபாயக் குறிக்கோள்கள், கூட்டு மதிப்பு களை அங்கீகரித்துள்ளது. வங்கியின் உபாயக் குறிக்கோள் களை அங்கீகரித்தல் மற்றும் கண்காணித்தலானது மாதாந்த மற்றும் விசேட சபை கூட்டங்களி னூடாக ஆற்றப்படுகின்றது.<br><br>இதனை வங்கியினூடாகத் தெரியப்படுத்துவது பிரதான முகாமைத்துவ ஆட்களினூடாக ஆகும். |
| ஆ) வங்கியின் ஒட்டுமொத்தத் தொழில் உபாயத் திட்டங்களுக்கான அங்கீகாரம், ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கான ஒட்டுமொத்த இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் அளவிடத்தகு இலக்குகளுடனான பொறிமுறைகளை உள்ளடக்குகின்றன ; | சபையானது, ஒட்டுமொத்தமாக மூன்று வருடங்களுக்கான தொழில் உபாயத் திட்டங்களை அங்கீகரித்துள்ளது. அத்தகைய திட்டங்கள், ஆய்வாண்டு காலப் பகுதிக்கான அளவிடத்தகு இலக்குகளைஉள்ளடக்குகின்றன. |
| இ) முக்கியமான இடர்களை இனங்காணுதல் மற்றும் இடர்களை விவேகமாகக் கையாளுவதற்குப் பொருத்தமான முறைகளை நடை முறைப்படுத்துதல்; | முக்கியமான இடர்களை இனங்காணுதல் மற்றும் நடை முறைப்படுத்தல் நியமிக்கப் பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் நியமிக்கப்பட்ட சபையினால் ஆற்றப்படுகின்றது.<br><br>IRMC கூட்டங்களின் பிரமாணங்கள் கால அட்டவணை யடிப்படையில் சமர்ப்பிக்கப் படுகின்றன என்று IRMC விசாரணை நியதிகள் தெரிவிக்கின்றன. |
| ஈ) வைப்பாளர்கள், கடன்கொடுநர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுநர்கள் உள்ளடங்கலான அனைத்துப் பங்குதாரர்களுடன் கூடிய தொடர்பாடல் கொள்கையொன்றை நடைமுறைப்படுத் துதலை அங்கீகரித்தல் ; | தற்போதிருக்கின்ற தொடர்பாடல் கொள்கையை சபை அங்கீகரித்துள்ளது |
| உ)அகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள் வங்கியின் போதியதன்மை மற்றும் நேர்மையை மீளாய்தல்; | வருடாந்த மீளாய்வு மற்றும் அகக் கட்டுப்பாட்டு முறைமை கணக்காய்வுக் குழுவினால் அறிவுறுத்தப்பட்டவாறு அகக் கணக்காய்வுத் திணைக்களத் தினால் ஆற்றப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| ஊ) சர்வதேச கணக்கீட்டு நியமங்களில் வரையறுக்கப்பட்டவாறு (*i*) கொள்கைகளில் முக்கியமாகச் ஆதிக்கம்செலுத்துதல்; (*ii*) நேரடிச் செயற்பாடுகள்; மற்றும் (*iii*) தொழில் செயற்பாடுகள்,தொழிற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற பதவியிலிருக்கின்ற பிரதான முகாமைத்துவ நபர்கள் இனங்காணப்படுதலும்,பெயர்குறிப்பிடப்படுதலும்; | இது தொடர்புடைய தரப்பினர்கள் IAS 24 இல் தரப்பட்ட வழி காட்டலுக்கமைவாகச் செய்யப்பட்டது (LKS -24- தெரிவித்தல் நியமம்).<br><br>சபையானது பிரதான முகாமைத் துவ நபர்களை வங்கிக்காகப் பெயரிடுகின்றது. |
| எ) பணிப்பாளர்கள் சபை அவர்களுக்கும், பிரதான முகாமைத்துவ நபர்களுக்குமுரிய அதிகாரம் மற்றும் முக்கியமான பொறுப்புக் களின் விடயப்பரப்பினை வரையறுத்தல் ; | வங்கியின் உறுப்புரைகள், சபைக்கான அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை வரையறுப் பதுடன், ஒப்படைக்க முடியாத விடயங்களை குறிப்பிடுவதுடன், அவை விதிவிலக்காக வங்கிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. |
| ஏ) பிரதான முகாமைத்துவ நபர்களினால் சபையின் கொள்கையுடன் இசைவுள்ள வங்கி விடயங்களின் கவனக்குறை மீது முறைான கவனிப்பு உள்ளதென்பதை உறுதிப்படுத்தல் ; | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் கூட்டு ஆளுகைத் தொகுப்பு, பிரதான முகாமைத்துவ நபர்களினால் வங்கி விடயங்களைக் உரிய முறையில் கவனிப்பதற்கான செயன்முறையொன்றைக் கொண்டிருக்கின்றது. |
| ஐ) சபைப் பணிப்பாளர்களின் சொந்த ஆளுகைப் பொறுப்பின் பயனுறுதியை கால அட்டவணையில் அடைவது பின்வருவன வற்றை உள்ளடக்குகின்றது:<br>(*i*) பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களின் தெரிவு, பெயர்குறிப்பீடு மற்றும் தேர்வு ;<br>(*ii*) அக்கறைகளினால் ஏற்படும் முரண்பாடுகளை முகாமை செய்தல்; மற்றும்<br>(*iii*) பலவீனம் பற்றித் தீர்மானித்தல் மற்றும் தேவையானவிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்துதல்; | இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர்களைப் பெயர் குறிப்பீடு செய்வதும், தெரிவு செய்வதும் நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் செய்யப்படுகின்றது. |
| ஒ) பிரதானமான முகாமைத்துவ ஆட்களுக்கான வெற்றிகரமான திட்டமொன்றை வங்கி கொண்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துதல்; | மிகவும் முக்கியமான பதவி களுக்கு பொருத்தமான ஆட்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், வங்கி வெற்றிகரமான திட்ட மொன்றைக் கொண்டிருக்கின்றது. |
| ஓ) கொள்கைகளை மீளாய்தல், தொடர்பாடலைத் தாபித்தல் மற்றும் கூட்டுக் குறிக்கோள்களை நோக்கிய முன்னேற்றத்தைக் கண்காணித்தல் போன்றவற்றிற்காக பிரதான முகாமைத்துவ நபர்களுடன் தேவைகளின் அடிப்படையில் கிரமமாகச் சந்தித்தல்; | பிரதானமான முகாமைத்துவ ஆட்கள் தமது தொழிற்பாட்டு விடயப்பரப்பு தொடர்பான விடயங்கள் பற்றி விளக்கமளிப் பதற்கு சபையினால் தேவை எழுகின்றபோது அவர்கள் கிரமமாக அழைக்கப்படுகின்றனர் |
| ஔ) ஒழுங்குபடுத்தும் சூழல்பற்றி புரிந்துகொள்ளுதல் மற்றும் ஒழுங்குபடுத்துநர்களுடன் பயனுறுதிவாய்ந்த உறவுமுறைகள் பேணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துதல்; | இணக்கப்பாட்டு அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த இணக்கப் பாட்டு அறிக்கையினூடாக ஒழுங்கு படுத்தும் சூழலை சபை இனங் காண்பதுடன், பிரதம நிறை வேற்று அலுவலரினாலும் மற்றும் பிரிவு களின் தலைவர்களினாலும் ஒழுங்கு படுத்துநர்களுடன் கூட்டங்களில் துடிப்பாக பங்குபற்றுவதன் மூலம் பயனுறுதிவாய்ந்த உறவு முறைகள் குறிப்பிடப்படுகின்றன என்பதை உறுதிப் படுத்துகின்றது. |

| | | |
|---|---|---|
| | க) வெளிக் கணக்காளர்களை வாடகைக்குப் பெறுதல் மற்றும் தவறுகளில் முறையான முயற்சியை எடுத்தல். | சபைக் கணக்காய்வு குழுவின் குறிப்பீட்டு நியதிகளின்படி, தொழிற்பாடுகள் நியமனங்களின் பரிந்துரை, வெளிக் கணக்காளரின் தவறுகளை உள்ளடக்குகின்றது. |
| 3(1)(ii) | தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரை சபை நியமிக்கும் என்பதுடன், இந்தப் பணிப்புரைகளின் 3 (3) ஆம் பணிப்புரையுடன் இணைந்ததாக தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக் களை வரையறுப்பதுடன், அங்கீகரிக்கும். | இணங்கப்பட்டுள்ளது. தவிசாளர் உள்ளடங்கலாக அனைத்துப் பணிப்பாளர்களையும் திறைசேரியின் செயலாளர் பெயர் குறிப்பீடு செய்கின்றார். சபை பொது முகாமையாளரை / பிரதம நிறைவேற்று அலுவலலை நியமிக்கின்றது. |
| 3(1)(iii) | சபை கிரமமாகக் கூடும் என்பதுடன், சபைக் கூட்டங்கள் சுமார் மாதாந்த இடைவேளையில் ஆகக்குறைந்தது 12 தடவைகளேனும் நடைபெறும். அத்தகைய கிரமமான சபைக் கூட்டங்கள், சமூகமளிப்பதற்கு உரித்துடைய பெரும்பான்மையான பணிப்பாளர்களின் பங்குபற்றுதலுடன் சாதாரணமாக தொடர்புபடுகின்றது. எழுத்து வடிவிலான தீர்மானங்களை / தாள்களை அனுப்புவதனூடாக சபையின் சம்மதத்தைப் பெறுதல் இயலுமானவரையில் தவிர்க்கப்படும் | இணங்கப்பட்டுள்ளது. (2012 ஆம் ஆண்டுக்காக சுற்றறிக்கைத் தீர்மானத்தினால் எந்தத் தீர்மானமும் நிறைவேற்றப் படவில்லை |
| 3(1)(iv) | சபையானது, வங்கியினது, தொழில் மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள் மற்றும் உத்தேசங்கள் கிரமமான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிநிரலில் இருக்கின்றவிடத்து அத்தகையவற்றை உள்ளடக்குவதற்கு அனைத்துப் பணிப்பாளர்களையும் இயலச்செய்வதற்கான ஒழுங்குகள் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(v) | சபை நடைமுறைகள், பணிப்பாளர்கள் அனைவரும் சமூகமளிப் பதற்கான வாய்ப்பளிப்பதற்காக கிரமமான சபைக் கூட்டங் களுக்கு ஆகக்குறைந்தது 7 நாட்களுக்கு முன்னராக அறிவிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தல் ஏனைய அனைத்து சபைக் கூட்டங்களுக்கும் நியாயமான வகையில் அறிவித்தல் வழங்கப்படலாம். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(vi) | சபை நடைமுறைகள், ஆகக்குறைந்தது 12 மாதங்களில் மூன்றில் இரண்டு தொடர்ந்து வருகின்ற கூட்டங்களுக்கு சமூகமளிக்காத அல்லது உடன்முன்னதாக தொடரும் தொடர்ந்து நடைபெற்ற மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத பணிப்பாளரொருவர் பணிப்பாளர் பதவியிலிருந்து ஒழிக்கப்படுவார் என்பதை உறுதிப்படுத்தும். எனினும், மாற்றுப் பணிப்பாளரொருவரினூடாக பணிப்பாளர்கள் கூட்டத்தில் பங்குபற்றுவதும் சமூகமளித்ததாக ஏற்றுக்கொள்ளப்படலாம். | அத்தகைய நிலைமை 2012 ஆம் ஆண்டில் ஏற்படவில்லை |
| 3(1)(vii) | சபையானது, சபையின் செயலாளர் சேவைகளை, பங்குதாரர்கள் கூட்டத்தை கையாளுகின்ற மற்றும் நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாடு களை ஆற்றுகின்ற பிரதான பொறுப்புக்களைக் கொண்டிருக் கின்ற, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 76H பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்துகின்ற கம்பனி செயலாளரொருரை நியமிக்கும் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(viii) | பணிப்பாளர்கள் அனைவரும், சபையின் நடைமுறைகள் மற்றும் | இணங்கப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | பிரயோகிகப்படக்கூடிய அனைத்து ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் கம்பனிச் செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவையினைப் பெறுவதற்கான அணுகுமுறையைக் கொண்டிருப்பர். | |
| 3(1)(ix) | கம்பனிச் செயலாளர் சபைக் கூட்டங்களின் பிரமாணக் குறிப்புகளை பேணுவார் என்பதுடன், அத்தகைய பிரமாணக் குறிப்புகள், பணிப்பாளர் எவரினாலும் நியாயமான எந்த நேரத்திலும், நியாயமான அறிவிப்பின்பேரில் பரிசீலனைக்காகத் திறக்கப்படமுடியும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(x) | சபைக் கூட்டங்களின் பிரமாணக்குறிப்பு போதியளவு விபரமாக பதிவுசெய்யப்படுதல் வேண்டும். ஆகவே சபை அதனது கடமைகளை ஆற்றுவதில் மிகவும் அவதானமாக, விவேகமாக செயற்பட்டுள்ளதா என்று பிரமாணக் குறிப்பிலிருந்து சேகரிப்பது சாதகமானதாகும். பிரமாணக் குறிப்பானது, சபைக் கூட்டங்களில் தீர்க்காலோசனைகளை அடைவதற்கு ஒழுங்குபடுத்தும் மேற்பார்வை செய்யும் அதிகாரிகளுக்கான குறிப்பாக சேவையாற்றும். ஆகவே, சபைக் கூட்டங்களின் பிரமாணக்குறிப்பு பின்வருவனற்றைத் தெளிவாகக் கொண்டிருக்கும் அல்லது குறிப்பிடும்:<br>(அ) சபையினால் அதனது தீர்க்காலோசனைகளில் பயன்படுத்தப்பட்ட தரவு மற்றும் தகவல் பற்றிய பொழிப்பு;<br>(ஆ) சபையினால் கவனத்தில்கொள்ளப்பட்ட விடயங்கள்;<br>(இ)சபையானது அதனது கடமைகளை மிகவும் கவனமாக, விவேகமாக செய்துள்ளதா என்பதை எடுத்துரைக்கக்கூடிய கருத்தினைக் கண்டறியும் கலந்துரையாடல் மற்றும் விவாதம் அல்லது கருத்து வேறுபாடு பற்றிய பிரச்சனைகள் ;<br>(ஈ)சபையின் உபாயங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணங்குவதைக் குறிக்கின்ற உரிய நிறைவேற்றதிகாரிகளின் நிரூபணம் மற்றும் உறுதிப்படுத்தல்கள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைப் கடைப்பிடித்தல்;<br>(உ) வங்கி எதிர்நோக்குகின்ற இடர்கள் பற்றிய சபையின் மற்றும் புரிந்துகொள்ளும்தன்மை மற்றும் கைக்கொள்ளப்பட்ட இடர் முகாமைத்துவ அளவீடுகள் பற்றிய மேற்பார்வை; அத்துடன்<br>(ஊ) முடிபுகளும் சபைத் தீர்மானங்களும் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(xi) | வங்கியின் செலவில் பொருத்தமான சந்தர்ப்பத்தில் சுதந்திரமான தொழில்சார் ஆலோசனையை நாடுவதற்கு நியாயமான வேண்டுகோளின்பேரில் பணிப்பாளர்களை இயலச் செய்வதற்கு சபையினால் இணங்கப்பட்ட நடைமுறைகள் இருக்கும். சபையானது, உரிய பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்கள் வங்கிக்கு அவரது கடமையைப் புரிவதற்கு உதவுவதற்கு பணிப்பாளர்களுக்கான சுதந்திரமான தொழில்சார் ஆலோசனைகளை வேறாக வழங்குவதற்கு சபை தீர்மானிக்கும் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(xii) | பணிப்பாளர்கள், ஏனைய தாபனங்கள் அல்லது தொடர்பட்ட தரப்பினர்களுடன் அவர்களது நடவடிக்கையில், மற்றும் அவர்களுக்கான கடமைகள் பற்றிய அக்கறை பற்றிய முரண்பாடுகள், அல்லது அக்கறை பற்றிய முரண்பாடுகள் தோன்றுவதைத் தவிர்ப்பர். பணிப்பாளரொருவர், சபையினால் கவனத்தில்கொள்ள வேண்டிய, சபை முக்கியமானென்று தீர்மானித்துள்ள விடயமொன்றில் அக்கறை முரண்பாட்டினைக் கொண்டிருந்தால், அந்த விடயமானது கொடுக்கல் வாங்கல்களில் முக்கியமான ஆர்வமற்ற சுதந்திரமான நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் (இந்த பணிப்புரைகளில் | இணங்கப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | பணிப்புரை இல் 3(2)(iv) குறிப்பிடப்படுகின்றது) சமூகமளித் திருக்கையில் சபைக் கூட்டத்தில் தீர்க்கப்படுதல் வேண்டும். மேலும், பணிப்பாளரொருவர், அவர் /அவ அல்லது அவரது / அவவது நெருக்கமான உறவு அல்லது விடயம் தொடர்பான தீர்மானம் எடுக்கையில் பணிப்பாளர் திடமான ஆர்வத்தைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் சபைக் கூட்டத்தில் வாக்களிப்பதிலிருந்து தவிர்த்திருக்கலாம் என்பதுடன் சபைக் கூட்டத்தில் உரிய நிகழ்ச்சிநிரல் விடயத்திற்கு அவது / அவ பெரும்பான்மைக்காக கணக்கெடுக்கப்படமாட்டார். | |
| 3(1)(xiii) | சபையானது, விடயங்களின் முறையான அட்டவணையை விசேடமாக, வங்கியின் பணிப்பு மற்றும் கட்டுப்பாடு நிச்சயமாக அதன் அதிகாரத்தின் கீழிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவ தற்கான முடிவிற்கான அதனது ஒதுக்கத்தை அது கொண்டிருக்கும் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(xiv) | சபையானது, வங்கி அதனது கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாதிருக்கின்றது அல்லது அதேபோன்றிருந்தால் அல்லது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன்கொடுநர்கள் காரணமாக கடன்தீர்க்க முடியாது வந்திருந்தால் அல்லது கொடுப்பனவு களை நிறுத்துவது போன்று வந்திருந்தால், ஏதேனும் முடிபு அல்லது நவடிக்கையை எடுப்பதற்கு முன்னர் வங்கியின் நிலைமையை வங்கி மேற்பார்வை முகாமையாளருக்கு உடனடியாக அறிவிக்கின்றது | அத்தகைய நிலைமை 2012 இல் ஏற்படவில்லை |
| 3(1)(xv) | மூலதன தகுதி வீதம் மற்றும் ஏனைய நிருவாகம் பற்றிய அடிப்படைகளின் நியதிகளின்படி நாணயச் சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறான மட்டத்தில் முதலிடப்பட்டுள்ள 29 வங்கி என்பதை சபை உறுதிப்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(xvi) | சபையானது, இந்தப் பணிப்புரைகளின் பணிப்புரை 3 இற்கமைவாக உருவாக்கப்படுகின்ற வங்கியின் ஆண்டறிக்கை, வருடாந்த கூட்டு ஆளுகை அறிக்கையை வங்கி பிரசுரிக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(1)(xvii) | சபையானது, ஒவ்வொரு பணிப்பாளரும் வருடாந்தம் சுய மதிப்பீட்டினை மேற்கொள்ளும் திட்டமொன்றைப் பின்பற்றும் என்பதுடன், அத்தகைய மதிப்பீட்டின் பதிவுகளைப் பேணும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(2)<br><br>3(2)(i) | சபையின் உருவாக்கம்<br><br>சபையிலிருக்கின்ற பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 இற்குக் குறைவற்றதாகவும் 13 இற்கும் அதிகமற்றதாக இருக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(2)(ii) | (அ)பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியை வகிக்கின்ற பணிப்பாள ரொருவரைத் தவிர பணிப்பாளரொருவரின் மொத்த சேவைக்காலம் ஒன்பது வருடங்களை விஞ்சுதலாகாது என்பதுடன், அத்தகைய அலுவலக காலப்பகுதி 2008 சனவரி 01 ஆம் திகதி வரை அத்தகைய பணிப்பாளரினால் சேவையாற்றப்பட்டட மொத்த காலப்பகுதியையும் உள்ளடக்கும். | இணங்கப்பட்டுள்ளது<br><br>பணிப்பாளர்கள் 9 ஆண்டுகளை இதுவரை விஞ்சவில்லை |
| | (ஆ)இச்சந்தர்ப்பத்தில், பின்வருகின்ற இடைமாறுபாட்டுக் கால ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும்:<br><br>2008 சனவரி 01 ஆம் திகதியில் ஒன்பது ஆண்டுகளைக் பூர்த்திசெய்துள்ள பணிப்பாளரொருவர் அல்லது 2008 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் எந்நேரத்திலும் அத்தகய தவணையைப் பூர்த்திசெய்தவர், 2009 சனவரி 1 ஆம் திகிதியிலிருந்து ஆரம்பித்து மேலும் 3 வருட காலப்பகுதியொன்றைத் தொடரலாம்.<br><br>அ). 2008 சனவரி 01 ஆம் திகதியில் ஒன்பது ஆண்டுகளுக்கு | பணிப்பாளர்கள் 9 ஆண்டுகளை இதுவரை பணிப்பாளர் என்ற வகையில் விஞ்சவில்லை |

| | |
|---|---|
| மேலாக சேவையாற்றியுள்ள பணிப்பாளர் ஒருவர் மட்டுமே சபையில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அவர் 2008 டிசெம்பர் 31 இல் பணிப்பாளர் பதவியை வெறிதாக்கியுள்ளார் என்று கருதப்படும்.<br>ஆ) 2008 சனவரி 01 ஆம் திகதியில் ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றியுள்ள பணிப்பாளர்கள் இருவர் அல்லது அதற்கும் மேலதிகமாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பின்வருகின்ற ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும்:<br>I. ஒன்பது வருடங்களை விஞ்சிய காலப்பகுதி சேவையாற்றியுள்ள பணிப்பாளர்கள், அதிகூடிய காலம் சேவையாற்றிய பணிப்பாளர், 2008 டிசெம்பர் 31 இல் பணிப்பாளர் பதவியை வெறிதாக்கி யுள்ளார்கள் என்று கருதப்படும்.<br>II. அதன் பின்னர், முடிவுறுகின்ற முன்னைய ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் இருக்கின்ற பணிப்பாளர், 2008 சனவரி 01 ஆம் திகதியில் ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றியுள்ள பணிப்பாளர்கள் அனைவரும் பதவியை வெறிதாக்கியதாகக் கருதப்பட்டுள்ள வரை ஒவ்வொரு ஆண்டும் ஆகக்குறைந்தது ஒரு பணிப்பாள (பணிப்பாளராக அதிக காலம் சேவையாற்றிய திலிருந்து குறைந்த காலம் என்பதனடிப்படையில்) தொடராக பதவியை வெறிதாக்கியதாகக் கருதப்படுவர். 2008 சனவரி 01 ஆம் திகதியில் ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி யுள்ள பணிப்பாளர்கள் அனைவரும், 2011 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் அல்லது அதற்கு முன்னர் பதவியை வெறிதாக் கியதாகக் கருதப்படுவர்.<br>இ) 2008 சனவரி 01 ஆம் திகதிக்கும் 2010 டிசெம்பர் 31 ஆம் திகதிக்குமிடையில் ஒன்பது ஆண்டு சேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பணியாளர்கள் எவரேனும் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், 3(2)(ii)(B)(b) பணிப்புரையில் தரப்படுகின்றவாறு பணிப்பாளர்கள் பணிப்பாளராக அவர்களது பதவியை வெளிதாக்கியதன் பின்னர், அத்தகைய பணிப்பாளர்களும் ஒவ்வொரு ஆண்டும் ஆகக்குறைந்தது ஒரு பணிப்பாளர் (பணிப்பாளராக அதிக காலம் சேவையாற்றியதிலிருந்து குறைந்த காலம் என்பதனடிப்படையில்) தொடராக பதவியை வெறிதாக்கியதாகக் கருதப்படுவர். எவ்வாறு வழங்கப் பட்டிருப்பினும், இந்த உப பணிப்பு (இ) யினால் மேவப்பட்டுள்ள அத்தகைய பணிப்பாளர்கள் அனைவரும், 2011 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் அல்லது அதற்கு முன்னர் பதவியை வெறிதாக்கியதாகக் கருதப்படுவர். | |
| 3(2)(iii) சபையின் பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றை நிறைவேற்று பணிப்பாளரின் எண்ணிக்கை விஞ்சுதலாகாது என்பதை வழங்கி வங்கியின் பணியாளரெருவர், வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்படலாம், தெரிவுசெய்யப்படலாம் அல்லது பெயர்குறிப்பீடு செய்யப்படலாம் ( இதனகத்து பின்னர் "நிறைவேற்றுப் பணிப்பாளராக" குறிப்பிடப்பட்டுள்ளது).அத்தகைய சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர்களில் ஒருவர், வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருப்பார். | வங்கியானது சபையில் ஒரு நிறைவேற்று பணிப்பாளரைக் கொண்டிருக்கின்றது. எண்ணிக்கையானது சபையின் 1/3 இனை விஞ்சுவதில்லை |
| 3(2)(iv) சபையானது, ஆகக்குறைந்தது மூன்று சுதந்திரமான நிறை வேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் அல்லது பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று எது உயர்வானதோ அதனைக் கொண்டிருக்கும். இந்த உப பணிப்பு 2010 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து பிரயோகிக்கப்படும்.<br>நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளரொருவர் அவர்/அவ பின்வருவன | தொழிற்படுகின்ற பணிப்பாளர் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரமற்றவர்கள். இவர்கள் அனைவரும் திறைசேரியின் செயலாளரினால் அமைப்பின் |

| | |
|---|---|
| வற்றைக் கொண்டிருந்தால் சுதந்திரமானவராகக் கருதப்படமாட்டார்:<br>அ) வங்கியின் 1 வீதத்திலும் பார்க்க அதிகமான பங்கினை அவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொண்டிருத்தல்;<br>ஆ) வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தின் 10 வீதத்தினை விஞ்சுகின்ற பணிப்பு 3(7) இல் விதத்துரைக்கப்பட்டவாறு வங்கியுடனான ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கலை தற்போது கொண்டிருத்தல் அல்லது பணிப்பாளராக அவர்/அவ நியமிக்கப்பட்டதை உடன்முன்னராகத் தொடர்ந்து வந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் கொண்டிருத்தல் ;<br>இ)பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை உடன்முன்னராகத் தொடர்ந்து வந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் வங்கியினால் பணிக்கமர்த்தப் பட்டுள்ளார் ;<br>ஈ)இவர் வங்கியின் அல்லது பிறிதொரு வங்கியின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லது முக்கியமான முகாமைத்துவ நபரின் அல்லது முக்கியமான பங்குதாரரின் நெருக்கமான உறவினைக் கொண்டிருத்தல். இந்த நோக்கத்திற்காக, “நெருக்கமான உறவு” என்பது வாழ்க்கைத்துணை அல்லது நிதிரீதியில் தங்கியிருக்கும் பிள்ளை என்பதைக் கருதுகின்றது;<br>உ) வங்கியின் குறித்த பங்குதாரரொருவரைக் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது;<br>எ) கம்பனியொன்றில் அல்லது வர்த்தக தாபனமொன்றில் பணியாளராக அல்லது பணிப்பாளராக அல்லது முக்கிய பங்குதாரராக இருக்கின்றாரா:<br><br>I. இந்தப் பணிப்புரைகளின் பணிப்புரை 3(7) இல் விபரிக்கப்பட்டவாறு வங்கியுடன் தற்போது கொடுக்கல் வாங்கலைக் கொண்டிருத்தல், வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தின் 10 வீதத்தினை விஞ்சுதல் அல்லது<br>II. வங்கியின் பிறவேறு பணிப்பாளராக பணிக்கமர்த்தப்படுதல் அல்லது பணிப்பாளர்களா அல்லது முக்கிய பங்குதாரர்களா ; அல்லது<br>III.வங்கியின் பிறவேறு பணிப்பாளர்கள், இந்தப் பணிப்புரைகளின் பணிப்புரை 3(7) இல் விபரிக்கப்பட்டவாறு வங்கியுடன் தற்போது கொடுக்கல் வாங்கலைக் கொண்டிருத்தல் வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தின் 10 வீதத்தினை விஞ்சுதல்; | அகவிதிகளுடன் இணங்கும் வகையில் நியமிக்கப்படுவதுடன், சுயாதீனமற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். இலங்கை மத்திய வங்கி சுதந்திரத்தின் தேவைப்பாட்டினைப் பிரயோகிப்பதிலிருந்து விதிவிலக்களித்துள்ளது. |
| 3(2)(v) மாற்றுப் பணிப்பாளராக சுதந்திரமான பணிப்பாளராக பிரதிநிதித்துவம் செய்வதற்கு நியமிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர் சுதந்திரமான பணிப்பாளருக்குப் பிரயோகிக்கப்படுகின்ற வகைப்பாட்டினை எதிர்கொள்வார். | ஆண்டு காலப்பகுதியில் வேறுவகையில் பணிப்பாளர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை |
| 3(2)(vi) நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர், சிறந்த பதிவுகளை மற்றும் / அல்லது உபாயம், செயலாற்றுகை மற்றும் வளங்களின் பிரச்சனைகளைப் பொறுப்பதற்கு சுதந்திரமான தீர்ப்பிற்குத் தேவையான திறன்கள் மற்றும் அனுபவத்தைக் கொண்டிருக்கும் நபராக இருப்பார். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(2)(vii) சபையின் கூட்டம், அத்தகைய கூட்டத்தில் பொரும்பான்மையை உருவாக்குவதற்கு பணிப்பாளர்களின் எண்ணிக்கை தேவைப் படுத்தப்பட்டுள்ள போதிலும், அத்தகைய கூட்டத்தில் சமூமளித்திருக்கின்ற பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் அரை வாசிக்கும் அதிகமானோர் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராக இருந்தாலன்றி முறையாக உருவாக்கப் படுதலாகாது. இந்த | இணங்கப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | உப பணிப்பு 2010 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து பிரயோகிக்கப்படும். | |
| 3(2)(viii) | அனைத்து கூட்டு தொடர்பாடல்களிலும் வங்கியின் பணிப்பாளர்களின் பெயர்கள் வெளிப்படுத்துகின்றதாகையால் சுதந்திரமான நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்கள் துரிதமாக இனங்காணப்படுவர். வங்கியானது, தவிசாளர், நிறைவேற்றுப் பணிப்பாளர், நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் மற்றும் சுதந்திரமற்ற நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்கள் ஆகியோர்களின் பெயர்கள் உள்ளடங்கலாக சபையின் உருவாக்கம், பணிப்பாளர்களின் வகைப்பாடுகளை வங்கி வெளிப்படுத்தும் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(2)(ix) | சபைக்கு புதிய பணிப்பாளர்களுக்கான நியமனம், முறையானதாகவும், கவனத்தில் கொள்ளத்தகு வெளிப்படையான நடைமுறையானதாகவும் இருக்கும். சபைக்கான ஒழுங்கான பின்னுரிமை நியமனங்களுக்கான நடைமுறைகள் நடைமுறையிலிருக்கும். | தவிசாளர் உள்ளடங்கலாக அனைத்துப் பணிப்பாளர்களையும் திறைசேரியின் செயலாளர் பெயர் குறிப்பிடுவதுடன், நியமிக்கின்றார் (அமைப்பு அகவிதிகளின்படி) |
| 3(2)(x) | அமைய வெற்றிடமொன்றினை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட அனைத்துப் பணிப்பாளர்களும், அவர்களது நியமனத்தின் பின்னர் முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் தேர்வு செய்வதற்கு அமைவானது. | தவிசாளர் உள்ளடங்கலாக அனைத்துப் பணிப்பாளர்களையும் திறைசேரியின் செயலாளர் பெயர் குறிப்பிடுவதுடன், நியமிக்கின்றார் (அமைப்பு அகவிதிகளின்படி) |
| 3(2)(xi) | பணிப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்தால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், சபையானது,<br><br>அ) பணிப்பாளரின் இராஜினாவை அல்லது அகற்றலையும், அத்தகைய அகற்றல் அல்லது பதவி விலகலுக்கான காரணங்களை உள்ளடக்கி, ஆனால் வங்கியுடன் பணிப்பாளருக்கு ஏதேனும் உடன்பாடின்மையிருந்தால், அது தொடர்பான தகவல்களை மட்டுப்படுத்தாது அறிவிக்கும் ; அத்துடன்<br>ஆ) பங்குதாரர்களின் அவதானத்திற்குக் கொண்டுவருவதற்குத் தேவையான ஏதேனும் விடயம் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை உறுதிப்படுத்தி கூற்றொன்றை வழங்குதல். | அத்தகைய நிலைமை இதுவரை எழவில்லை. |
| 3(2)(xii) | வங்கியொன்றின் பணிப்பாளரொருவர் அல்லது பணியாளரொருவர், முதலாவதாக குறிப்பிடப்பட்ட வங்கியின் துணைக் கம்பனி அல்லது இணைந்த கம்பனியாக அத்தகைய வங்கி இருக்குமிடத்து தவிர பிறிதொரு வங்கியின் பணிப்பாளரொருவராக நியமிக்கப்படுதலாகாது, தேர்வு செய்யப்படுதலாகாது அல்லது பெயர்குறிப்பீடு செய்யப்படுதலாகாது. | வங்கிக்கு துணை அல்லது இணைந்த கம்பனிகள் தற்போது இல்லை. |
| 3 (3) | பணிப்பாளர்களின் பொருத்தமாந்தன்மை மற்றும் சொத்துவத்தை மதிப்பிடுவதற்கான வகைப்பாடு<br><br>1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாக 42 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக கீழே உருவாக்கப்பட்டுள்ள வகைப்பாடு, வங்கியொன்றின் பணிப்பாளராக சேவையாற்றுகின்ற அல்லது சேவையாற்ற விரும்புகின்ற நபரொருவருக்கான பொருத்தமாந்தன்மை மற்றும் சொத்துவத்தினைத் தீர்மானிப்பதற்கு பிரயோகிக்கப்படும். இதனகத்துத் தெரிவிக்கப்பட்ட வகைப்பாடுகளில் ஏதேனுமொன்றுடன் உடன்படாமையானது, பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு, தேர்வு செய்யப்படுவதற்கு அல்லது பெயர்குறிப்பீடுசெய்யப்படுவதற்கு அல்லது பணிப்பாளராகத் தொடர்வதற்கு தகமையற்றவராவார். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(3)(i) | பணிப்பாளராக சேவையாற்றுகின்ற ஆளொருவரின் வயது 70 இனை விஞ்சுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது.70 வயதினை விஞ்சிய பணிப்பாளர்கள் எவரும் |

| | |
|---|---|
| | தற்போதில்லை. |
| 3(3)(ii) ஆளொருவர், வங்கியின் துணை, இணைந்த கம்பனிகள் உள்ளடங்கலாக 20 இற்கும் அதிகமான கம்பனிகள் / தனிஅமைப்புக்கள் / நிறுவனங்களில் பணிப்பாளராக பதவி வகித்தலாகாது.அத்தகைய 20 கம்பனிகள் / தனிஅமைப்புக்கள் /நிறுவனங்களில் 10 இற்கும் அதிகமாகாத கம்பனிகள்,1995 ஆம் ஆண்டின்15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் நியதிகளில் குறித்த வியாபார தனிஅமைப்புக்கு வகைப்படுத்தப்பட்டவையாக இருக்கும் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(4) சபையினால் ஒப்படைக்கப்பட்ட முகாமைத்துவத் தொழிற்பாடுகள்<br>3(4)(i) பணிப்பாளர்கள் தற்போதிருக்கின்ற ஒப்படைப்பு ஒழுங்குகள் பற்றி கவனமாக ஆராய்வதுடன், தெளிவாகப் புரிந்துகொள்வர். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(4)(ii)சபையானது, சபை தனது தொழிற்பாடுகளை முழுமையாக ஆற்றுவதற்கான ஆற்றலை குறிப்பிடத்தக்களவில் மறைக்கின்ற அல்லது குறைக்கின்ற அளவிற்கு சபைக் குழு, பிரதம நிறைவேற்று அலுவலர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் அல்லது பிரதான முகாமைத்து நபர்களுக்கு எந்த விடயங்களையும் ஒப்படைக்காது. | இணங்கப்பட்டுள்ளது |
| 3(4)(iii)சபையானது, வங்கியின் தேவைகளுடன் ஒப்படைப்புச் செயன் முறை தொடர்புபட்டு இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்து வதற்கு நடைமுறையிலிருக்கின்ற கால அட்டவணை அடிப்படையில் அவை மீளாயப்படும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(5) தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர்<br>3(5)(i) தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரின் பங்குகள், வெவ்வேறாக இருத்தல் வேண்டும் என்பதுடன், ஒரே நபரினால் ஆற்றப்படுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது |
| 3(5)(ii) தவிசாளர், நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளரொருவராக இருப்பார் என்பதுடன், சுதந்திரமான பணிப்பாளராக இருத்தல் விரும்பத்தக்கது. தவிசாளர் சுதந்திர பணிப்பாளராக இல்லாத விடத்து, சபையானது, பாரிய சுதந்திரமான ஆக்கக்கூற்றினை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமாக ஆவணமாக்கப்பட்ட விசாரணை நியதிகளுடன் சிரேஷ்ட பணிப்பாளராக சுதந்திரமான பணிப்பாளராக பதவிப் பெயரளிக்கப்படுவார். சிரேஷ்ட பணிப்பாளரின் பதவிப்பெயர் வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படும் | தவிசாளர் திறைசேரியின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத்தரமற்ற பணிப் பாளராவார். சுதந்திரத்தின் தேவைப்பாடு பற்றி இலங்கை மத்திய வங்கியினால் விதிவிலக் களிக்கப்படுகின்றது. சிரேஷ்ட பணிப்பாளர் எவருமில்லை |
| 3(5)(iii) சபையானது, அதனது ஆண்டறிக்கையின் இணைந்த பகுதியாக இருக்கக்கூடிய , தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலரின் அடையாளம், தவிசாளர் , பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் சபையின் அங்கத்தவர்களுக்கிடையிலான உறவுமுறைகள் ஏதேனுமிருந்தால் ஏதேனும் உறவுமுறையின் தன்மை (நிதி, வியாபாரம்,குடும்பம் அல்லது ஏனைய முக்கிய /உரிய உறவு(கள்) என்பவற்றை அதனது கூட்டு ஆளுகை அறிக்கையில் வெளிப்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(5)(iv) தவிசாளர்,<br>(அ) சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவார்;<br>(ஆ) சபையானது பயனுறுதிவாய்ந்த முறையில் வேலையாற்றுகின்ற தென்றும், அதனது பொறுப்புக்களை உறுவதனை உறுதிப்படுத் துவார்; அத்துடன்<br>(அ) அனைத்து பிராதான,பொருத்தமான விடயங்கள் காலத்துடன் | இணங்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| கூடிய வகையில் சபையினால் கலந்துரையாடப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவார் | |
| 3(5)(v) தவிசாளர், நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்படுவதற்கான ஏனைய பணிப்பாளர்களினால் முன்மொழியப்பட்ட ஏதேனும் விடயங்களை பொருத்தமானவிடத்து கவனத்திலெடுத்து ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரலை வரைவதற்கும் அங்கீகரிப் பதற்கும் முதன்மையான பொறுப்புவாய்ந்தவராக இருப்பார் | அனைத்து சபைக் கூட்டங் களுக்கும் இனங்காணப்பட்ட பிரதான விடயங்களுடன் முறை யான நிகழ்ச்சிநிரலொன்று இருக்கின்றது. ஏனைய பணிப்பாளர்கள் நிகழ்ச்சி நிரலில் தமது உத்தேசங்களை உள்ளடக்குவதற்கு அவர்களுக்கு சபை நடைமுறை அனுமதிக்கின்றது. |
| 3(5)(vi) தவிசாளர், பணிப்பாளர்கள் அனைவருக்கும், சபைக் கூட்டங்களில் எழுகின்ற பிரச்சனைகள் மீது உரியமுறையில் சுருக்கமாக வழங்கப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துவார் என்பதுடன், பணிப்பாளர்கள் உரிய நேரத்திற்கு போதிய தகவலை பெறுகின்றனர் என்றும் உறுதிப்படுத்துதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(5)(vii) தவிசாளர், சபையின் அலுவல்களுக்கு முழுமையான, துடிப்பான பங்களிப்பினைச் செய்வதற்கு பணிப்பாளர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதுடன், வங்கியின் சிறந்த அக்கறையில் சபை செயற்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துவதற்கு தலைமை வகிப்பார். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(5)(viii)தவிசாளர், குறிப்பாக நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளரின் பயனுதிவாய்ந்த பங்களிப்பிற்கு வசதியை ஏற்படுத்துவார் என்பதுடன், நிறைவேற்று மற்றும் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களிடையே பலமான உறவினை உறுதிப்படுத்துவார். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(5)(ix) தவிசாளர், பிரதான முகாமைத்துவ நபர்கள் அல்லது பிற வேறு எத்தன்மைத்தான நிறைவேற்றதிகாரமுள்ள கடமைகளின் நேரடி மேற்பார்வைச் செயற்பாடுகளில் ஈடுபடுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது |
| 3(5)(x) தவிசாளர், பங்குதாரர்களுடன் பயனுடைய தொடர்பாடலைப் பேணுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும், பங்குதாரர்களின் எண்ணங்கள் சபைக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்துவார். | இணங்கப்பட்டுள்ளது. வங்கியின் பிரதான பங்குதாரர் திறைசேரி யாகும் |
| 3(5)(xi) பிரதம நிறைவேற்று அலுவலர், வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் அலுவல்களின் நாளாந்த முகாமைத்துவத்திற்கு உச்ச நிறைவேற்றுத்தர பொறுப்பதிகாரியாக தொழிற்பாடுவார். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(6) சபை குழுக்களை நியமித்துள்ளது<br><br>3(6)(i) ஒவ்வொரு வங்கியும், இந்த பணிப்புக்களின் 3(6)(ii), 3(6)(iii), 3(6)(iv) மற்றும் 3(6)(v) ஆம் பணிப்புக்களில் தெரிவிக்கப்பட்டவாறு ஆகக்குறைந்தது நான்கு சபைக் குழுக்களை கொண்டிருக்கும். ஒவ்வொரு குழுவும், சபைக்கு நேரடியாக அறிக்கை செய்யும். அனைத்து குழுக்களும், குழுவின் தவிசாளரின் மேற்பார்வையின் கீழ் கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல், பிரமாணக்குறிப்புக்களை, பதிவுகளைப் பேணுதல் போன்றவற்றிற்காக செயலாளரொருவரை நியமிக்கும். சபையானது, ஒவ்வொரு குழுவினது செயலாற்றகை மீதும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அவற்றின் கடமைகள் மற்றும் பங்குகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(6)(ii) பின்வருகின்ற ஒழுங்குகள் கணக்காய்வுக் குழு தொடர்பில் பிரயோகிக்கப்படும்:<br>அ) குழுவின் தவிசாளர், கணக்கீடு மற்றும் அல்லது கணக்காய்வில் தகைமைகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டிருக்கின்ற நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராக இருப்பார். | இணங்கப்பட்டுள்ளது |
| ஆ) குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பார்களாக இருப்பர். | இணங்கப்பட்டுள்ளது |
| இ) குழு, பின்வருகின்ற தொடர்பான அலுவல்கள் மீது | |

| | |
|---|---|
| பரிந்துரைகளைச் செய்யும்:<br>(*i*) கணக்காய்வு சேவைகளுக்கான வெளிக் கணக்காளரின் நியமனம், உரிய நியதிச்சட்டங்களுடன் இணங்கும் வகையில் வழங்கப்படும்;<br>(*ii*) மத்திய வங்கியின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துல் கணக்காய்வாளர்களுக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்படு கின்றது;<br>(*iii*) உரிய கணக்கீட்டுக் நியமங்களின் பிரயோகம்; அத்துடன்<br>(*iv*)கணக்காய்வாளரின் சேவைக் காலப்பகுதி, கணக்காய்வுக் கட்டணம் மற்றும் ஏதேனும் இராஜினாமா அல்லது பணி நீக்கம்; குறித்த கணக்காய்வு பங்காளர், முன்னைய காலம் பூர்த்தி செய்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் மீண்டும் கணக்காய்வில் ஈடுபடுதலாகாது. | வெளிக் கணக்காய்வாளர்கள், கணக்காய்வாளரின் ஆலோசனையுடன் நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்றனர் |
| ஈ) குழுவானது, வெளிக் கணக்காயவாளரின் சுதந்திரம் பற்றி மீளாய்ந்து,கண்காணிப்பதுடன், கணக்காய்வுச் செயன்முறையின் சுதந்திரம், பாரபட்சம் மற்றும் பயனுறுதி என்பன ஏற்புடைத்தான நியமங்களின் சிறந்த நடைமுறைகளுக்கமைவானவை. | இணங்கப்பட்டுள்ளது |
| உ) குழு, உரிய நியதிச்சட்டங்கள், ஒழுங்குகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் அனுமதிக்கப்படுகின்ற கணக்காய்வற்ற சேவைகளை வழங்குவதற்கு வெளிக் கணக்காய்வாளரொருவர் ஈடுபடுவதன்பேரில் கொள்கை யொன்றினை விருத்திசெய்வதுடன், நடைமுறைப்படுத்தும். அவ்வாறு செய்கையில், குழு, வெளிக் கணக்காய்வாளரின் சுதந்திரம் அல்லது பாரபட்சத்திற்கு கணக்காய்வற்ற சேவை வெளிக் கணக்காய்வாளரினால் பாதிப்பு ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தும். கணக்காய்வற்ற சேவை ஏற்பாட்டுடன் தொடர்புடைய வெளிக் கணக்காய்வாளரின் சுதந்திரம் அல்லது பாரபட்சத்தை மதிப்பிடும்போது குழு பின்வருவனவற்றைக் கவனத்தில்கொள்ளும்.<br>I. கணக்காய்வற்ற சேவையை வழங்குபருக்குப் பொருத்தமான தாக கணக்காய்வு நிறுவனத்தை ஆக்குவதற்கான திறன்கள் மற்றும் அனுபவத்தை அது கொண்டிருக்கின்றதா;<br>II. வெளி கணக்காய்வாளரின் மூலமான அத்தகைய சேவையின் ஏற்பாடுகளிலிருந்தான விளைவிலான கணக்காய்வு நடத்தையில் பாரபட்சம் மற்றும் /அல்லது சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் இல்லையென்பதை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்புகள் உள்ளனவா; அத்துடன்<br>III. கணக்காய்வற்ற சேவையின் தன்மை, தொடர்புபட்ட கட்டணத்தின் மட்டங்கள், தனிப்பட்டரீதியில் கட்டணத்தின் மட்டங்கள் மற்றும் கணக்காய்வு நிறுவனம் தொடர்பில் மொத்தம் மற்றும் வெளி கணக்காய்வாளரின் பாரபட்சம் மற்றும் /அல்லது சுதந்திரத்திற்கு ஏதேனும் அச்சுறுத்தலைக் கொண்டிருக்கின்றதா. | இணங்கப்பட்டுள்ளது |
| ஊ)குழு, கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்னர், பின்வருவன உள்ளடங்கலாக கணக்காய்வின் தன்மை மற்றும் கணக்காய்வின் செயற்பரப்பு பற்றி கலந்தாலோசித்து, முடிவுசெய்யும்.<br>(*i*) நிதி அறிக்கையிடல் மீதான கூட்டு ஆளுகை மற்றும் முகாமைத்துவ அகக் கட்டுப்பாடு தொடர்பில் உரிய | இணங்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| பணிப்புகளுடன் வங்கி இணங்குவது பற்றிய மதிப்பீடொன்று;<br>(*ii*) உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கையிடல் கடப்பாடுகளுக்கமைவான வெளி நோக்கங்களுக்கான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல்; அத்துடன்<br>(*iii*) ஒரு கணக்காய்வு நிறுவனத்திற்கு மேலாக ஈடுபட்டிருக்கின்ற விடத்து நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு. | |
| எ) குழு, வங்கியின் நிதிக் கூற்றுக்கள், அதனது ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தலுக்காகத் தயரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் மற்றும் அதனத்து கொள்ளப் பட்டிருக்கின்ற முக்கியமான நிதி அறிக்கையிடல் தீர்ப்புக்களின் நன்மதிப்பினைக் கண்காணிக்கும் நோக்கில் வங்கியின் நிதித் தகவல்களை மீளாயும். சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், வங்கியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகளை மீளாய்வதில், குழு பின்வருவன மீது குறிப்பாக கவனம்செலுத்தும்.<br>(*i*) முக்கியமாக தீர்ப்பளிக்கும் விடயப்பரப்பு ;<br>(*ii*) கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏதேனும் மாற்றங்கள் ;<br>(*iii*) கணக்காய்விலிருந்து ஏற்பட்ட முக்கியமான சீராக்கல்கள் ;<br>(*iv*) நிறுவனத்தின் தொடர்ச்சி பற்றிய அனுமானம் ; அத்துடன்<br>(*v*) உரிய கணக்கீடு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பா்டு | இணங்கப்பட்டுள்ளது |
| ஏ) குழு, இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வுகளிலிருந்து எழுகின்ற விடயங்கள்,பிரச்சனைகள் மற்றும் ஒதுக்கங்கள் மற்றும் தேவையாயின், பிரதான முகாமைத்து நபர் வருகைதராதபோது கலந்தாலோசிக்க வேண்டிக் தேவைப்படும் அந்த விடயங்கள் உள்ளடங்கலாக கணக்காய்வாளர் கலந்தாலோசிக்கி விரும்புகின்ற பிற விடயங்கள் பற்றி கலந்தாலோசிக்கும். | அத்தகைய பிரச்சனைகள் சபைக்கு அறிவிக்கப்படவில்லை |
| ஐ) குழு, வெளிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலை மீளாயும். | இணங்கப்பட்டுள்ளது |
| ஒ) குழு, வங்கியின் அகக் கணக்காய்வுத் தொழிற்பாடு தொடர்பில் பின்வருகின்ற நடவடிக்கைகயை எடுக்கும்.<br>I. அகக் கணக்காய்வுத் துறையின் செயற்பரப்பு, தொழிற்பாடுகள் மற்றும் வளங்களின் போதுமாந்தன்மையை மீளாய்தல் மற்றும் துறையானது அதனது வேலைகளை ஆற்றுவதற்குத் தேவையான அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது என்று திருப்திப்படுதல்;<br>II. அகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை மீளாய்தல் மற்றும் அகக் கணக்காய்வுத் துறையின் பரிந்துரைகளின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை தேவையானவிடத்து உறுதிப்படுத்தி அகக் கணக்காய்வுச் செயன்முறையின் பெறுபேறுகள்;<br>III. அகக் கணக்காய்வுத் துறையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பதவியினர் உறுப்பினர்களின் செயலாற்றுகையின் ஏதேனும் மதிப்பீட்டை மீளாய்தல்;<br>IV. தலைவர், சிரேஷ்ட பதவியினர் உறுப்பினர்களின் ஏதேனும் நியமனம் அல்லது பணி முடிவுறுத்தல் மற்றும் அகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் வெளிவள சேவை | இணங்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| வழங்குநர்கள் பற்றிய பரிந்துரைப்பு ;<br>V. குழு, பிரதம அகக் கணக்காய்வாளர், ஏதேனும் வெளிவள சேவை வழங்குநர்கள் உள்ளடங்கலாக அகக் கணக்காய்வுத் துறையின் சிரேஷ்ட பதவி உறுப்பினர்களின் இராஜினா மாக்களை மதிப்பிட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் அகக் கணக்காய்வுத் தொழிற்பாடு அதன் கணக்காய்வுச் செயற்பாடுகள் சுதந்திரமானவை என்பதுடன், இது, பாகுபாடின்றி தேர்ச்சியுடன், மிகவும் தொழில்சார் கவனிப்புடன் ஆற்றப்படு கின்றது என்பதையும் உறுதிப்படுத்துதல். | |
| ஓ) குழு அக விசாரணைகளின் பிரதான காண்பிப்புகள் மற்றும் அதனகத்து முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை கவனத்தி லெடுக்கும்; | இணங்கப்பட்டுள்ளது |
| ஔ) பிரதம நிதி அலுவலர், பிரதம அகக் கணக்காய்வாளர் மற்றும் வெளிக் கணக்காய்வாளரின் பிரதிநிதியொருவர் சாதாரணமாக கூட்டங்களிற்கு சமூகமளிக்கலாம்.ஏனைய சபை அங்கத்தவர்கள் மற்றும் பரதம நிறைவேற்று அலுவலர்களும், குழுவின் அழைப்பின்பேரில் சட்டங்களுக்குச் சமூகமளிக்கலாம். எனினும், ஆண்டிற்கு இருமுறை குழு, தற்போதிருக்கின்ற நிறைவேற்று பணிப்பாளர்கள் இன்றி வெளிக் கணக்காளர்களைச் சந்திக்கமுடியும். | இணங்கப்பட்டுள்ளது |
| க) குழுவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.<br>(*i*) விசாரணை நியதிகளிலிருக்கின்ற ஏனைய விடயங்களை விசாரிப்பதற்கு வெளிப்படையான அதிகாரம் ;<br>(*ii*) அவ்வாறு செய்வதற்கு அதற்குத் தேவையான வளங்கள்;<br>(*iii*) தகவலுக்கான முழுமையான அணுகுவழி ; அத்துடன்<br>(*iv*) வெளி தொழில்சார் ஆலோசனையைப் பெறுவதற்கான அதிகாரம் மற்றும் தேவையாயின் உரிய அனுபவத்துடன் வெளியாளர்களை சமூகமளிப்பதற்கு அழைப்பதற்கு. | இணங்கப்பட்டுள்ளது |
| கா) குழு, கலந்துரையாடுவதற்கான பிரச்சனைக்கான உரிய அறிவித்தலுடன் கிரமமாக கூடுவதுடன், அதன் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை உறுவதில் அதன் தொகுப்பினை பதிவுசெய்யும் | இணங்கப்பட்டுள்ளது |
| கி) சபையானது, பின்வருவனவற்றை விளக்கமான வகையில் வெளிப்படுத்தும்.<br>(*i*) கணக்காய்வுக் குழுச் செயற்பாடுகளின் விபரங்கள்;<br>(*ii*) ஆண்டில் நடந்த கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை;<br>(*iii*) அத்துடன் அத்தகைய கூட்டங்களில் ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரின் சமூகமளிப்பு பற்றிய விபரங்கள். | இணங்கப்பட்டுள்ளது |
| கீ) குழுவின் செயலாளர், (கம்பனியின் செயலாளராக அல்லது அல்லது அகக்கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் தலைவராக இருக்கக் கூடியவர்) குழுக் கூட்டங்களின் பிரமாணக் குறிப்புக்களை பதிவுசெய்து பேணுவார். | அகக் கணக்காய்வுத் தொழிற் பாட்டின் தலைவர் குழுவின் செயலாளர் என்பதுடன் இணங்கப்பட்டுள்ளது |
| கு) குழு, வங்கியின் பணியாளர்கள், நிதி அறிக்கையிடல், அகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களில் சாதகமான தகுதியின்மை பற்றி நம்பத்தகுந்த, அக்கறையை அதிகரிக்கின்ற ஒழுங்குகளை மீளாயும். இதன்படி, குழு, உரிய ஒழுங்குகள் அத்தகைய விடயங்களின் நியாயமான, சுதந்திரமான விசாரணைக்கான உரிய ஒழுங்குகள் நடைமுறையில் இருக்கின்றன என்றும் பெருத்தமான பின்பற்றல் செயற்பாட்டிற் | இணங்கப்பட்டுள்ளது |

| | |
|---|---|
| காகவும், வெளிக் கணக்காய்வாளருடனான வங்கியின் உறவுகளை மேற்பார்வை செய்வதற்கா பிரதான பிரதிநிதித்துவ அமைப்பாகச் செயற்படுவதனையும் குழு உறுதிசெய்யும். | |
| 3(6)(iii) பின்வருகின்ற ஒழுங்குகள், மனித வள மற்றும் ஊதியக் குழுதொடர்பில் பிரயோகிக்கப்படும் | |
| அ) குழு, பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ நபர்கள் தொடர்பில் ஊதியக்கொள்கையைத் (வேதனங்கள், படிகள் மற்றும் ஏனையநிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கும். | நிறைவேற்றுத்தர பணிப்பாளர்கள், தவிசாளரின் ஊதியங்கள் மற்றும் கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதற் கான பணிப்பாளர்களின் கட்டணங்கள், நிதி, திட்டமிடல் அமைச்சினால் தீர்மானிக்கப்படு கின்றன. முகாமைத்துவத்தின் வேதனங்கள், ஊதியக் குழுவினால் தீர்மானிக்கப் படுவதுடன், சபை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சினால் தீர்மானிக்கப்படுகின்றன. |
| ஆ) குழுவானது, பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர், மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான இலட்சியங்கள் மற்றும் இலக்குகளை உருவாக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| இ) குழு, உருவாக்கப்படுகின்ற இலட்சியங்கள் மற்றும் இலக்குகள் சார்பான பிரதம நிறைவேற்று அலுவலர், மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ நபர்களின் செயலாற்றுகையை மதிப்பிடும் என்பதுடன், கால அடிப்படையில், செயலாற்றுகையின் அடிப்படையிலமைந்த ஊக்குவிப்புகளின் ஊதியம், அனுகூலங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வதற்கான அடிப்படை யைத் தீர்மானிக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| ஈ) பிரதம நிறைவேற்று அலுவலர், பிரதம நிறைவேற்று அலுவலருடன் தொடர்புபட்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடும் போது தவிர குழுவின் அனைத்துக் கூட்டங்களிற்கும் சமூகமளிப்பார். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(6)(iv) பின்வருகின்ற ஒழுங்குகள் பெயர்குறிப்பீட்டு குழு தொடர்பில் பிரயோகிக்கப்படும். | |
| அ) குழு, புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ நபர்களைத் தெரிவு செய்தல் / நியமித்தலுக்கான நடைமுறையொன்றை நடைமுறைப் படுத்தும். | சபை நியமிப்புக் குழு பிரதான முகாமைத்துவ ஆட்களை நியமிப்பதுடன், நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். |
| ஆ) குழு, சபையின் ஒட்டுமொத்தப் பொறுப்புக்களை முன்னெடுப்பதில் சம்பந்தப்பட்ட பணிப்பாளரினால் ஆற்றப்பட்ட செயலாற்றுகை மற்றும் பங்களிப்பினைக் கவனத்திலெடுத்து தற்போதைய பணிப்பாளர்களை மீளத் தெரிவுசெய்வதனைக் கவனத்திலெடுப்பதுடன் பரிந்துரை செய்யும் (அல்லது பரிந்துரை செய்யாது). | வங்கியின் அமைப்பு அகவிதி களுடன் இணங்கும் வகையில் நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் செயலாளரினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். |
| இ) குழு, பிரதம நிறைவேற்று அலுவலர் பதவி மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவி உயர்வினைக் கவனத்திலெடுப்பதற்கான தகுதிக்காக தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள், அனுபவங்கள் மற்றும் முக்கியமான மனப்பாங்குகள் போன்ற அத்தகைய வகைப்பாட்டினை உருவாக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| ஈ)குழு, பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்கள், பணிப்பு 3 (3) இல் தரப்பட்டுள்ள மற்றும் நியதிச்சட்டங்களில் தெரிவிக்கக்கட்டுள்ள வகைப்பாட்டில் பதவி வகிப்பதற்கு பொருத்தமான, சரியான நபர் | பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆட்கள் தொடர்பில் இணங்கப் பட்டுள்ளது. |

| | |
|---|---|
| என்பதை உறுதிப்படுத்தும். | |
| உ) குழு, மேலதிக புதிய நிபுணர்களுக்கான ஒழுங்குகள் மற்றும் ஓய்வுபெறுகின்ற பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான பின்னுரிமை பற்றிய ஒழுங்குபடுத்தல்கள் பற்றி காலத்திற்குக் காலம் கவனத்திலெடுப்பதுடன், பரிந்துரைக்கும். | பணிப்பாளர்கள் திறைசேரியினால் நியமிக்கப்படுவதனால், இது பணிப்பாளர்களுக்கு பிரயோகிக் கப்படுவதில்லையாகையால் பிரதான முகாமையாளர்கள் தொடர்பில் மட்டுமே 2012 இல் நிறைவுசெய்யப்பட்டது. |
| ஊ) குழு, சுதந்திரமான பணிப்பாளரொருவரினால் தலைமை தாங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பெரும்பான்மையான சுதந்திரமான பணிப்பாளர்களுடன் ஊருவாக்கப்படுதலும் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது. குழு சபையினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளரினால் தலைமை தாங்கப்படுகின்றது |
| 3(6)(v) ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு தொடர்பில் பின்வருகின்ற ஒழுங்குகள் பிரயோகிக்கப்படும்:<br><br>அ) குழு, பரந்தபட்ட இடர் வகைப்பாடுகளை உதாரணமாக கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடுசார் மற்றும் உபாய இடர்களை மேற்பார்வையிடுகின்ற ஆகக்குறைந்தது மூன்று பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களைக் கொண்டிருக்கும். இந்த குழு, பிரதான முகாமைத்துவ நபர்களுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்படுவதுடன், குழுவிற்கு குறித்தொதுக்கப் பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்பின் கட்டுக்கோப்பிற்குள் சபை சார்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும். | இணங்கப்பட்டுள்ளது. |
| ஆ) குழு, அனைத்து இடர்களையும் உதாரணமாக வங்கிக்கான கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடுசார் மற்றும் உபாய இடர்களை, பொருத்தமான இடர் சுட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்களினூடாக மாதாந்த அடிப்படையில் மதிப்பீடுகளை மேற்கொள்ளும். துணைக் கம்பனிகள் மற்றும் இணைந்த கம்பனிகளைப் பொறுத்தவரையில், இடர் முகாமைத் துவம், வங்கி அடிப்படையிலும், குழு அடிப்படையிலும் செய்யப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது. வங்கிக்கு துணை அல்லது இணைந்த கம்பனிகள் தற்போது இல்லை. புதிய தீர்மானமொன்று உருவாக் கப்பட்டுள்ளதுடன், பதவியினர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர் மற்றும் புதிய பதவியினரைச் சேர்ப்பதற் கான திட்டங்கள் |
| இ) குழு, குறித்த இடர்களைத் தெரிவிப்பதற்காக, கொடுகடன் குழு மற்றும் சொத்து-பொறுப்புக் குழுவினது போதுமாந்தன்மை மற்றும் பயனுறுதி பற்றி மீளாயும் என்பதுடன், இந்த இடர்களை முகாமை செய்வதற்கு குழுவினால் குறிப்பிடப்பட்டவாறான அளவசார், தரம்சார் இடர் வரையறைகளையும் மீளாயும | இணங்கப்பட்டுள்ளது. |
| ஈ) குழு, வங்கியின் கொள்கைகள், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்படுத்தல்களின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விவேகமான மட்டங்களுக்கு அப்பாற்பட்ட மட்டத்தில் இருக்கின்ற அத்தகைய சந்தர்ப்பத்தில் குறித்த இடரின் தாக்கத்தைத் தணிப்பதற்கு உடனடியான உரிய நடவடிக்கையை எடுக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| உ) குழு, நாளதுவரைப்படுத்தப்பட்ட வியாபார தொடர்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலான அனைத்து இடர் முகாமைத்துவ விடயங்களையும் மதிப்பிடுவதற்காக ஆகக்குறைந்தது காலாண்டில் கூடும். | இணங்கப்பட்டுள்ளது |
| ஊ) குழு, குறித்த இடர்களை இனங்காண்பதற்கும், குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு உடனடியான சரியான நடவடிக்கை களை எடுப்பதற்குத் தவறுகின்ற பொறுப்புவாய்ந்த அலுவலர் களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும். | இணங்கப்பட்டுள்ளது |
| எ) குழு, சபையினது எண்ணங்கள், ஒருப்பாடு மற்றும் / அல்லது குறித்த பணிப்புரைகளைக் கோரி சபையினது ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு வாரத்திற்குள்ளும் இடர் மதிப்பீட்டு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கும் | இணங்கப்பட்டுள்ளது |
| ஏ) குழு, சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குபடுத்தல் வழிகாட்டல் கள், அகக்கட்டுப்பாடுகள் மற்றும் அனைத்து வியாபாரத் தொழிற் பாட்டுப் பரப்பிலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் வங்கி | இந்தப் பதவியில் சுயாதீன இணக்கப்பாட்டு அலுவலரை நியமிப்பதற்கு தொழிற்பாடுகள் |

| | | |
|---|---|---|
| | இணங்குவதனை மதிப்பிடுவதற்கு இணக்கப்பாட்டு தொழிற் பாடொன்றினை தாபிக்கும். பிரதான முகாமைத்துவ நபர் களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அர்ப்பணிப்புள்ள இணக்கப்பாட்டு அலுவலர் இணக்கப்பாட்டு தொழிற்பாடுகளை ஆற்றுவதுடன், கால அட்டவணையில் குழுவிற்கும் அறிவிற்கும். | சிரேஷ்ட முகாமையாளரினால் தற்போது முகாமைத்துவத் திட்டங்கள் மேற்கொள்ளப்படு கின்றன. |
| 3(7) | தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் | வங்கிக்கு துணை அல்லது இணைந்த கம்பனிகள் இல்லை. பணிப்பாளர்கள் தமது ஆர்வங் களை சபைக் கூட்டங்களில் வெளிப்படுத்துகின்றனர். ஆர்வங் களை வெளிப்படுத்துகின்ற பதிவேடொன்று வங்கியினால் பேணப்படுகின்றது. தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டறிக்கையில் வெளிப் படுத்தப்படுகின்றன. |
| 3(7)(i) | சபை, இந்தப் பணிப்பின் நோக்கத்திற்காக எந்த நபருடனும் குறிப்பாக "தொடர்புபட்ட தரப்பினர்கள்" என்று கருதப்படக்கூடிய வாறான பின்வருகின்ற நபர்களுடன் வங்கியின் எந்த கொடுக்கல் வாங்கலிலிருந்தும் எழக்கூடிய அக்கறை தொடர்பான ஏதேனும் முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை களை எடுக்கும்.<br><br>அ) வங்கியின் ஏதேனும் துணை கம்பனிகள்;<br>ஆ) வங்கியின் ஏதேனும் இணைந்த கம்பனிகள்;<br>இ) வங்கியின் பணிப்பாளர்கள் எவரேனும்;<br>ஈ) ஏதேனும் வங்கியின் பிரதான முகாமைத்துவ நபர்;<br>உ) ஏதேனும் வங்கியின் பணிப்பாளர்களின் அல்லது பிரதான முகாமைத்துவ நபரின் நெருங்கிய உறவினர்;<br>ஊ) வங்கியில் முக்கிய அக்கறைகொண்ட பங்குதாரரொருவர் ;<br>எ) ஏதேனும் வங்கியின் பணிப்பாளர்களின் அல்லது ஏதேனும் வங்கியின் பணிப்பாளர்களின் நெருங்கிய உறவினர் அல்லது வங்கியில் முக்கிய அக்கறைகொண்ட பங்குதாரரொருவர் சம்பந்தமானது. | |
| 3(7)(ii) | இந்தப் பணிப்பினால் உள்ளடக்கப்படக்கூடிய உரிய தரப்பினரு டனான கொடுக்கல் வாங்களின் வகை பின்வருவனவற்றை உள்ளடக்கும்:<br><br>அ)நாணயச் சபையின் பணிப்புரைகளில் வரையறுக்கப்பட்ட வாறான ஆகக்கூடிய இடமளிப்புத் தொகைமீது எந்த வகையான இடமளிப்பினை வழங்குதல்,<br>ஆ)வைப்புக்களின் கடன்பெறுதல்கள் மற்றும் முதலீடுகள் வடிவத்தில் வங்கியின் எந்த பொறுப்புக்களையும் உருவாக்குதல்,<br>இ)வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ள நிதிசார் அல்லது நிதி சாராத தன்மையான எந்தசேவைகளின் ஏற்பாடு,<br>ஈ) முக்கியமான சொத்துவம், அந்தரங்கம் அல்லது அத்தகைய தரப்பினருக்கு அனுகூலங்களை வழங்கக்கூடிய உணர்வு பூர்வமான தகவல்களைப் பகிர்வதில் முன்னணியிலிருக்கக் கூடிய ஏதேனும் தரப்பினருக்கும் வங்கிக்குமிடையிலான அறிக்கையிடும் முறை மற்றும் தகவல் ஓட்டமுறையினை உருவாக்குதலும், பேணுதலும். | இணங்கப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| 3(7)(iii) | சபை, மேலே 3(7)(i) ஆம் பணிப்பில் வரையறுக்கப்பட்டவாறு உரிய தரப்பினர்களுடன் வங்கி ஒத்த அலுவல்களை ஆற்றுவதில் ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டதிலும் பார்க்க "அதிக சாதகமான உபசரிப்பு" என்பதை அத்தகைய தரப்பினர்களுக்கு வழங்கக்கக்கூடிய விதத்தில் கொடுக்கல் வாங்கல்களில் வங்கி ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தும்:<br><br>அ) சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு, வங்கியின் ஒழுங்கு படுத்தல் மூலதனத்தின் முன்னெச்சரிக்கையான வீதத்தினை விஞ்சுகின்ற உரிய தரப்பினர்களுக்கு (மொத்த தேறயி இடமளிப்பு" என்பதை வழங்குதல். இந்த உட் பணிப்பின் நோக்கத்திற்காக,<br><br>I. "இடமளிப்பு" என்பது 2007 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க வங்கியியல் சட்டம், பணிப்புரைகளில் வரையறுக்கப்பட்ட இடமளிப்பின் ஆகக்கூடிய தொகையைக் கருதுகின்றது.<br>II. "மொத்தத் தேறிய இடமளிப்பு" மொத்த இடமளிப்பிலிருந்து, வங்கியின் பங்கு மூலதனம் மற்றும் 5 வருடங்கள் அல்லது அதற்கு மேலான முதிர்ச்சியுடனான பெறுகடன் ஆவணங்களில் அத்தகைய உரிய தரப்பினரால் செய்யப்பட்ட பணப் பிணைத்தொகை மற்றும் முதலீடு களிலிருந்து கழிப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது.<br><br>ஆ) தொடர்பற்ற ஒப்பிடத்தகு எதிர் தரப்பினருடன் ஒப்பிடத்தகு கொடுக்கல்வாங்கலுக்கான வங்கியின் வைப்பு வீதத்திலும் பார்க்க சிறந்த கடன்கொடுக்கும் வீதம் அல்லது செலுத்து தலிலும் பார்க்க குறைந்த வட்டி வீதத்தினை அறவிடுதல்;<br>இ)தொடர்பற்ற தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட அலுவல் களின் சாதாரண நடைமுறையில் வழங்கப்பட்ட நியதிகளுக்கு அப்பால் விரிவாகின்ற சாதகமான நியதிகள், வர்த்தக நட்டங்கள் மற்றும் / அல்லது விட்டழிக்கும் கட்டணங்கள் / தரகுப்பணங்களை உள்ளடக்குகின்ற அத்தகைய சாதகமான நியதிகளுக்கு முன்னுரிமை கையாளுகையை வழங்குதல்;<br>ஈ)மதிப்பீட்டு நடைமுறையொன்றில்லாது தொடர்புபட்ட தரப்பினரிடயமிருந்து சேவைகளை வழங்குதல் அல்லது சேவைகளை பெறுதல்;<br><br>உ) சட்ட முறைப்படியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காக தேவைப்படுத்தப்பட்டவாறானவை தவிர, தொடர்புபட்ட தரப்பினருடன் உள்ளார்ந்த சொத்துவத்தை, அந்தரங்கம் அல்லது அன்றேல் உணர்வு பூர்வமான தகவலைப் பகிர்தலுக்கு இட்டுச்செல்கின்ற அறிக்கையிடல் முறைகள் மற்றும் தகவல் போக்கினைப் பேணுதல் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(7)(iv) | வங்கி, அத்தகைய இடமளிப்பிற்கு ஆதரவாக வாக்களிக்கின்ற சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்த்து பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டிற்குக் குறையாது வங்கியின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் அனுமதிக்கப்படுகின்ற அத்தகைய இடமளிப்பு இன்றேல் அதனது பணிப்பாளர்களுக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு எந்த இடமளிப்பினையும் வழங்குதலாகாது. இந்த இடமளிப்பு, நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு காலத்திற்குக் காலம் அத்தகைய பாதுகாப்பினால் காக்கப்படும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(7)(v) | அ) ஆளொருவருக்கு அல்லது ஆளின் நெருக்கமான உறவினருக்கு அல்லது ஆளொருவர் கணிசமான அக்கறையை கொண்டிருக்கின்ற ஏதேனும் விடயத்திற்கு | இணங்கப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| | வங்கியினால் இடமளிக்கப்பட்டிருக்கின்றவிடத்து, ஆளொருவர் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் நாணயச் சபையினால் இந்த நோக்கத்திற்காக அனுமதிக்கக்கூடியவாறு தேவையான பாதுகாப்பினைப் பெறுவதற்கு வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| | ஆ) அத்தகைய பாதுகாப்பு, மேலே 3(7)(v)(a) ஆம் பணிப்பில் வழங்கப்பட்டவாறான காலப்பகுதியினால் வழங்கப்படாத விடத்து, வங்கி, ஏதேனும் இடமளிப்பின் செலுத்த வேண்டிய ஏதேனும் தொகை, வட்டி ஏதேனுமிருப்பின் அதனுடன் இடமளிப்பு வழங்கப்பட்ட அந்த நேரத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் அல்லது அத்தகைய பணிப்பாளரின் நியமனத் திகதியிலிருந்து பதினெட்டு மணித்தியாலங்கள் காலாவதியாகின்றபோது எது முந்தியதோ அதில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும். | எந்த நிகழ்வும் ஏற்படவில்லை |
| | இ)மேலேயுள்ள உப பணிப்புக்களுடன் இணைங்கத் தவறுகின்ற பணிப்பாளர் எவரும், பணிப்பாளர் பதவியை வெறிதாக்கிய தாக கருதப்படுவார் என்பதுடன், வங்கி அத்தகைய விடயத்தை பொது மக்களுக்கு வெளிப்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது |
| | ஈ)எனினும், இந்தத் தீர்மானம், இடமளிப்பு வழங்கப்பட்ட நேரத்தில் வங்கியின் பணியாளராக இருந்த பணிப்பாளருக்கு மற்றும் அத்தகைய வங்கியின் அனைத்துப் பணியாளர் களுக்கும் பிரயோகிக்கக்கூடிய திட்டத்தின் கீழ் அனுமதிக்கப் பட்டிருந்த இடமளிப்பிற்கு பிரயோகிக்கப்படுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது |
| 3(7)(vi) | வங்கியொன்று, மேலே 3(7)(v) ஆம் பணிப்பில் அனுமதிக் கப்பட்டவாறு இடமளிப்பு தொடர்பில் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறு அத்தகைய வங்கியின் பணியாளருக்கு அல்லது பிணைப்பொறுப்பு பாதுகாக்கப்படு கின்றபோது பிரயோகிக்கப்படக்கூடிய திட்டத்தின் அடிப்படை தவிர்ந்த, எந்த பணியாளருக்கும் அல்லது அத்தகைய பணியாளரின் நெருங்கிய உறவினருக்கும் அல்லது அந்தப் பணியாளர் அல்லது நெருங்கிய உறவினர் கொண்டிருக்கின்ற கணிகமான அக்கறையுள்ள எந்த விடயத்திற்கும் விட்டழிக்கும் கட்டணங்கள் / தரகுப்பணங்கள் தொடர்பில் எந்த இடமளிப் பினையோ அல்லது "அதிக சாதகமான உபசரிப்பு" என்பதையோ வழங்குதலாகாது.<br><br>உரிய தரப்பினர்களுடன் வங்கி ஒத்த அலுவல்களை ஆற்றுவதில் ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டதிலும் பார்க்க "அதிக சாதகமான உபசரிப்பு" என்பதை அத்தகைய தரப்பினர்களுக்கு வழங்கக்கக்கூடிய விதத்தில் கொடுக்கல் வாங்கல்களில் வங்கி ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3(7)(vii) | மேலே 3(7)(v) மற்றும் 3(7)(vi) ஆம் பணிப்பின் கீழ் வங்கியினால் இடமளிப்பு வழங்கப்படமாட்டாது அல்லது அத்தகைய இடமளிப்பின் ஏதேனும் பகுதி அல்லது அதன்மீதான ஏதேனும் அக்கறை நாணயச் சபையின் முன் அங்கீகாரமின்றி அனுப்பப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய அங்கீகாரமற்ற ஏதேனும் அனுப்புகை வெறிதாக்கப்படும் என்படுதன் எந்தப் பயனையும் பெறாது | இணங்கப்பட்டுள்ளது |
| 3(8) | வெளிப்படுத்தல்கள் | இணங்கப்பட்டுள்ளது |
| 3(8)(i) | வங்கியானது, பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும். (அ) வருடாந்தம் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் காலாண்டு நிதிக் கூற்றுக்கள், மேற்பார்வையாளர்கள், ஒழுங்குபடுத்தும் அதிகாரிகள், மற்றும் ஏற்புடைத்தான | |

| | |
|---|---|
| கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டு, வெளியிடப் பட்டுள்ளது, அத்துடன் (ஆ) அத்தகைய கூற்றுக்கள் சுருக்கமாக சிங்களம் தமிழ், ஆங்கில மொழிகளில் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. | |
| 3(8)(ii) சபையானது, பின்வருகின்ற ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்கள் ஆண்டறிக்கையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும்.<br><br>அ) வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், குறித்த வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக பிரயோகிக்கப்படக் கூடிய கணக்கீட்டு நியமங்களுடன் இணைந்ததாக தயாரிக் கப்பட்டுள்ளது என்ற கூற்று | இணங்கப்பட்டுள்ளது |
| ஆ) நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கு நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்று வங்கியின் அகக்கட்டுப்பாட்டு முறைமை மீது வங்கியின் அறிக்கையொன்று உறுதிப்படுத்து கின்றது. வெளிவாரி நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கமைவாகச் செய்யப் பட்டுள்ளன. | இணங்கப்பட்டுள்ளது |
| இ) 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் தயாரிக்கப்பட்ட அல்லது பிரசுரிக்கப்பட்ட ஏதேனும் கூற்றுக்கள் தொடர்பில் மேலே பணிப்பு 3(8)(ii)(b) இல் குறிப்பிடப்பட்டுள்ள அகக்கட்டுப்பாட்டு முறைமையின் பயனுறுதி மீதான வெளிக் கணக்காளர்களின் சான்றுப்படுத்தல். | இணங்கப்பட்டுள்ளது |
| ஈ) பணிப்பாளர்களின் பெயர்கள், பொருத்தமாந்தன்மை மற்றும் சொத்துவம், வங்கியுடனான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணங்கள் ஊதியங்கள் உள்ளடங்கலான விபரங்கள். | இணங்கப்பட்டுள்ளது |
| உ) உரிய தரப்பினரின் ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் 3(7)(iii) இல் வரையறுக்கப்பட்டவாறான மொத்த தேறிய இடமளிப்பு அனுமதிக் கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் அனுமதிக்கப் பட்டுள்ள தேறிய இடமளிப்பானது,வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தின் வீதமாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது (104 ஆம் பக்கத்திலிருக்கின்ற "குறிப்பு 34") |
| ஊ) வங்கியினால் அதன் பிரதான முகாமைத்துவ நபர்களுக்குச் செலுத்திய ஊதியத்தின் மொத்தப் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட ஊதியம், வழங்கப்பட்ட இடமளிப்பு மற்றும் வங்கியில் செய்யப்பட்ட வைப்புக்கள் அல்லது முதலீடுகள் போன்ற அத்தகைய வங்கியினால் உருவாக்கப்பட்ட வகைப்பாடு களில் அதனது பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான வங்கிக் கொடுக்கல் வாங்கலின் மொத்தப் பெறுமதிகள். | இணங்கப்பட்டுள்ளது. 2012 ஆம் பிரதான முகாமைத்துவத்திற்குச் செலுத்தப்பட்ட மொத்த ஊதியம் 7.7 மில்லியன் தொகையாகும். |
| எ) 2010 சனவரி 01 ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடப்பட்ட வருடாந்த கூட்டு ஆளுகை அறிக்கைகளில் இந்தப் பணிப்பு களுக்கமைவாக வெளிக் கணக்காய்வாளரின் சான்றுப்படுத்தல். | இணங்கப்பட்டுள்ளது |
| ஏ) முன்னெச்சரிக்கையான தேவைப்பாடுகள், ஒழுங்குகள் சட்டங்கள் மற்றும் அகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏதேனும் முக்கிய இணக்கமின்மையைச் சரிப்படுத்துவற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுடன் இணங்குகின்ற விபரங்களைத் தெரிவிக் கின்ற அறிக்கையொன்று. | |

| | |
|---|---|
| ஐ) வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் காலங்கழிதல் மீதான ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை அக்கறைகள் அல்லது வங்கியின் மேற்பார்வையிடல் பணிப்பாளரினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள இந்த பணிப்புககளுடன் இணங்காமை பற்றிய குறிப்பு பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதற்கு நாணயச் சபையினால் பணிக்கப்பட்டால் அத்தகைய அக்கறைகளைத் தெரிவிப்பதற்கு வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் அதனைச் செய்தல் | |

# இடர் முகாமைத்துவம்

இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டின் வங்கியை ஒருங்கிணைத்துள்ள இடர் முகாமைத்துவக் குழுவானது, இலங்கையில் உரிமத்துவம் பெற்ற விசேடத்துவமிகு வங்கிகளுக்கான கூட்டு ஆளுகை மீது 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்பு நியதிகளின்படி வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் தாபிக்கப் பட்டுள்ளது. வங்கியை ஒருங்கிணைத்துள்ள இடர் முகாமைத்துவக் குழுவானது, வங்கியின் இடர் தொழிற்பாடுகளை முகாமை செய்கின்ற, மேற்பார்வை செய்கின்ற பணி இலக்கு உள்ளடக்குகின்ற அனைத்து இடர் முகாமைத்துவப் பொறுப்புக்களும் ஒப்படைக் கப்பட்டுள்ளதுடன், இலங்கை மத்திய வங்கி யினால் வழங்கப்பட்ட கூட்டு ஆளுகையின் பணிப்பாணை விதித் தொகுப்பினால் தேவைப் படுத்தப்பட்வாறு ஒழுங்கு விதிகளுடன் இணங்குகின்றமையை உறுதிப்படுத்துகின்ற சபையின் தொழிற்பாடு சார் குழுவாக தொழிற்படுகின்றது.

**குழுவின் அங்கத்தவர்கள்**

பின்வருவோர் பணிப்பாளர்கள் சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குழுவின் அங்கத்தவர்களாவர்

**திரு.பிரியங்க அல்கம (குழுவின் தவிசாளர்)**
**திரு.திலக் வணிகம (சட்டத்தரணி)**
**திரு.பாலித கமகே**

பொது முகாமையாளர், சிரேஷ்ட தொழிற்பாட்டு முகாமையாளர், சிரேஷ்ட கொடுகடன் முகாமையாளர், மனித வள அபிவிருத்தி மற்றும் தாபன சிரேஷ்ட முகாமையாளர், நிதி, திட்டமிடல் சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்ப சிரேஷ்ட முகாமையாளர்,கம்பனி செயலாளர், சட்ட முகாமையாளர் ஆகியோர் ஏனைய நிரந்தர அங்கத்தவர்களாவார்கள். வங்கியின் தவிசாளர் மற்றும் தொழிற்படும் பணிப்பாளர் அழைப்பின்பேரில் கூட்டங்களுக்குச் சமூகமளிக்கின்றனர். உதவிப் பொது முகாமையாளர் குழுவிற்கு செயலாளராகச் செயற்படுகின்றார்.

**இடர் முகாமைத்துவத்தின் குறிக்கோள்கள்**

இடர் முகாமைத்துவத்தின் குறிக்கோள், இடர் களைக் தணிக்கின்ற வேளையில் வாடிக்கை யாளர்களுக்கான உச்ச சேவைக்காக புத்துருவாக்க ஆக்கப் பொருட்களை விருத்தி செய்வதில் தொழில் அலகுகளிற்கு ஆதர வளித்தலாகும். தொழில் அலகின் பலம் மற்றும் எண்ணம் இடர் முகாமைத்துவம் தொடர்பாக தேவைப்பட்ட உயர் தகவல் மற்றும் அறிவினைப் பெறுவதற்கான போட்டியை நோக்கிச் செயற்படுவதாகும்.

**வங்கியை ஒருங்கிணைத்துள்ள இடர் முகாமைத்துவக் குழுவின் பங்கு**

குழுவானது, கொடுகடன், சந்தை, திரவத் தன்மை, தொழிற்பாடு, சட்டம் மற்றும் நற் பெயருக்கான தீங்கு போன்ற பிரதான இடர் வகைப்பாடுகளை மேற்பார்வை செய்கின்றது. குழுவின் ஆணைக்குழு பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது.

- பொது முகாமையாளர், சிரேஷ்ட தொழிற்பாட்டு முகாமையாளர், சிரேஷ்ட கொடுகடன் முகாமையாளர், மனித வள அபிவிருத்தி மற்றும் தாபன சிரேஷ்ட முகாமையாளர், நிதி, திட்டமிடல் சிரேஷ்ட முகாமையாளர், தகவல் தொழில்நுட்ப சிரேஷ்ட முகாமையாளர் ஆகியோர் சபையுடன் நெருக்கமாக வேலையாற்றுவதுடன், இடர்களை இனங்காணுதல் மற்றும் குறைத்தல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பர்.
- கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு, சட்டம் என்பவற்றின் போதிய அளவினையும் மற்றும் வங்கியின் நற்பெயருக்கான தீங்கு பற்றி மதிப்பிடுதல்.
- முகாமைத்துவ மட்டக் குழுக்கள் (ALCO, கொடுகடன் மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் அனைத்தினதும் நிறைவு மற்றும் பயனுறுதியை மீளாய்தல்.
- வங்கிக் கொள்கைகளின் நிறைவு, ஒழுங்குபடுத்தல், மேற்பார்வைத் தேவைப் பாடுகள் மற்றும் குறித் இடர்கள் விவேகமான மட்டத்திற்கும் அப்பாலிருக்கின்ற அத்தகைய இடர்களின் பாதிப்பைக் குறைப்பதற்கு சரியான நடவடிக்கை எடுத்தல் என்பவற்றை மதிப்பிடுதல்.

வங்கியின் இடர் முகாமைத்துவ கொள்கைகள், இடர் முகாமைத்துவம் தொடர்பான வங்கியின் தத்துவங்களின் பொழிப்பினை வழங்குகின்றது. சபையானது, கொடு கடன் இடர், சந்தை இடர், தொழிற்பாட்டு இடர், தொழிலைத் தொடருவதற்குத் திட்டமிடுதலுக்கான இடர் முகாமைத்துவ கொள்கைகளினூடாக பல்வேறு இடர்களை முகாமை செய்வதற்கும், கண்காணிப்பதற்குமான விரிவானதொரு இடர் உபாயமொன்றிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வங்கியின் விரைவான வளர்ச்சி காலத்தில் தாக்கத்தைக் புரிந்துகொள்வதற்கு மிகவும் நடைமுறையான வகையில இடர்களை ஆரம்பத்தில் இனங்காணுதல்,தவிர்க்கமுடியாத மாற்றங்கள் அவதானிக்கப்பட வேண்டும் என்பதுடன், இடர் முகாமைத்துவத்தைப் பலப்படுத்துவதற்கான தேவைப்பாடு மிகவும் முக்கியமானதாகும்.

ஆய்வாண்டு காலப்பகுதியில் மற்றும் 2013 சனவரியில் குழு காலாண்டு அடிப்படையில் கூடியிருந்ததுடன், கடன் பிரிவு, முக்கிய இடர்சுட்டிகள், திரவத்தன்மையின் நிலை மற்றும் வங்கியின் சந்தை இடர் போன்ற இடர் பிரிவுகளை மீளாய்ந்திருந்தது. குழுவானது, இந்த ஆண்டு காலப்பகுதியில் கொடு கடன் கொள்கை, திரவத்தன்மை பற்றிய கொள்கை, முதலீட்டுக் கொள்கை, தொழிற்பாடுசார் கையேடு மற்றும் தொழில் தொடர்ச்சிக்கான திட்டம் என்பவற்றை அங்கீகரித்திருந்தது.

#### கொடுகடன் இடர் முகாமைத்துவம்

கொடுகடனானது, மூலதன இழப்பு அல்லது கடன்பெற்றவர் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு தவறுவதிலிருந்து அகற்றப்படுகின்ற நிதி வழங்கலொன்றின் நட்டம் அல்லது அன்றேல் ஒப்பந்த கடப்பாட்டினை நிறைவேற்றுதல் என்று விபரிக்கப்படுகின்றது. கொடுகடன் இடரானது, கடன்பெற்றவர் தற்போதைய கடனைச் செலுத்துவதற்கு எதிர்கால பண ஓட்டத்தைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற போதெல்லாம் எழுகின்றது.

முதலீட்டாளர்கள், கடன்பெற்றவர் அல்லது கடனை வழங்கியவரிடமிருந்தான வட்டிக் கொடுப்பனவுகளின் வழி மூலம் கொடுகடன் இடரினை ஊகிப்பதற்காக ஈடுசெய்யப்பட்டுள்ளது.

கொடுகடன் இடர், முதலீட்டின் முக்கியமான வருவாயுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டு, அவர்களது தவிர்க்கமுடியாத கொடுகடன் இடர் தவிர்க்கமுடியாது சாதகமாக தொடர்புபடுகின்ற பிணை மீதான ஈடாக இருந்து மிகவும் குறிப்பிடத்தக்கதான, உயர்வான கொடுகடன், முதலீட்டாளர்களின் உயர்வான வட்டி வீதங்கள் அவர்களது மூலதனத்தை கடனாக வழங்குவதற்கு தேவைப்படுத்தும். கொடுகடன் இடரானது கடன் பெற்றவரது திருப்பிச் செலுத்தும் இயலுமைமையின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது. இந்த கணிப்பு, கடன் பெற்றவரது சொத்துக்கள், வருவாயை ஈட்டும் இயலுமை மற்றும் வரிவெலுத்தும் அதிகாரம் (அரசாங்கம் மற்றும் நகரசபை பிணைகள் போன்றவை) போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

#### கொடுகடன் இடரின் பொதுவான இடங்கள்

2007 ஓகஸ்ட் 01 ஆம் திகதி இலங்கை சேமிப்புவங்கி லிமிடெட்டிடம் தொழில் ஒப்படைக்கப்பட்டதன் மூலம் தோல்வியுற்ற பிரமுக சேமிப்பு மற்றும் அபவிருத்தி வங்கியின் வைப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பணி இலக்கு வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் 2010 செப்ரெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து பயனுக்குவரும் வகையில் வங்கியினால் பெறப்பட்டிருந்தது.

கொடுகடன் இடரிலிருந்து வங்கியை காப்பாற்றும் நடத்தை தொடர்பான பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகள் கெடுகடன் குழுவில் தங்கியிருக்கின்றது.

- வங்கியின் கொடுகடன் இடர் வங்கியின் தொலைநோக்கு மற்றும் குறிக்கோளின் இன்றியமையாக்கூறாகும். இந்த ஆண்டு காலப்பகுதியில், ஒழுங்குபடுத்தும் அதிகாரி களினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களைக் கடைப்பிடித்து வங்கிக்கான இடர்களைக் குறைக்கின்ற

வேளையில் சிற்றின நிதித் துறை குறிப்பாக கடன் வழங்கும் போது வலியுறுத்துகின்றது. ''சிற்றின நிதி வழங்கலில் கடன்வழங்கும் வங்கியாக இருத்தல்'' என்பது வங்கியின் தொலைநோக்காகையால், வறுமை ஒழிப்பு, தொழில் உருவாக்கம் என்பவற்றிற் காக கடன் பெறுபவர்களை முடிவுக்குக் கொண்டு வரும்வகையில் கடன் வழங்குவது தொடர்பில் கொடுகடன் வசதிகள், சிற்றின தொழில் முயற்சி அபிவிருத்திக்கு வழங்கப் படுகின்ற கொடுகடன் வசதிகள் சிற்றின நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**இடர்களைக் குறைப்பதற்கு பின்வருவன வற்றின் மூலமான கொடுகடன் குழுவின் பிரதான உபாயங்கள்**

- உயர் வருவாய்களின் அடிப்படையில் கடன்களை அனுமதிப்பதற்கு வங்கியின் விருப்பத்தை ஏற்படுத்தாது மட்டுப்படுத்தல்
- இலக்குச் சந்தைகளை இனங்காணுதல்
- பாகுபடுத்தல் மற்றும் அவதானம் செலுத்துதலின் முன்னுரிமை மட்டத்தைக் கண்காணித்தல்
- செயலாற்றுகை அற்ற முற்பணங்களைக் குறைப்பதற்காக கடன் வழங்கலில் மூலதனச் செலவைப் பகுத்தாராய்தல்.
- சுழற்சிமுறையான விடயங்களைக் கவனித்தல் மற்றும் கடன் தொகுதியின் கூட்டுச்சேர்க்கை மற்றும் தரத்தில் எற்படும் விலகலின் விளைவுகள்
- துறைசார் வரம்புகளின் அறிமுகம்.
- வாடிக்கையாளர் குழுமங்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்ற மட்டத்தைக் குறைத்தல்

அதிக கடன் வழங்கலை மட்டுப்படுத்துவதற்காக பிணைப் பொறுப்பு வைப்புக்களை நடைமுறைப் படுத்தல்.

**துறைசார் வெளிப்படுத்தல்**

2012 ஆம் ஆண்டில் நிலுவையிலிருக்கின்ற கடன்களின் துறைசார் பகுப்பாய்வு வங்கிக் கடன் வெளிவாரி மற்றும் உள்வாரி ஆகிய இரண்டு காரணிகளிலும்




தங்கியிருக்கின்றது. வங்கியானது தனதுகடன் புத்தகத்தில் வெவ்வேறு துறைகள் மற்றும் தொழில் முறைகளில் சிறந்த சமத்துவமான வளர்ச்சியைப் பேணுவதற்கு முயற்சிக்கின்றது. இந்த வாடிக்கையாளர் தளத்திற்குச் சேவையாற்றுவதற்கு பொருத்தமான ஆக்கப்பொருள் கலவையொன்று பயன்படுத்தப்படுகின்றது.

வங்கி கடன்களை 2011 இல் ஆரம்பித்திருந்ததுடன், 2012.12.31 இல் 104.5 மில்லியன் ரூபாவாக வந்திருந்த வங்கியின் மொத்த கடன் முற்பணங்கள் வெவ்வேறு ஆக்கப்பொருட்களில் 104.5 மில்லியன் ரூபா மேலே வரைபடத்தில் காட்டப்பட்டவாறு வெவ்வேறு ஆக்கப் பொருட்களிடையே பகிரப்பட்டுள்ளன. அத்துடன், 2012 இல் செயலாற்றுகையற்ற விகிதம் பூச்சியமாக

அறிக்கையிடப்பட்டுள்ளது. பிரிவுகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பு மற்றும் தரத்தைக் கண்காணிப்பதற்காக பயனுறுதிவாய்ந்த பொறிமுறையை வங்கி கொண்டிருக்கின்றது.




.

“சிற்றின-நிதி” வழங்கலில் முன்னணி வங்கியாக விளங்குதல்” என்ற வங்கியின் தொலைநோக்காக, வறுமை ஒழிப்பு மற்றும் தொழில் உருவாக்கத்திற்காக சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வழங்குவதற்காக சிற்றின நிதி நிறவகத்திற்கு சிறு தொழில் முயற்சி விருத்திக்காக கொடுகடன் வசதிகள் வழங்கப்படுகின்றன.

பொருளாதாரத்தின் முன்னுரிமைத் துறைகள், பண்டம் / தேறுமதி விலைகளின் பரந்த வீச்சுகளில் வட்டி வீதம், வியாபார மட்டுப்படுத்தல்கள்,பொருளாதார அனுமதிகள், அரசாங்கக் கொள்கைகள் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு பங்குதாரர்களினூடாக நாடளாவியரீதியில் சிற்றின் நிதியின் மூலம் வங்கி கடன் வழங்குவதுடன், அனுமதிக் கின்றது.

வங்கியின் 40 மில்லியன் ரூபா கடன் முற்பணங்கள் வெவ்வேறு பிரதேசங்களுக்கு பிரித்து வழங்கப்பட்ட மொத்தம் 16 மில்லியன் ரூபா கந்தளாய் பிரதேசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## சந்தை இடர் முகாமைத்துவம்

சபையும், சிரேஷ்ட முகாமைத்துவமும் சந்தை இடர் முகாமைத்துவச் செயற்பாடு களை ஒருங்கிணைப்பதற்காக நிதிப் பிரிவின் கீழ் அர்ப்பணிப்புள்ள சந்தை இடர் முகாமைத்துவ அலகினை உருவாக்கி யுள்ளன.

**சந்தை இடர் கொள்கைகள் உள்ளடக்குபவை**

- வட்டி வீதங்கள் மற்றும் திரவத்தன்மை இடர் தொடர்பான பிரச்சனைகளைக் கவன த்திலெடுத்து ஒன்றுதிரட்டிய அடிப்படையில் வங்கியின் இடர்காப்பின்மையை மதிப்பிடுதல்.

- வட்டி வீதங்கள், நிதிசார் ஆவணங் களுக்கான மிகவும் முக்கியமான சந்தை இடர் காப்பின்மை யைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. வட்டி வீத இடர், சந்தை வட்டி வீதங்களின் முதன்மையாக ஐந்தொகையில் வட்டி வீத நிலையை உருவாக்குகின்ற கடன்கொடுத்தல் மற்றும் வைப்பு மாற்றங்களினால் ஏற்படுத்தப்பட்ட தேறிய வட்டி வருமானத்தில் உள்ளார்ந்த அழிவுத்தன்மையாக மதிப்பிடப்படுகின்றது.

- முதலீடுகளின் சிறந்த பகுதி, அரசாங்க பிணைப்பொறுப்புக்கள் மற்றும் அரசாங்க நிலையான வைப்புக் கணக்குகளிலிருந்து ஆக்கப்படுகின்றது. சந்தை வீதம் சந்தை தளம்பல் என்பதுடன் ஆகக்கூடியது ஒருவருடத்திற்கு ஆகும். இரண்டாம்நிலை சந்தை வீதங்கள், நட்டத்திற்கான இடர் வாய்ப்பினை வெளிப்படுத்துகின்ற தாகையால் முதிர்ச்சியடையாத வைப்புக் களை மேம்படுத்துவதில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

- வாடிக்கையாளர் நிலையான வைப்புக்கள் பிரதானமாக குறுங்காலத்திற்கு அல்லது ஆகக்கூடியது ஒரு வருடத்திற்கான நிலையான வைப்புக்களாகும்.

சிரேஷ்ட நிதி முகாமையாளர், தேவையின் அடிப்படையில் தீர்மானமெடுப்பதற்காக கால இடைவேளையில் வட்டி வீதத்தில் இயக்கத்தை கண்காணித்து, அறிக்கை செய்வதுடன், அவை கிரமமாக ALCO கூட்டங்களில் மீளாயப்பட்டுள்ளன.

**முதலீட்டு வரையுரு**

| முதலீட்டின் வகை | ஒரு வருடத்திற்கும் குறைவானது ரூபா மில்லியனில் | ஒரு வருடத்திற்கும் அதிகமானது ரூபா மில்லியனில் | முதலிடப்பட்ட மொத்த மூலதனம் ரூபா மில்லியனில் | எடை |
|---|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | 466.2 | | 466.2 | 8.8% |
| மீள் வணிகம் | 128.6 | | 128.6 | 2.4% |
| நிலையான வைப்புக்கள் | 4,682.7 | | 4,682.6 | 88.6% |
| நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்கள் | | 10.0 | 10.0 | 0.2% |
| மொத்தம் | 5,277.5 | 10.0 | 5,287.5 | 100% |

சந்தையானது, அக மற்றும் வெளி அதிர்ச்சி களினால் எப்போதும் பாதிக்கப்படக்கூடியது என்பதுடன், அதன் விளைவாக வங்கி இலாபத்தை உழைக்கலாம் அல்லது நட்டம் ஏற்படலாம். ஆகவே வங்கி இடர் வருமான தீர்மானங்களை நாடுகின்றது.

வட்டி வீதத்தை அதிகரித்தல், மறுவகையில் திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியடைதல், சந்தைக்காக நாளாந்தம் குறிக்கப்பட்ட நிலையான வருமான முறிகள் அழிந்துபோகும் தன்மையை கண்காணித்தல் அவசியமாகும். வங்கியின் மொத்த முதலீட்டில் 8.8% இனை மட்டுமே திறைசேரி முறிகளில் முதலிட்டுள்ளது. ஆகவே, வட்டி

வீதங்களின் அதிகரிப்புடன் முறிகளின் பெறுமதி மீது பாரிய தாக்கமிருக்காது.

வங்கியானது பல அரசாங்க வங்கிகளில் நிரந்தர வைப்புக்களில் 4.6 பில்லியன் ரூபாவினை முதலிட்டுள்ளது. **செயலற்ற முதலீடுகளுக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளின்** 88.6 % இனைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்ற நிரந்தர வைப்புக்களில் மொத்த முதலீடுகள்

<u>நிறுவகத்தில் முதலீடு (ரூபா மில்லியனில்)</u>

| | |
|---|---|
| வனிக் இன்கோப்பிறேன் லிமிடெட் | 57.2ரூபா |
| தவிர்ப்புகள் | 30.0 ரூபா |
| ஹபீப் வங்கி வைப்பு உடன்பாடின்மை | 78.4ரூபா |
| 165.6 ரூபாவிலும் குறைந்த ஏற்பாடு | (165.6 ரூபா) |

வங்கியில் மொத்த முதலீடுகள் வங்கியானது, வைப்பாளரின் ஆகக்கூடிய மீள்கொடுப்பனவு முதலீட்டின் மீதான வருவாயை உறுதி செய்ய வேண்டியிருக்கின்றது.தோல்வியடைந்த பிரமுக வங்கிக்கு 100% ஏற்பாட்டினை வங்கி மேற்கொண்டுள்ளது.

**வங்கி ஆக்கப்பொருள்சார் வெளிப்படுத்தல்**
2012 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் அடிப்படையில் பின்வருகின்ற பலவகைப் படுத்தப்பட்ட வைப்புக்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ளன.

**2012.12.31 இலுள்ளவாறான வைப்புக்கள்**



வங்கியின் பெரும்பான்மையான வைப்புக்கள் நிலையான வைப்புக்களின் அடிப்படையிலான தாகும் என்பதுடன், இதன் பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.




## தொழிற்பாடுசார் இடர் முகாமைத்துவம்

தொழிற்பாடுசார் இடரானது, போதியளவற்ற அல்லது தவறிய அகச் செயன்முறை, மக்கள் மற்றும் முறைமை அல்லது வெளிவாரியான நிகழ்வுகளினால் ஏற்படுகின்ற நட்டம் சார் இடராக விபரிக்கப்படுகின்றது.

தொழிற்பாடுசார் இடரானது அனைத்து ஆக்கப்பொருட்கள், செயற்பாட்டு செயன் முறைகள், முறைமைகளுடன் தொடர்புறு வதுடன், தொழிற்பாடுசார் இடர்களை பயனுறுதிவாய்ந்த முறையில் முகாமைத்துவம் செய்வது வங்கியின் அடிப்படை இடர் ஆக்கக்கூறாக எப்போதும் இருப்பது தொழிற்பாடுசார் இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமாகும். சிறந்த தொழிற்பாடுசார் முகாமைத்துவம், சபையின், நிருவாகிக் கின்றவர்களிலிருக்கின்ற சிரேஷ்ட முகாமைத் துவத்தின் பயனுறுதிவாய்ந்த உண்மையான பிரதிபலிப்பாகும். இது ஆக்கப்பொருட்கள், செயற்பாட்டுச் செயன்முறைகள் மற்றும் முறைமைகளின் வரையுருவாகும்.

வங்கியானது, தொழிலுடனான முகாமைத்து வமான முதல் தர பாதுகாப்பினை செயற் படுத்துகின்றது. இது, சிறந்த தொழிற்பாடு சார் இடர் ஆளுகையென்பது, கவனத்தில் கொள்ளத்தகு ஆக்கப்பொருள் செயற்பாடுகள் மற்றும் முறைமைகளுடன் தொடர்புபடுகின்ற இடர்களை இனங்கண்டு முகாமை செய்வதற் கான பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற சிறந்த தொழில்சார் முகாமைத்துவத்தை இனங்காணும் என்பதைக் கருதுகின்றது.

தொழிற்பாடுசார் இடர் முகாமை நிலையாக மாற்றமடைகின்ற சூழலுடன் விரிவுபடுத்தி இடரினைக் குறைக்கின்றது. கட்டுக்கோப்பின் கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் முறைமைகள் போதியளவு திடமாக இருக்கின்றதென்பதை சிரேஷ்ட முகாமைத்துவத் தொழிற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன.

### தொழிற்பாடுசார் இடர் முகாமைத்துவத்தின் பங்கு

- தொழிற்பாடுகள் சிரேஷ்ட முகாமையாளர், உள்ளாந்த இடர்கள் மற்றும் ஊக்குவிப்புக்களை நன்றாகப் புரிந்துகொள்வதை உறுதி செய்வதற்கான அனைத்து முக்கிய ஆக்கப்பொருட்கள், செயற்பாடுகள், செயன்முறைகள் மற்றும் முறைமைகளில் உள்ளாந்த தொழிற்பாடு சார் இடரினை இனங்கண்டு, மதிப்பிடு வதனை உறுதிப்படுத்துகின்றது.
- சிரேஷ்ட முகாமைத்துவம்,முழுமையாக மதிப்பிடப்படுகின்ற தொழிற்பாடுசார் இடர் அனைத்து புதிய முக்கிய ஆக்கப் பொருட்கள், செயற்பாடுகள், செயன்முறை முறைமைகளுக்கு அங்கீகாரச் செயன் முறையொன்று இருக்கின்றதென்று உறுதிப்படுத்துகின்றது.
- தொழிற்பாடுசார் இடர் முகாமைத்துவத் திற்கான வங்கியின் அணுகு முறையினை மதிப்பிடுவதற்கு பங்குதாரர்களை வங்கியின் பொது வெளிப்படுத்தல்கள் அனுமதிக்கின்றது.

- சிரேஷ்ட முகாமைத்துவம், தொழிற்பாடு சார் இடர் வரையுருக்களை கிரமமாக கண்காணிப்பதற்கான அறிக்கையிடும் செயன்முறையொன்றினை நடைமுறைப் படுத்தியுள்ளதுடன், நட்டங்களுக்கான முக்கிய வெளிப்பாடுகளை மதிப்பிடு வதற்கும், கண்காணிப்பதற்குமான பொருத்தமான நடவடிக்கையை எடுக்கின்றது.

இலங்கை சேமிப்பு வங்கியானது, தற்போதிருக்கின்ற அடிப்படையில் தொழிற் படுத்துவதற்கான ஆற்றலை உறுதிப்படுத் துவதற்கு தற்போதிருக்கின்ற விரிவாற்றல் தொடர்ச்சியான திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது

**முகாமைத்துவத்தின் தூர நோக்குகள்**

பொருத்தமான இடர் முகாமைத்துவ கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செய்முறைகள், சுதந்திரமான கணக்காய்வு மற்றும் மீளாய்வுப் பொறிமுறைகளை முகா மைத்துவம் நடைமுறையில் வைக்கின்ற போது, தொழிற்பாடுசார் இடரானது முக்கிய மானதென்பதை வங்கியின் பணிப்பாளர்கள் சபை அங்கீகரித்துள்ளது.

**தொழிற்பாடுசார் இடர் அளவீடு**

- தெரிவிக்கப்பட்ட வங்கியின் குறிக்கோள் களை மோசமாகப் பாதிக்கக்கூடிய அகக் காரணிகளையும் (கட்டமைப்பின் கடுமை யான சிக்கல், செயற்பாடுகளின் தன்மை தனிநபர் நிறுவனஞ்சார் மாற்றங்களின் தரம் மற்றும் பணியாளர் புரள்வு) மற்றும் வெளிக் காரணிகளையும் கவனத்தி லெடுத்தல்.
- கட்டுப்படுத்தக்கூடிய மற்றும் கட்டுப்படுத்த முடியாத தொழிற்பாடுசார் இடர் நிகழ்வு களுக்கிடையிலான தெளிவான வேறு பாட்டை செய்தல்.
- தொழிற்பாடுசார் இடர் நிகழ்வு பட்டியலுக்கு எதிரான தொழிற்பாடுசார் செயற்பாடுகளை மதிப்பிடுதல். (உதாரண மாக, உள்வாரி, வெளிவாரி மோசடிகள், தொழில் செய்முறைகள், வேலைத்தளப் பாதுகாப்பு, சேவை நாடுநரின் ஆக்கப் பொருட்கள் வியாபார செய்முறைகள், பௌதீகச் சொத்துக்கள், வியாபார பகிர்விற்கான சேதம் மற்றும் முறைமை தவறுதல் போன்றவை )

**சட்ட இடர் முகாமைத்துவம்**

சட்ட இடர், சட்ட நடவடிக்கை காரணான நிச்சயமற்ற தன்மை அல்லது ஒப்பந்தச் சட்டங்களின் அல்லது ஒழுங்குவிதிகளின் பிரயோகம் அல்லது உரைபெயர்ப்பில் நிச்சயமற்ற தன்மையிலிருந்து சட்ட இடர் எழுகின்றது.

வணிகத்தின் வங்கியின் சாதாரண காரணிகள், தமது உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் செலுத்தத்தவறிய கடன்பெறுநருடனான வழக்காடல் உள்ளடங்கலாக பல்வேறு வகையான வழக்காடலுடன் தொடர்புபடு கின்றது. சில சந்தர்ப்பங்களில் கடன் பெறுநர்கள் முகப்புக் கோரல்களை உறுதிப்படுத்தியுள்ளனர். நட்டஈட்டினை கோரி வங்கியினை எதிர்வாதியாக தெரிவித்து LT விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற முன்னைய வங்கி ஊழியர்களும் இருந்திருந்தனர்.

சட்ட முகாமையாளர், சிரேஷ்ட முகாமைத் துவம் மற்றும் அறவீட்டுக் குழு இடர்களை முகாமை செய்வதில் தீவிரமாக ஈடுபடுகின்றார்.

**இணங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இடர் முகாமைத்துவம்**

முறைசாரா நியதிகள் இணக்கப்பாட்டு இடர், முறைசார் இனங்காணுதல் மதிப்பீட்டு வகைப்படுத்தல் மற்றும் வரியுடன் இணங்குகின்ற இடர்களைக் கவனித்தல் (உதாரணமாக, பதிவு செய்யத் தவறுதல், வரிப் பொறுப்புக்களை உரிய முறையில் அறிக்கை செய்யத் தவறுதல்). பொதுவாக இடர் முகாமைத்துவம், செம்மைப்படுத்தப்பட்ட தீர்மானத்தை எடுப்பதற்கு ஆதரவளிப்பதற்கு மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நடவடிக்கையை உள்ளடக்கியிருக்கின்ற உட்ட செயன்முறையொன்றாகும்.

நடைமுறையில் பல சூழல் அல்லது சந்தர்ப்ப காரணிகள் இணங்குதல் இடர் முகாமைத்துவ தீர்மானமெடுத்தல் மீது பொறுக்கலாம். இவை பின்வருமாறு:

- பிரதானமான இணக்கப்பாட்டு இடர்கள் அனைத்தையும் கையாளுவதற்கான அதன் இயலுமையை திடமாகப் பாதிக்கக் கூடிய வருவாய் அதிகார சபைகளின் விடயங்களின் வேறுபாடுகள் .
- இணக்கப்பாட்டு இடரினைக் கையாளு வதற்கான சாதகமான (அல்லது பாதகமான) வாய்ப்பினை பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய குறித்த சட்டவாக்க மாற்றங்கள் (உ.ம்: வருவாய் அலுவலர் களுக்கான அதிகாரங்களை அதிகரித்தல்) மீது அரசாங்கத்தின் நிலைப்பாடுகள்.
- குறித்த பிரதான இணக்கப்பாட்டு இடரினைக் கையாளுவதற்கான வங்கியின் இயலுமையை கடுமையாக தடுக்கும் பதவியினரின் திறன்களில் பலவீனம் அல்லது பற்றாக்குறை
- 2007 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி வழங்கிய 'உங்களது வாடிக்கை யாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் / வாடிக்கையாளர் பற்றிய போதிய கவனம் ஒழுங்குகளுக்கமைவாக, வங்கியானது, வாடிக்கையாளரை இனங்காணுதல், பாகுபடுத்தல், பதிவுகளைப் பேணுதல், கண்காணித்தல் மற்றும் சட்டரீதியற்ற பண எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தைப் பேணுதல் போன்ற அத்தகைய கடப்பாடுகளை கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது.

வியாபார அலகின் அலுவலர்கள், நிதி சிரேஷ்ட முகாமையாளர், மனித வளப் பிரிவு மற்றும் இணக்கப்பட்டு அலுவலர் இணக்கப்பாட்டு மற்றும் ஒழுங்குபடுத்தல் இடர்களை முகாமை செய்வதற்குப் பொறுப்புவாய்ந்தவர்கள்.

## திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்

திரவத்தன்மையானது, சொத்துக்களில் நிதியினை அதிகரிப்பதற்கான வங்கியின் ஆற்றல் என்பதுடன், நிலுவையாக வருகின்ற பொறுப்புக்களையும், ஏற்றுக்கொள்ள முடியாத நட்டங்களை ஏற்படாது நிறைவேற்றுகின்றது. குறுங்கால வைப்புக்களின் முதிர்ச்சியை நீண்ட கால கடன்களாக மாற்றுவதில் வங்கி களின் அடிப்படைப் பங்கு வியாபாரத்தின் தன்மை மற்றும் சந்தையினை முழுவதுமாக பாதிக்கின்ற இரண்டும் வங்கியை திரவத்தன்மை இடருக்கு உள்ளாந்தரீதியில் ஆக்குகின்றது

திரவத்தன்மையைப் பேணுவது, திறைசேரித் தொழிற்பாட்டின் முழுமையான பொறுப்பல்ல. பணிப்பாளர்கள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் பயனுறுதியான தூர நோக்கு, திரவத்தன்மை இடர் முகாமைத் துவச் செயன்முறையின் முக்கியமான நெருக்கடியான ஆக்கக்கூறாகும்.

பணிப்பினை வழங்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட திரவத்தன்மை கொள்கையை சபைக்கு நிறைவேற்றுவதற்கு ALCO பணிப்பாணை யிடுவதுடன், திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செய்முறைகள் பற்றிய கண்ணோட்டம்.

### திரவத்தன்மை இடர் முகாமைத்துவத்தின் பங்கு

- வங்கியானது,பாதுகாப்பற்ற, பாதுகாப்பான நிதியிடல் வளங்கள் உள்ளடங்கலான சுமையற்றதான உயர் தர திரவத் தன்மையான சொத்துக்கள் உள்ளடங் கலாக போதிய திரவத் தன்மையை உதுதிப்படுத்துகின்ற திடமான திரவத் தன்மை இடர் முகாமைத்துவ கட்டுக் கோப்பினைக் கொண்டிருக்கின்றது

- வங்கியானது, அதன் தொழில் உபாயத்திற்கு பொருத்தமான திரவத் தன்மை இடர் சகிப்பு மற்றும் நிதி முறைமைகளில் அதன் பங்கினை தெளிவாக இணைக்கின்றது.
- வங்கியின் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம், இடரினைத் தாக்குப் பிடித்தலுக்கமைவாக திரவத்தன்மையைக் முகாமை செய்வதற்கான உபாயங்கள், கொள்கள், செய்முறைகளை விருத்தி செய்துள்ளதுடன், வங்கி போதியளவு திரவத்தன்மையைப் பேணுகின்றது என்பதை உறுதிசெய்கின்றது.
- உள்வாரி விலையிடல் மற்றும் செயலாற்றுகையில் ஒருங்கிணைப்பு தரவத்தன்மைச் செலவு, அனுகூலங்கள் மற்றும் இடர்களை வங்கி இனங்காண வேண்டியிருக்கின்றது.
- வங்கியானது, நீண்ட பகர்ப்பு அடுக்கு II வளங்களில் பயனுறுதிவாய்ந்த பல் வகைப்படுத்தல் வழங்குகின்ற நிதியிடல் உபாயத்தைத் தாபிக்கின்றது.

பின்வருவனவற்றிற்கான வங்கியின் திரவத்தன்மை இடர் நிலைகளைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அளவீட்டினை இனங்காணுவதற்கான வங்கியின் ஆற்றல்.

அ) சொத்துக்கன், பொறுப்புக்களின் எதிர்கால பண ஓட்டம்

ஆ. நேர்வுத் திரவத்தன்மையின் கேள்வி மூலங்கள் மற்றும் குறை ஐந்தொகை நிலைமைகளுடன் இணைந்த தொடர்புட்ட விசை

இ) எதிர்வாதி, கட்டுக்காப்பு மற்றும் தீர்ப்பனவுச் செயற்பாடுகள்

வங்கியானது, அதனது இயலுமையைப் பலப்படுத்திய நிதியிடல் மாற்று வளங்களை இனங்காண்பதற்கு தேவைப்படுகின்றது. திரவத்தன்மையான குலைவுத் தன்மை, காலப்பகுதியைப் பொறுத்து உள்ளாந்த நிதியிடல் வளங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- வைப்பு வளர்ச்சி
- பொறுப்புக்களின் முதிர்ச்சியை நீடித்தல்
- குறுங்கால, நீண்ட கால கடன் ஆவணங்களின் புதிய பிரச்சனைகள்.
- சொத்துக்களின் ஆவணம்
- தடங்கலற்ற, அதிக திரவத்தன்மையான சொத்துக்களின் விற்பனை அல்லது மீள்வணிகம்.
- ஏனைய அரச வங்கிகளின் இறுதி நிலைக் கடன் கொடுத்தல் வசதி களிலிருந்து கடன் பெறுதல்.

திரவத்தன்மை முகாமைத்துவ பலவீனம் அல்லது பின்வருவனவற்றை உள்ளடக்கிய அதிகளவான திரவத்தன்மை இடர் என்பவற்றுடன் வங்கி மேற்பார்வைத் தொடர் பதிலிறுக்கின்றது.

- மத்தியமயப்படுத்தப்பட்டுள்ள தரவுத் தளம், அகக் கொள்கைகளில் மேம் பாடுகள், கட்டுப்பாடுகள் அல்லது சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும், சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் அறிக்கையிடலினூடாக வங்கியின் திரவத் தன்மை இடரை முகாமை செய்வதனைப் பலப்படுத்துவதற்கு வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- வங்கியின் திரவத்தன்மை இடரைக் குறைப்பதற்காக நிதி இடைவெளியைக் குறைப்பதன் மூலம் வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட நிதி முகாமையாளர், வங்கியின் திரவத்தன்மையை அடிக்கடி கண்காணிக் கின்றது. வங்கி போதியளவு திரவத்தன்மை யைக் கொண்டிருப்பதனால், வங்கி குறுகிய செயற்பாட்டில் திரவத்தன்மைக்கு முகம் கொடுக்காது என்று வங்கி முகாமைத்துவம் இனங்கண்டுள்ளது.

2012.12.31 இல் வங்கியின் முதலீட்டு வரையுரு பின்வருமாறு அறிக்கைசெய்யப்பட்டுள்ளது.




**வகைப்பாட்டுரீதியான முதலீடு**




**தகவல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம்**

இந்த இடர், அழிவு, மென்பொருள் கொள்ளையர்களால் வைரஸ் பயன்படுத்துதல், தரங் குறைந்த மென்பொருள் பிரயோகத்தின் காரணமாக கணினி முறைமை பழுதடைவதிலிருந்து எழுகின்றது. இந்த விடயங்களை உடனடினடியாகப் பார்ப்பதும் மற்றும் நிதிச் செலவீடுகளிலிருந்து மீள்வதற்காக தகவல் தொழில்நுட்ப கொள்கைகளை கால அட்டவணையில் மீளாய்வதற்குமான பொறுப்பை தகவல் தொழில்நுட்ப சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் தொழில்நுட்பக் குழு கொண்டிருக்கின்றது.

**உபாய இடர் முகாமைத்துவம்**

உபாய இடர் முகாமைத்துவம், வங்கியின் உபாயத்தை அடைவதற்கான வங்கியின் இயலுமையைக் கொண்டிருக்கக்கூடிய மற்றும் வைப்பாளர்கள், பங்குதாரர்களின் மதிப்பினைப் பாதுகாப்பதுடனான உபாயக் குறிக்கோள்கள் அக, வெளி நிகழ்வுகள் அல்லது சம்பவங் களினால் பாதிக்கப்பட்ட இடர்கள் மற்றும் நிச்சயமின்மை பற்றிய மதிப்பீட்டினை இனங்காணுதல் மற்றும் முகாமை செய்வதற்கான செயன்முறையாகும்.

**உபாய இடர் முகாமைத்துவத்தின் பங்கு**

- தொடர்புட்ட இடர்களை இனங்காணுதல் உள்ளடங்கலாக செயன்முறையை உருவாக்குவதற்கான உபாயத்தை கால ஒழுங்கில் மீளாய்தல்
- வங்கியின் திறைசேரி மற்றும் உபாயக் குறிக்கோள்களை உருவாக்கி, நாளது வரைப்படுத்துவதற்கான வங்கியின் நடைமுறையை உரிய நேரத்தில் மீளாய்தல்
- உபாயங்களில் பதியப்பட்டுள்ள இடர் களை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடு வதனை தேவைப்படுத்துகின்ற செயன் முறையை உறுதிப்படுத்துதல்.
- உபாயம்சார் இடர்களை மதிப்பீட்டினை கால ஒழுங்கில் நாளதுவரைப்படுத்துகின்ற தற்போதைய செயன்முறையை விருத்தி செய்தல்.

**உபாயத் தீர்மானங்களுக்கு ALCO, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர்கள் சபை பொறுப்புவாய்ந்தது**

**நன்மதிப்பு இடர் முகாமைத்துவம்**

நன்மதிப்பும் மேலதிக நிதிப் பெறுமதி மற்றும் தொழில் வெற்றிக்கான அளவீடொன்றாக வந்துள்ளது.

பாரம்பரிய இடர் நிகழ்வுகளின் தாக்கம் கணிசமானளவில் இருக்கையில், நன்மதிப்பு இடர் நிகழ்விலிருந்தான தாக்கம் அதிகளவில் சேதத்தை ஏற்படுத்த முடியும் என்பதுடன், பாதிக்கப்பட்ட நன்மதிப்பினை மீளக்கட்டு வதற்கு கம்பனிக்கு ஆண்டுகள் எடுக்கும். பல்வேறு காரணிகளினால் அண்மைய ஆண்டுகளில் நன்மதிப்பு மீது வங்கி அவதானம் செலுத்துதல் வேண்டும்.

- தொடர்பாடல் புரட்சி தகல்களை உடனடியாகவும் பரந்தளவிலும் கிடைக்கப் பெறச்செய்கின்றது.
- இடரினை அதிகரிக்கின்ற வெளிவள மிடுதலைப் பயன்படுத்தும் அதிக சிக்கலான வழங்கல் சங்கிலி.
- அவை கம்பனி பற்றிய பொதுமக்களின் எதிர்பார்ப்பை மாற்றுகின்றன. மூன்றாவது தரப்பு நடவடிக்கைகளினால் நன் மதிப்பிற்கு சேதமேற்படும்.
- அதிக வசிகரம், மதிநுட்ப வழக்குரைப்பு நிறுவனங்கள், தொழில் தீர்மானமெடுத்தல் மீது பாரிய செல்வாக்குச்செலுத்துகின்றது.

அதிகரித்த சந்தைப் பெறுமதி, பலமான வைப்புக்கள்,திறமையுள்ள பணியாளர்களை கவர்வதற்கான இயலுமையை அதிகரித்தல் குறைந்தளவான சமூக எதிர்ப்பு, குறைந் தளவான ஒழுங்குவிதிகள், அதிக சாதகமான சட்டச் சூழல், எதிர்மறையான நிகழ்வுகள் இடம்பெறும்போது ஏற்படும் சந்தேகம் தொடர்பான அனுகூலம் போன்ற அத்தகைய பல அனுகூலங்களை அறுவடை செய்ய முடியும். இது, இவர்களுடைய நன்மதிப் இடர்களை வெற்றிகரமாக முகாமை செய்வதற்கு போதிய ஊக்குவிப்பை வழங்குகின்றது

உபயத்திற்கிடையிலான தொடர்பினைப் பார்ப்பதற்கு பணிப்பாளர்கள் சபை துடிப்பாக ஈடுபட்டுள்ளதுடன், நன்மதிப்பு மற்றும் மதிப்பின் மீது அவற்றின் தாக்கம் மற்றும் வாடிக்கை யாளர்கள் மற்றும் தொழில் அலகு களிலிருக்கின்ற முகாமைத்துவ அணிகளுக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.








**தொகுப்புரை**

வங்கியானது தொழில் தொழிற்பாடுகளின் போது பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்துள்ளது. "பசல்"(Basel) II கட்டுக் கோப்பின் கீழ் பிரதான இடர் வகைப்பாடுகள் கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாடுசார் இடர்கள் என்பவையாகும். எனினும், வங்கியானது, திரவத்தன்மை, சட்ட இணக்கப்பாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் நேர்மைசார் இடர்கள் போன்ற அத்தகைய ஏனைய இடர்களுக்கும் முகம் கொடுக் கின்றது. இந்த இடர்கள் அனைத்தும் அதிகளவில ஒன்றையொன்று சார்ந்தவை யாகும்.

கூட்டு முகாமைத்துவம், இணக்கப்பாட்டு அலுவலர், சிரேஷ்ட முகாமைத்துவம் வங்கியின் கௌரவத்தை உயர்த்துவதற்கும், வெளிப்படையான தன்மை மற்றும் பொது மக்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கும் பொறுப்புடையவர்கள். ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவம், இடர் முகாமைத்துவ குழுவினால் பயனுறுதிவாய்ந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், உரிய நேரத்திற்குப் பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது..





# இணக்கப்பாட்டு அறிக்கை

இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட்டின் பணிப்பாளர்கள் சபை, வங்கியின் அனைத்துத் தொழிற்பாட்டு நிலைகளுடன் தொடர்புபட்ட சிறந்த கூட்டு ஆளுகையை விருத்தி செய்கின்ற குறிக்கோளுக்காக அர்ப்பணிக் கின்றது. இலங்கை சேமிப்பு வங்கி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம்,இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை நிதி, திட்டமிடல் அமைச்சின் பணிப்புகள் மற்றும் வழிகாட்டல் போன்ற அத்தகைய ஒழுங்குபடுத்தல் அமைப்புகளினால் பரிந்துரைக்கப்பட்ட கூட்டு ஆளுகையைக் கைக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

**பணிப்பாளர்கள் சபை**

இலங்கை சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்கள் சபை 7 நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர் களையும், ஒரு நிறைவேற்றுப் பணிப் பாளரையும் ஆய்வாண்டு காலப்பகுதியில் கொண்டிருந்தது. பணிப்பாளர்கள் சபை வங்கியின் தொழிற்பாடுகளை மேற்பார் செய்வதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பினைக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பில், வங்கியின் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்து வதற்காக விருத்திசெய்யப்பட்டுள்ள முறை மைகள் மற்றும் நடைமுறைகள் முகாமைத் துவத்தினால் பயனுறுதி வாய்ந்ததாகவும், செயற்றிறன்மிக்கதாகவும் பணிக்கப்படுவதுடன் கட்டுப்படுத்தப்படுகின்றது. உபாய இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், தேவையான தலைமைத்துவம் வழங்கப்பட்டுள்ளது மற்றும் பங்குதாரர்களின் பொறுப்புக்கள் தொடர்பில் பேணப்படுகின்ற அவதானிப்புக்களை உறுதிப் படுத்துவதற்கு நேரடியாக அறிக்கையிடுதல் தாபிக்கப்படுகின்றது.

**சபைக் கூட்டங்கள்**

சபைக் கூட்டங்கள் மாதாந்த அடிப்படையில் நடத்தப்பட்டதுடன், விசேட கூட்டங்கள் தேவையின் அடிப்படையில் கூட்டப் பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டில் பன்னிரண்டு (12) சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

சபையின் கூட்டங்கள் மற்றும் அறிவித்தல்கள் தவிசாளர், பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலருடனான கலந்தா லோசனையுடன் சபையின் செயலாளரினால் தயாரிக்கப்படுகின்றன. சபையின் அறிவித்தல் கூட்டத்திற் முன்னர் ஆகக்குறைந்தது ஏழு நாட்கள் வழங்கப்படுகின்றது. நிதிச் செயலாற்றுகை மீதான விரிவான தகவல், சபைக் கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பப்பட்ட சபையின் பத்திரத்தில் உள்ளடக்கப் படுகின்றது. இந்த தகவல்கள், இறுதித் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னர் சபையினால் மீளாயப்படுவதுடன், கலந்தா லோசிக்கப்படுகின்றது.சபையினால் எடுக்கப்படு கின்ற அனைத்து தீர்மானங்களும், முடிவுகளும் சபையின் செயலாளரினால் பதிவு செய்யப்படுகின்றன. சபையானது கொள்கைத் தீர்மானங்களை மட்டுமே எடுப்பதுடன், முகாமைத்துவத்தின் தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரமானது பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுத்திட்டம் மற்றும் வரவுசெலவுத்திட்டம்**

பணிப்பாளர் சபையானது, கூட்டு ஆளுகையைப் புரிகையில் பரந்த கூட்டுத் திட்டம் மற்றும் வரவுசெலவுத்திட்டத்தை விருத்தி செய்வது அவசியமானது என்று நம்புகின்றது. இது, வங்கயின் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் வங்கி எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை இனங் காண்பதற்கும் மீளாய்வதற்கும் முகாமைத் துவத்தை இயலச்செய்கின்றது.

நிதிசார் சொத்துக்களின் விற்பனைக்காக கிடைக்கக்கூடிய நாணய மீள் பரிமற்றம் தொடர்பில் எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் நியாயமான பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்களன் தனியானதொரு பகுதியாக கருதப்படுவதுடன் இலாபத்திலோ அல்லது நட்டத்திலோ ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நிதி ஆவணங்கள் தொடர்பில், ஒட்டுமொத்த இலாப அல்லது நட்டத்தின் பகுதியிலிருந்தான நிதி சொத்துக்களின் விற்பனைக்காக கிடைக்கக்கூடிய நாணயமல்லா பரிமாற்று இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

## 1.7 நிதி ஆவணங்கள் – ஆரம்ப அங்கீகாரமும் தொடர்ச்சியான அளவீடும்.

அங்கீகார திகதி

அனைத்து நிதி சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் வர்த்தக திகதியில்அதாவது ஆவணங்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கான தரப்பாக வங்கி வருகின்ற திகதியில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இது சந்தையில் ஒழுங்குவிதி அல்லது உடன்பாட்டினால் தாபிக்கப்படும் பொதுவான கால எல்லையினுள் சொத்துக்களின் வழங்கிலினை தேவைப்படுத்துகின்ற நிதி சொத்துக்களின் விற்பனை அல்லது கொள்வனவினை குறிப்பிடுகின்ற "முறையான வழி வர்த்தகங்கள்" இனை உள்ளடக்குகின்றது.

### நிதி ஆவணங்களின் ஆரம்ப அளவீடு

ஆரம்ப அங்கீகாரத்தில் நிதிக் கூற்றுக்களின் வகைப்படுத்தலானது அவற்றின் நோக்கம் மற்றும் பண்புகள் மற்றும் அவற்றினைக் கோருவதற்கான முகமையின் நோக்கம் என்பவற்றில் தங்கியுள்ளது.அனைத்து நிதி உபகரணங்களும் ஆரம்பத்தில் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்கள் நீங்கலாக அவற்றின் நியாயமானபெறுமதி மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் கணிப்பிடப்படுகின்றன.

### வர்த்தகத்திற்காக பேணப்படும் நிதி சொத்துக்களும் நிதி பொறுப்புக்களும்

வர்த்தகத்திற்காக பேணப்படுகின்ற நிதி சொத்துக்கள் அல்லது நிதி பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியில் நிதி நிலைமைகக் கூற்றுக்களில் பதிவு செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் "தேறிய வர்த்தக வருமானத்தில்" அங்கீகரிக்கப்படுகின்றன.வட்டி மற்றும் பங்குலாப வருமானம் அல்லது செலவு என்பன உடன்படிக்கையின் நியதிகளுக்கமைவாக அல்லது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கையில் பதிவு செய்யப்படுகின்றன.

இந்த வகையீட்டில் கடன் பிணை முறிகள், அண்மையில் விற்பனை செய்யும் அல்லது மீள் கொள்வனவு செய்யும் நோக்கிலானமுதன்மை உரிமைகள் உள்ளடங்குகின்றன.

### இலாப அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும்

இந்த வகையீட்டில் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஆரம்ப அங்கீகாரத்தின் கீழ் முகாமையினால் மதிப்பிடப்பட்டுள்ளன.முகாமையானதுபின்வரும் வகையீட்டினை மேற்கொண்ட போது ஆரம்ப அங்கீகாரத்தின் கீழ் இலாப அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் ஆவணமொன்றினை மதிப்பிடடினை மட்டுமே செய்யலாம் என்பதுடன் மதிப்பிடலானது ஒவ்வொரு ஆவணமாக ஆராயப்பட்டு அதனடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது:

- மதிப்பிடலானது வேறுபட்ட அடிப்படையில் அவற்றின் இலாப அல்ல்து நட்டங்களை அங்கீகரிக்கின்ற அல்லது சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் அளவிடலிலிருந்து எழுகின்ற அவ்வாறல்லாத மாறுபட்ட முறையினை இல்லாதொழிக்கின்றது அல்லது கணிசமானளவு குறைக்கின்றது.
- முகாமை செய்யப்படும் நிதிச் சொத்துக்கள், நிதிப் பொறுப்புக்கள் அல்லது இரண்டினதும் பகுதியாகக் காணப்படுகின்றசொத்துக்களும் பொறுப்புக்களும் அவற்றின் செயல் நிறைவேற்றமும் ஆவணப்படுத்தப்பட்ட இடர் முகாமைத்துவம் அல்லது முதலீட்டு தந்திரோபாயத்திற்கமைவாக, நியாயமான பெறுமதியில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- நிதி ஆவணமானது ஒப்பந்தத்தினால் கோரப்பட்டாலன்றி கணிசமானளவு மாற்றத்திற்குட்படும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் பதியப்பெற்ற பெயர்த் தெடுப்புக்களைக் கொண்டுள்ளது.

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் நிதி சொத்துக்கள்

மற்றும் நிதிப் பெறுப்புக்கள் நியாயமான பெறுமதியில் நிதி நிலைமைக் கூற்றுக்களில் பதிவு செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டங்களினூடாக நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் மற்றும் நிதிச் சொத்துக்களின் தேறிய இலாபம் அல்லது நட்டத்தில் பதிவு செய்யப்படுகின்றன.சம்பாதித்த அல்லது ஏற்பட்ட வட்டியானது, பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினைப்(EIR) பயன்படுத்தி முறையே "வட்டி வரூமானம்" அல்லது "வட்டி செலவு" இல் சேருகின்ற அதேவேளையில், மேற் கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுக்கான உரிமையின் போது பங்குலாப வருமானமானது ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் பதிவு செய்யப்படுகின்றது. சம்பாதித்த அல்லது ஏற்பட்ட வட்டியானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி முறையே வட்டி வருமானம் அல்லது வட்டி செலவில் சேருகின்றது.

**நிதி முதலீடுகளின் விற்பனைக்காக கிடைக்கக் கூடியவை**

விற்பனை முதலீடுகளுக்கான கிடைப்பனவானது உரிமை மற்றும் கடன் முறிகளைளை உள்ளடக்குகின்றது.விற்பனைக்கு கிடைக்கக்கூடியவாறு வகைப்படுத்தப்பட்டஉரிமை முதலீடுகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான விலையில் மதிப்பிடப்பட்ட மட்டுமல்லாமல் வியாபாரத்தனை நடாத்துவதற்காகவும் வகைப்படுத்ப்படுகின்றன. இந்த வகையீட்டினைச் சேர்ந்த கடன் பிணை முறிகள் நிச்சயிக்கப்படாத காலப்பகுதியினைக்கொண்டுள்ளதாக கருதப்படுகின்றதுடன் சந்தை நிலமைகளிலுள்ள மாற்றங்களுக்கமைவாக அல்லது திரவத்தனமையின் தேவைக்கேற்றமாதிரியாக விற்பனை செய்யப்படலாம்.

வங்கியானது விற்பனைக்கு கிடைக்க கூடியவாறு ஏதேனும் கடன்கள் அல்லது பெறத்தக்கவைகள் தொடர்பான பொறுப்பினைக் கொண்டிருக்கவில்லை.

ஆரம்ப அளவிடலின் பின்னர், நிதிசார் முதலீடுகளின் விற்பனைக்காக கிடைக்கக்கூடியவை நியாயமான பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றன.

தேறாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏனைய பரந்துபட்ட வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.முதலீடானது விற்பனை செய்யப்படும் போது, ஏனைய பரந்தளவிலான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டமானது 'ஏனைய தொழிற்பாட்டு வருமானத்திலுள்ள வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வங்கியானது ஒரே பிணை முறியில் ஒன்றிற்கு மேற்பட்ட முதலீடுளை வைத்திருக்குமாயின், அவை முதல் - உள் - முதல் - வெளியேறல் அடிப்படையில் விற்பனை செய்யப்படுவதாக கருதப்படுகின்றன.நிதி முதலீடுகளை விற்பனை செய்வதற்காக வைத்திருக்கக்கூடிய சம்பாதித்த வட்டியானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினைப்(EIR)பயன்படுத்துகின்றவட்டி வருமானமாக தெரிவிக்கப்படுகின்றது.நிதி முதலீடுகளின் விற்பனைக்காக வைத்திருக்கக்கூடிய ஈட்டிய பங்குலாபங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுக்கான உரிமையின் போது ஏனைய தொழிற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. அத்தகைய முதலீடுகளின் பெறுமதி குறைப்பிலிருந்து எழுகின்ற நட்டங்கள் 'நிதிக் கூற்றுக்களின் மீதான பெறுமதி குறைப்பு" இலுள்ள வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் 'விற்பனை ஒதுக்கீட்டுக்கான கிடைப்பனவு' இலிருந்து நீக்கப்படுகின்றன.

**நிதி முதலீடுகளை முதிர்வு வரை வைத்திருத்தல்**

நிதி முதலீடுகளை முதிர்வு வரை வைத்திருத்தலானது, வங்கி முதிர்நிலையில் வைத்திருக்கக்கூடிய ஆற்றல் மற்றும் நோக்கத்துடனான நிலையான முதிர்வு, நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய சார்பியமில்லா நிதிச்சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின்

பின்னர் நிதி முதலீடுகளை முதிர்வு வரை வைத்திருத்தல், குறை தடங்கலான பயனுறுதி வாயந்த வட்டி வீதம் (EIR) இனைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் தொடர்ந்து அளவிடப்படுகிறது. .கடன்தீர் செலவானது, பயனுறுதி வாயந்த வட்டி வீதம் (EIR) இன் ஒருங்கிணை பகுதியான கட்டணங்கள், உடைமை சம்பந்தமான ஏதேனும் விலைக்கழிவு அல்லது சந்தாவினைக் கணக்கிலெடுத்தல் மூலம் கணிக்கப்படுகிறது. கடன்தீர்ப்பு வருமானக்கூற்றிலுள்ள "வட்டியும் அத்தகைய வருமானமும்' இல் உள்ளடக்கப்படுகிறது. அத்தகைய முதலீட்டுத் தடங்கலிலிருந்து எழும் இழப்புகள் வருமானக்கூற்று கடன் இழப்புச் செலவில் ஏற்கப்படுகிறது.

**வங்கிகளிலிருந்தான செலுத்துகைகளும் வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்**

வங்கிகளிலிருந்தான செலுத்துகைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள், முற்பணங்கள் என்பன செயற்படு சந்தை ஒன்றில் கோரப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய சார்பியமில்லா நிதிச்சொத்துக்களை உள்ளடக்குகிறது.

ஆரம்ப அளவீட்டின் பின்னர் வங்கிகளிலிருந்தான செலுத்துகைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள், முற்பணங்கள் என்பன, குறை தடங்கலான பயனுறுதி வாயந்த வட்டி வீதம் (EIR) இனைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் தொடர்ந்து அளவிடப்படுகிறது. கடன்தீர் செலவானது, பயனுறுதி வாயந்த வட்டி வீதம் (EIR) இன் ஒருங்கிணை பகுதியான கட்டணங்கள், உடைமை சம்பந்தமான ஏதேனும் விலைக்கழிவு அல்லது சந்தாவினைக் கணக்கிலெடுத்தல் மூலம் கணிக்கப்படுகிறது. கடன்தீர்ப்பு வருமானக்கூற்றிலுள்ள "வட்டியும் அத்தகைய வருமானமும் இல் உள்ளடக்கப்படுகிறது. தடங்கலிலிருந்து எழும் இழப்புகள் வருமானக்கூற்று கடன் இழப்புச் செலவில் ஏற்கப்படுகிறது.

**ஏற்காமை**

நிதிச்சொத்திலிருந்து பணப்பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது நிதிச்சொத்தின் உரிமை மாற்றப்படுமிடத்து எழும் சகல சிக்கல்கள் மற்றும் வெகுமதிகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்கு நிதிச்சொத்தினை மாற்றுமிடத்து அல்லது உரிமையின் சகல சிக்கல்கள், வெகுமதிகளை வங்கி மாற்றாது அல்லது வைத்திருக்காது உள்ளதுடன் நிதிச்சொத்தின் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்காதவிடத்து அத்தகைய நிதிச்சொத்தினை வங்கி ஏற்காதுவிடுகிறது. வங்கியால் ஆக்கப்படும் அல்லது வைத்திருக்கப்படும் ஏற்காமைக்குத் தகுதிவாய்ந்த நிதிச்சொத்துக்களில் உள்ள ஏதேனும் வட்டி, நிதி நிலைமைக் கூற்றில் தனியானதொரு சொத்தாக அல்லது பொறுப்பாக இனங்காணப்படும். நிதிச் சொத்தொன்றின் ஏற்காமை தொடர்பில் எழும் சொத்தின் காவுபெறுமதிக்கும் (அல்லது மாற்றப்பட்ட சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட காவு பெறுமதிக்கும்) (1) பெற்ற இழப்பீடு (ஏதேனும் புதிய பொறுப்பாகக் கருதப்படும் ஏதேனும் புதிய சொத்து அடங்கலாக) (2) ஏனைய விரிவான வருமானமொன்றில் அறியப்படும் ஏதேனும் கூட்டு வருமதி அல்லது இழப்பு என்பவற்றின் கூட்டுத்தொகைக்கும் இடைப்பட்ட வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் உணரப்படுகிறது.

## மீள்கொள்வனவு மற்றும் எதிர்மறை மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்

**மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

குறிப்பிட்ட பின்னைய திகதியொன்றில் மீள்கொள்வனவு செய்தமைக்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் வங்கி அதன் உரிமை

தொடர்பான சகல இடர்பாடுகளையும் வெகுமதிகளையும் கொண்டிருப்பதனால் நிதி நிலைமைக் கூற்றிலிருந்து ஏற்காது விடப்படுவதில்லை.

பெற்றுக்கொண்ட தொடர்பாடற் பணம், கடன் பெற்ற பிணையங்கள், மீள்கொடுப்பனவு உடன்படிக்கைகள் சம்பந்தமான பண ஈட்டினுள் பொறுப்பொன்றாக உள்ள கூட்டு வட்டி அடங்கலாக, வங்கிக்கான கடனாக கொடுக்கல் வாங்கலின் பொருளாதாரக் கருமூலத்தைப் பிரதிபலிக்கின்றவாறு சொத்தொன்றாக அதனை மீளச்செலுத்தும் கடப்பாட்டுடன் சொத்து நிலைமைக் கூற்றில் இனங்காணப்படுகிறது. விற்பனைக்கும் மீள்கொடுப்பனவு விலைக்கும் இடையிலான வேறுபாடு வட்டிச் செலவாகக் கருதப்படுவதுடன் அது EIR இனைப் பயன்படுத்தி உடன்படிக்கையின் உயிர்ப்பாகச் சேர்க்கப்படுகிறது.

முதன்மைத்தரப்பு பிணையங்களை விற்பதற்கோ மீள் அடகு வைப்பதற்கோ உரிமையைக் கொண்டிருக்குமிடத்து வங்கி ஈடாக அடகு வர்த்தகத்துக்கான நிதிச்சொத்துக்களில் அல்லது ஈடாக விற்பனை அடகுக்கான நிதி முதலீடுகளில் பொருத்தமானவாறு நிதி நிலைமைக் கூற்றுக்களில் அத்தகைய பிணையங்களை மீள வகைப்படுத்துகிறது.

**எதிர்மறை மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்**

மாறாக, குறிப்பிட்ட பின்னைய திகதியொன்றில் மீளவிற்பனை செய்தமைக்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் நிதி நிலைமைக் கூற்றில் ஏற்கப்படுவதில்லை. சேர் வட்டி அடங்கலாக செலுத்தப்பட்ட இழப்பீடு கடன் பெற்ற பிணையங்கள், எதிர்மறை மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் சம்பந்தமான பண ஈட்டினுள் வங்கிக்கான கடனாக கொடுக்கல் வாங்கலின் பொருளாதாரக் கருமூலத்தைப் பிரதிபலிக்கின்றவாறு சொத்து நிலைமைக் கூற்றில் பதியப்படுகிறது. கொள்வனவுக்கும் மீள்விற்பனை விலைக்கும் இடையிலான வேறுபாடு தேறிய வட்டி வருமானமாகப் பதியப்படுவதுடன் அது EIR இனைப் பயன்படுத்தி உடன்படிக்கையின் உயிர்ப்பாகச் சேர்க்கப்படுகிறது.

மீள் விற்பனைக்காக உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யப்படின் பிணையங்களை மீளப்பெறுவதற்கான கடப்பாடு வர்த்தகத்துக்கான நிதிப்பொறுப்பினுள் குறுகிய விற்பனையாகப் பதியப்படுவதுடன் தேறிய வர்த்தக வருமானத்திலுள்ளவை அடங்கலாக ஏதேனும் லாப நட்டங்களுடன் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.

**நிதிச் சொத்துக்களின் மதிப்பிறக்கம்**

நிதிச்சொத்து அல்லது நிதிச்சொத்துக்களின் தொகுதி மதிப்பிறக்கப்படும் சான்று ஏதேனும் உள்ளதா என ஒவ்வொரு அறிவிப்புத் திகதியின் போதும் வங்கி மதிப்பிடுகிறது. சொத்தின் (உறப்பட்ட இழப்பு நிகழ்வு) ஆரம்ப அங்கீகாரத்தின் பின் சம்பவித்த அத்துடன் நிதிச்சொத்து அல்லது மதிப்பிடத்தக்க நிதிச்சொத்துக்களின் தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப் பாய்ச்சல் சம்பந்தமான தாக்கத்தைக் கொண்ட இழப்பு நிகழ்வு (நிகழ்வுகள்) என்பவற்றின் விளைவாக மதிப்பிறக்கம் ஏற்பட்டதன் சான்று இருப்பின் மாத்திரம் நிதிச்சொத்து அல்லது நிதிச்சொத்துக்களின் தொகுதி மதிப்பிறக்கப்பட்டதாக கருதப்படலாம்.

மதிப்பிறக்கச் சான்று பின்வருவற்றை உள்ளடக்கலாம்: கடன் பெற்றவர் அல்லது கடன் பெற்றவர்களின் தொகுதி குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடியினை அனுபவிப்பதற்கான குறிகாட்டிகள்; அவர்கள் வங்குரோத்தில் அல்லது ஏனைய நிதி மீளமைப்பில் நுழைவதற்கான நிகழ்தகவு ; வட்டி அல்லது முதன்மைக் கொடுப்பனவில் தவறு அல்லது தவணை திறம்பல் ; தவறுடன் இணைந்த நிலுவை மாற்றம், பொருளியல் நிலைமைகள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பாய்ச்சலில் கணிசமான வீழ்ச்சியைக் காட்டும் அவதானிக்கத்தகு தரவுகள் என்பனவாகும்.

**கடன்தீர் செலவில் மேற்கொள்ளப்படும் நிதிச்சொத்துக்கள்**

கடன்தீர் செலவில் மேற்கொள்ளப்படும் நிதிச்சொத்துக்கள்(வங்கிகளிலிருந்தான

செலுத்துகைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள், முற்பணங்கள் மற்றும் முதலீடுகளை முதிர்வு வரை வைத்திருத்தல் போன்றன) இற்காக வங்கி முதலில் தனிப்பட்டமுறையில் நிதிச்சொத்துக்கள் தனிப்பட்ட முக்கியத்துவம் உள்ளவை அல்லது இல்லாமைக்கான மதிப்பிறக்கச் சான்று உள்ளதாவென மதிப்பீடு செய்கிறது. தனிப்பட்டமுறையில் மதிப்பிடப்பட்ட நிதிச்சொத்திற்கு உணர்தகு மதிப்பிறக்கச் சான்று இல்லையென வங்கி தீர்மானிக்குமிடத்து அவ்வாறான கடன் இடர்பாடுள்ள நிதிச்சொத்துக்களின் குழுவிலுள்ள சொத்தினை அது உள்ளடக்குவதுடன் அவற்றினை கூட்டாக மதிப்பிறக்கத்தின் பொருட்டு மதிப்பிடப்படுகிறது. மதிப்பிறக்க இழப்பைக் கொண்ட அல்லது அவ்வாறு தொடரப்படும் மதிப்பிறக்கத்துக்காகத் தனியாக மதிப்பிடப்படும் சொத்துக்கள் மதிப்பிறக்க கூட்டு மதிப்பீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

மதிப்பிறக்க இழப்பு உறப்பட்டுள்ளதென உணர்தகு சான்று இருப்பின் அவ்விழப்புத் தொகை, சொத்தின் காவு தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் (இன்னமும் உறப்படாத எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் நீங்கலாக) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகிறது. சொத்தின் காவு தொகை கொடுப்பனவுக் கணக்குப் பாவனையின் மூலம் குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக்கூற்றில் ஏற்கப்படும். வட்டி வருமானம் குறைக்கப்பட்ட காவுதொகை தொடர்பில் தொடர்ந்து சேர்க்கப்படுவதுடன் மதிப்பிறக்க இழப்பை அளவிடும் நோக்கில் எதிர்காலப் பணப்பாய்ச்சற் கழிவிற்குப் பயன்படும் வட்டிவீதத்தைக் கொண்டு உறப்படுகிறது.

வட்டி வருமானம் வட்டியும் அத்தகைய வருமானமும் பகுதியில் பதியப்படுகிறது. கடன்களும் அவற்றுடன் சேர்ந்த கொடுப்பனவுகளும் எதிர்கால வருமதிக்கான சாத்தியமில்லாதவிடத்து அல்லது சகல கடன்தீர்வுகளும் தீர்க்கப்பட்டு அல்லது வங்கிக்கு மாற்றப்பட்டிருக்குமிடத்து அவை பதிவழிவு செய்யப்படும். தொடர்ந்துறும் வருடத்தில் மதிப்பிடப்பட்ட மதிப்பிறக்க இழப்புத் தொகை மதிப்பிறக்கம் உணரப்பட்டதன் மேல் நிகழும் நிகழ்வு காரணமாக அதிகரிப்பின் அல்லது குறைவடையின் முன் உணரப்பட்ட மதிப்பிறக்க இழப்பு கொடுப்பனவுக் கணக்கை சீராக்குவதன் மூலம் அதிகரிக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது. எதிர்வுறும் பதிவழிவு பின் மீளப்பெறப்படின் அம்மீளப்பெறுகை கடன் இழப்புச் செலவில் வரவு வைக்கப்படும்.

மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி நிதிச்சொத்தின் மூல EIR இல் விலைக்கழிவு செய்யப்படும். கடன் ஒன்று மாறும் வட்டிவீதத்தைக் கொண்டிருப்பின் ஏதேனும் மதிப்பிறக்க இழப்பை அளவிடும் விலைக்கழிவு வீதம் தற்போதைய EIR ஆகும் வங்கி வர்த்தக சொத்துக்களை கடன்கள், முற்பணங்களுக்கு மீள வகைப்படுத்துமிடத்து ஏதேனும் மதிப்பிறக்க இழப்பை அளவிடும் விலைக்கழிவு வீதம் மீள வகைப்படுத்தும் திகதியில் தீர்மானிக்கப்படும் புதிய EIR ஆகும். ஈடாக்கப்பட்ட நிதிச்சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதியின் கணிப்பீடு அறுதியீடு நிகழக்கூடிய அல்லது அல்லாத ஈட்டினைப் பெறுவதற்கும் விற்பதற்குமான அறுதியீட்டுக் குறைப்புச் செலவை விளைவாக்கக்கூடிய பணப்பாய்ச்சலைப் பிரதிபலிக்கும்.

மதிப்பிறக்கக் கூட்டு மதிப்பீட்டு நோக்கத்தின் பொருட்டு நிதிச்சொத்துக்கள் சொத்து வகை, கைத்தொழில், புவியியல் அமைவு, கடந்த வரவு நிலைமை மற்றும் ஏனைய இயைபுடைய காரணிகள் போன்ற கடன் இடர்ப் பண்புகளைக் கருதும் வங்கியின் உள்ளக தரப்படுத்தல் முறைமையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

மதிப்பிறக்கத்திற்காக கூட்டாக மதிப்பிடப்படும் நிதிச்சொத்துக்களின் தொகுதி சம்பந்தமான எதிர்காலப் பணப்பாய்ச்சல், கடன் இடர்ப் பண்புகள் மற்றும் அவற்றுக்கு இணைவான சொத்துக்களிற்கு சரித்திர இழப்பு அனுபவ அடிப்படையில் மதிப்பிப்படுகிறது. சரித்திர இழப்பு அனுபவம் என்பது தற்போது இல்லாத சரித்திர காலத்திலுள்ள நிலைமைகளின் விளைவை அகற்றும் பொருட்டும் சரித்திர இழப்பு அனுபவ அடிப்படையிலும் தற்போதைய நிலைமைகளின் விளைவை பிரதிபலிக்கும் பொருட்டு தற்போதைய உணர் தரவின் அடிப்படையில் சீராக்கப்படுகிறது.

எதிர்காலப் பணப்பாய்ச்சலிலுள்ள மாற்றங்களின் மதிப்பீடு வருடத்துக்கு வருடம்(வேலையற்றோர் வீதம், சொத்து

விலைகள், பொருள் விலை, கொடுப்பனவு நிலைமை அல்லது தொகுதியிலுள்ள உறப்பட்ட இழப்புக்கள் என்பவற்றில் மாற்றங்கள் போன்றன) உணர்தகு தரவுகளின் மாற்றங்களைப் பிரதிபலிப்பதுடன் அவற்றுக்கு இசைவாகவும் உள்ளது. மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பணப்பாய்ச்சலிற்கு பயன்படுத்தப்படும் முறையும் எடுகோள்களும் இழப்பு மதிப்பீட்டிற்கும் உண்மை இழப்பு அனுபவத்திற்கும் இடையிலான ஏதேனும் வேறுபாட்டைக் குறைக்கும் பொருட்டு கிரமமாக மீளாய்வு செய்யப்படுகிறது.

**விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள்**

விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள் பொருட்டு வங்கி முதலீடு மதிப்பிறக்கப் பட்டதற்கான உணர்தகு சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிவிப்புத் திகதியிலும் மதிப்பிடுகிறது.

விற்பனைக்கு கிடைக்கக்கூடியவாறு வகைப்படுத்தப்பட்ட பற்றுக் கருவிகள் தொடர்பில் வங்கி நிதிச்சொத்துக்கள் கடன்தீர் செலவில் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக அத்தகைய அடிப்படையில் மதிப்பிறக்கச் சான்று உள்ளதாவென தனியாக மதிப்பிடுகிறது. எனினும் மதிப்பிறக்கத்திற் பதியப்பட்ட தொகை, கடன்தீர் செலவிற்கும் தற்போதைய நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு, வருமானக்கூற்றில் முன்னர் உணரப்பட்ட முதலீடு சம்பந்தமான மதிப்பிறக்க இழப்பு நீங்கலாக அளவிடப்பட்ட திரட்டிய இழப்பு ஆகும். எதிர்கால வட்டி வருமானம் குறைக்கப்பட்ட காவுதொகை அடிப்படையில் உள்ளதுடன் மதிப்பிறக்க இழப்பை அளவிடும் நோக்கில் எதிர்காலப் பணப்பாய்ச்சல் விலைக்கழிவிற்கு பயன்படுத்தப்பட்ட வட்டி வீதத்தைக் கொண்டு அது சேர்க்கப்பட்டது. வட்டி வருமானம் “வட்டியும் அத்தகைய வருமானமும்” பகுதியில் பதியப்படுகிறது. தொடர்ந்து வரும் காலத்தில் பற்று ஒன்றின் நியாயப் பெறுமதி அதிகரிப்பதுடன் அவ்வதிகரிப்பு மதிப்பிறக்க இழப்பு வருமானக்கூற்றில் உணரப்பட்டதன் மேல் நிகழ்ந்த கடன் நிகழ்வுடன் தொடர்புபட்டிருப்பின் அம்மதிப்பிறக்க இழப்பு வருமானக்கூற்றினூடாக
எதிர்மறையாக்கப்படும்

விற்பனைக்கு கிடைக்கக்கூடியவாறு வகைப்படுத்தப்பட்ட **உரிமை முதலீடுகள்** தொடர்பில், நோக்க சான்றானது, அதன் கிரயத்தின் கீழான முதலீடுகளின் நியாயமான பெறுமதியில் குறைந்த ‘முக்கியத்துவம்’ அல்லது ‘கால நீடிப்பினையும்’ உள்ளடக்குகின்றது. மதிப்பிறக்கதிற்கான சான்று இருக்குமிடத்து கொள்ளல் செலவுக்கும் நியாயமான பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக கணிக்கப்படும் திரண்ட நட்டமானது வருமானக் குற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகள் மீதான ஏதேனும் மதிப்பிறக்கத்தினை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டு உரிமையிலிருந்து நீக்கப்படுகின்றது. உரிமை முதலீடுகள் மீதான ஏதேனும் மதிப்பிறக்கத்தினை நட்டங்கள் வருமானக் கூற்றினூடாக மீளளிக்கபபடுவதில்லை, மதிப்பிறக்கத்தின் பின்னரான நியாயமான பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்புக்கள் ஏனைய திரண்ட வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**நிதிசார் பொறுப்புக்கள்**

வங்கியானது அதன் பொறுப்புக்களை கோரப்படும் பொறுப்புக்கான நோக்கத்தின் அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்துகின்றது.

தகமை வாய்ந்த மறைத்து வைத்தல் உறவு முறையிலுள்ள நிதிப் பொறுப்புக்கள் தவிர்ந்த, ஒவ்வொரு வகைக்குமான வங்கியின் கணக்கீட்டு கொள்கை பின்வருமாறு.:

**இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாய பெறுமதி**

இந்த வகையீடானது, பண மூலாதாரங்களுக்கு அப்பாற் பட்டவற்றினைக் கொண்டுள்ளது. அவை திரண்ட வருமான கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட நியாயமான பெறுமதியிலுள்ள வங்கியின் நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வங்கியானது துணிந்து அதன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கத்திற்காக ஆனால் மறைமுக நோக்கங்களுக்காக மூலாதார ஆவணங்களை வைத்திருப்பதோ அல்லது

வழங்குவதோ இல்லை. வங்கியானது, வர்த்தகத்திற்காக ஏதேனும் பொறுப்புக்களை வைத்திருப்பதோ அல்லது இத்தகைய மூலாதார நிதி ஆவணங்கள் மட்டுமல்லாமல் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியிலுள்ளவாறான ஏதேனும் நிதிப் பொறுப்புக்களையோ கொண்டிருப்பதில்லை.

ஏனைய நிதிசார் பொறுப்புக்கள்

ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றன:

- வங்கியினால் வழங்கப்படும் நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் கடன் ஆவணத்தின் நியதிகளுக்கமைவாக நிலுவையாக உள்ள கொடுப்பனவினை விதித்துரைக்கப்பட்ட கடனாளி செலுத்த தவறுகையில் ஏற்படுகின்ற நட்டத்திற்காக மீள்நிதியிடலினை மேற்கொள்வதற்கான கொடுப்பன வொன்றினை மேற் கொள்ளுமாறு கோருகின்றன. நிதிசார் உத்தரவாத ஒப்பந்தங்கள் உத்தரவாத வழங்குகைக்கு நேரடிக் காரணமாக அமைகின்றகொடுக்கல் வாங்கல் செலவுகளுக்காக சீராக்கப்பட்ட நியாயமான பெறுமதியிலான பொறுப்பாக ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. அதனைத்தொடர்ந்து, பொறுப்பானது அறிக்கையிடல் திகதியிலிலுள்ள தற்போதைய கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு கோரப்படுகின்ற செலவினத்தின் சிறந்த மதிப்பீட்டின் உயர்ந்த பெறுமதியிலும் குறைந்த திரண்டபெறுமதி குறைப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொகையிலும். அளவீடு செய்யப்படுகின்றது.
- வங்கியின் கடன் பெறுகைகள் ஆவண வழங்குகைக்கு நேரடி காரணமாக அமைகின்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களின் தேறிய நியாயமான பெறுமதியில் அரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்தகைய பொறுப்புக்களின் வட்டியானது நிதி நிலைமைக் கூற்றில் கொண்டு வரப்படுகின்ற பொறுப்புக்களின் மீதியின் மீது நிலையான வீதத்தில் மீள் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியின் மேல் ஏதேனும் வட்டி செலவினை உறுதிப்படுத்துகின்ற பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி குறைக்கப்பட்ட பெறுமதியில் கணிப்பீடு செய்யப்படுகின்றன. இது தொடர்பான வட்டி செலவுகள், பொறுப்புக்கள் செலுத்தப்பட வேண்டியுள்ள வேளையில், ஏதேனும் வட்டி அல்லது செலுத்ததக்க கூப்பன் வட்டியைப் போன்று, ஆரம்ப கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் மீட்பின் மீது செலுத்த வேண்டிய கட்டணத்தினையும் உள்ளடங்குகின்றது,
- நியாயமான பெறுமதியில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய செலுத்தத்தக்கவைகளும் ஏனைய குறுகிய கால நாணய பொறுப்புக்களும் அதனைத் தொடர்ந்து பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி குறைக்கப்பட்ட செலவில் கொண்டு செல்லப்பட்டது.

## 1.9 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் கொள்விலையில் அங்கீகரிக்கப்படுகின்றன. கொள்விலையானது கொள்வனவு விலை, நேரடியாக எழுந்த செலவுகள் மற்றும் துணைப்பகுதிகளாக்கப்படுகின்ற அல்லது அகற்றப்படுகின்ற எதிர்காலத்தில் தவிர்க்க முடியாத தற்போதைய பெறுமதியில் மதிப்பிடப்பட்ட ஏதேனும் செலவினை உள்ளடக்குகின்றது.ஏற்புடைய பொறுப்பானது ஏற்பாடுகளுக்கிடையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

மூலாதாரமாக மதிப்பிடப்பட்ட செயற்பாட்டு நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார பயன்களை மீளமைப்பதற்கு அல்லது பேணுவதன் பொருட்டு ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களினைப் பேணுவதற்கு அல்லது திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஏற்பட்ட செலவினம் ஏற்பட்ட போது வருமான கூற்றில்

செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது.

தேய்மான ஏற்பாடானது நேர் கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்படுகின்றது இறையிலாதனத்திற்கு தேய்மானமளிக்கப்படுவதில்லை. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஏனைய அனைத்து உருப்படிகளுக்குமான தேய்மானமானது அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்மிகு பொருளாதார ஆயுளுட்காலத்தின் மேல் அவை கொண்டிருக்கின்ற பெறுமதியினை பதிவளிப்பு செய்வதன் மீது அஅளிக்கப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்மிகு பொருளாதார ஆயுட்காலமானது பின்வருமாறு.

(பிரிப்புகள் மற்றும் ஏனைய நிரந்தரபொருத்துகள் உள்ளடங்கலாக)

கணனி வன்பொருளும் மென்பொருளும் - 04 ஆண்டுகள்

தளபாடமும் பொருத்துகளும் - 05ஆண்டுகள்

மோட்டார் வாகனங்கள் - 05 ஆண்டுகள்

அலுவலக உபகரணங்களும் ஏனைய நிலையான சொத்துக்களும் - 05 ஆண்டுகள்

சொத்துக்களின்தேய்மானமானது அவை பயன்பாட்டுக்கு உட்படுகையில் ஆரம்பமாகின்றது.

### 1.10 நிதியல்லா சொத்துக்களின் திறன்குறைப்பு

வங்கியானது சொத்தொன்றின் திறன் குறைக்கப்படலாமென குறிப்பிடப்படுமிடத்து அதன் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அதனை மதிப்பீடு செய்கின்றது. தற்போது ஏதேனும் குறிகாட்டி காணப்படுமாயின் அல்லது கோரப்படும் சொத்தொன்றிற்கான வருடாந்த திறன் குறைப்பு சோதனையின் போது வங்கியானது அச் சொத்தின் அறவிடக்கூடிய தொகையினை மதிப்பீடு செய்கின்றது. சொத்தொன்றின் அறவிடக்கூடிய தொகையானது சொத்தொன்றின் அல்லது விற்பனைக்கு குறைந்த CGU இன் நியாயமான பெறுமதியிலும் உயர்வாக இருக்கிறது. சொத்த்தொன்றின் அல்லது CGUஇன் தொகையானது அதன் அறவீடு செய்யக்கூடிய தொகையினை விஞ்சியதாகவும் சொத்தானது பெறுமதி குறைந்ததாகவும் அதன் அறவிடத்தக்க தொகையினை பதிவளிப்பு செய்வதாகவும் கருதப்படுகின்றது.

பயன்பாட்டிலுள்ள மதிப்பிடப்படும் பெறுமதியில், மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், பணத்தின் காலப் பெறுமதியின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற வட்டக்கு முன்னான கழிவினைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படுகின்றன. விற்பனைக்கான குறைந்த செலவின் நியாயமான பெறுமதியினை நிர்ணயிப்பதில், பொருத்தமானதொரு பெறுமதி மதிப்பீட்டு மாதிரியானது பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய கணிப்பீடுகள், பல்வேறு பெறுமதி மதிப்பீடுகள், திறந்த முறையில் வியாபாரம் செய்யும் துணைக்கம்பனிகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடிய நியாயமான பெறுமதி குறிகாட்டிகள் ஆகியவற்றின் மூலம் உறுதி செய்யப்படுகின்றன.

நன்மதிப்பு தவிர்ந்த ஏனைய சொத்துக்களுக்கான முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிறக்க நட்டங்கள் ஏதேனும் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீடானது, நீடிக்கப்படாமல் போகலாம் அல்லது குறைக்கப்படலாம். அத்தகைய குறிகாட்டிகள் தற்போதுமிருக்குமாயின், வங்கியானது சொத்தின் அல்லது CGU இன் அறவிடக்கூடிய தொகையினை மதிப்பீடு செய்கின்றது. முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிறக்க நட்டமானது கடந்த மதிப்பிறக்க நட்டம் ஏற்பட்டதிலிருந்து சொத்தின் அறவிடத்தக்க தொகையினைத் தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்குமாயின் மட்டுமே மீளளிக்கப்படும். சொத்தின் பெறுமதியானது

அதன் அறவிடத்தக்க தொகையினை விஞ்சியருக்காவிடின் அல்லது தீர்மானிக்கப்படும் தொகையானது கொண்டிருக்கின்ற தொகையினை விஞ்சுமாயின் தேய்மானத்தின் தேறிய பெறுமதியானது முன்னையை ஆண்டுகளில் சொத்துக்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பிறக்க நட்டம் ஏற்பட்டிருக்காது. அத்தகைய மீளளிப்பானது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## 1.11 விற்பனை மற்றும் விற்பனைக் குழுவிற்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள்

வங்கியானது தொடர்ச்சியான பயன்பாட்டினூடாக விற்பனை கொடுக்கல் வாங்கல் அல்லாதவற்றினூடாக முதன்மையாக அறவிடப்படும் அதன் பெறுமதியினைக் கொண்டிருக்குமாயின் விற்பனைக்காக வைத்திருக்கக்கூடிய நடைமுறையல்லா சொத்தினை (விற்பனைக் குழு) வகைப்படுத்துகின்றது.

நடைமுறையல்லா சொத்துக்களும் விற்பனை வகுதிகளும் விற்பனைக்காக வைத்திருக்குகையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.:

- அவை உடனடி விற்பனைக்காக உள்ளன;
- முகாமையானது விற்பனைக்கான திட்டமொன்றினை வகுக்கையில்;
- திட்டத்துக்கான கணிசமான மாற்றங்கள் விருப்பமின்றி மேற்கொள்ளப்படும் அல்லது அத்திட்டம் மீளப்பெறப்படும்;
- வாங்குனரை நியமிப்பதற்கு வலுவான நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது;
- சொத்து அல்லது விற்பனை குழுவானதுஅதன் நியாயமான பெறுமதியில் சந்தைப்படுத்தப்படுகின்றது; மற்றும்
- விற்பனையானது வகைப்படுத்தல் திகதியிலிருந்து 12 மாதங்களினுள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நடைமுறையல்லா சொத்து மற்றும் விற்பனை குழுக்கள் என்பன பின்வருவனவற்றுள் குறைந்த பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றன:

- முன்னதாக உடனடியாக அவை வைத்திருக்கின்ற தொகையானது வங்கியின் கணக்கீட்டுத் தொகையுடன் இணங்கி விற்பனைக்காக வைத்திருக்கக் கூடியவாறு வகைப்படுத்தப்படுகின்றன;

  மற்றும்

- நியாயமான பெறுமதியிலும் குறைந்த செலவில் விற்பனை செய்தல்

நடைமுறையல்லா சொத்துக்கள் (விற்பனைக் குழுவிலுள்ளவை உள்ளடங்கலாக) விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவாறான அவற்றின் வகைப்படுத்தலினைத் தொடர்ந்து தேய்மானமளிக்கப்படுவதில்லை.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் விற்பனைத் தொழிற்பாடுகளின் விளைவுகள் விற்பனைத் திகதி வரையிலான திரண்ட வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

தொடர்ச்சியல்லா தொழிற்பாடானது விற்னைக்காக வைத்திருக்கக்கூடிய வகைப்படுத்தப்படவேண்டிய பகுப்பாய்வனை நிறைவு செய்கின்ற அல்லது கைவிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டவற்றினை விடுவிக்கும் நோக்குடன் பிரத்தயேகமாக கொள்வனவு செய்யப்பட்ட தொழிற்பாடுகளின் வியாபார அல்லது புவிசார் பகுதிகளின் பிரதான நிரலினைவேறானக பிரதிதித்துவப்படுத்துகின்ற வங்கியின் வியாபாரத்தின் ஒரு பகுதியாகும்.

தொடர்ச்சியல்லா தொழிற்பாடானது, தொடர்ச்சியல்லா தொழிற்பாடுகள் நிறைவேற்றுகின்ற விற்பனை அல்லது சொத்துக்களின் விற்பனை அல்லது விற்பனைக் குழுக்களுக்கான நியாயமான பெறுமதியின் குறைந்த கிரயத்திற்கு மீள் கணிப்பீடு செய்வதில் அங்கீகரிக்கப்பட்ட வரிக்கு பின்னரான இலாபம் அல்லது நட்டத்துடனான தொடர்ச்சியற்ற தொழிற்பாட்டின் வரிக்கு முந்திய இலாபம் அல்லது நட்டத்தினை உள்ளடக்குகின்றது.

## 1.12 முதலீட்டு ஆதனம்

முதலீட்டு ஆதனங்கள் கொடுக்கல் வாங்கல் செலவுகள் உள்ளடங்கலாக கிரயத்தில் (ஆரம்பத்திலும் அதனைத் தொடர்ந்தும்) அளவீடு செய்யப்படுகின்றன.முதலீட்டு ஆதனங்களின் நியாயமான பெறுமதி வருடாந்த அடிப்படையில் முகாமையினால் அளவீடு செய்யப்படுவதுடன் நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களில் வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பெறத்தக்க வாடகையானது குத்தகை காலப்பகுதிக்கு மேலாகநேர்கோட்டு அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது. வாடகையாளருக்கு ஊக்குவிப்பு (வாடகையற்ற காலப்பகுதி) வழங்கப்படுமிடத்து, முதலீட்டு ஆதனம் கொண்டிருக்கின்ற பெறுமதியானது, இந்த அடிப்படையிலான வாடகை வருமானத்தனை அங்கீகரித்தமையின் விளைவாக தனியானதொரு சொத்தாக குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் தொகையினை விலக்களிக்கின்றது.

### 1.13 கற்பனைச் சொத்துக்கன்

#### 1.13.1வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கற்பனைச் சொத்துக்கள்

வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்படும் கற்பனைச் சொத்துக்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து அவற்றின் பயன்பாட்டுக் காலத்திற்கு மேலாக நேர்கோட்டு அடிப்படையிலான குறைக்கப்பட்ட பெறுமதியிலும் அங்கீகரிக்கப்படுகின்றன.

கற்பனைச் சொத்துக்கள் கொள்வனவு உரிமையிலிருந்து அல்லது ஏனைய ஒப்பந்த/ சட்ட உரிமைகளிலிருந்து அவை வேறாக காணப்படுமாயின் வியாபார ஒன்றிணைப்புக்களில் அங்கீகரிக்கப் படுகின்றன. அத்தகைய கற்பனை சொத்துக்களுக்கு விபரிக்கப்பட்ட தொகையானது பொருத்தமான பெறுமதி மதிப்பு உபாயங்களை பயன்படுத்துவதன் மூலம் வந்ததாகும்.

### 1.14 குத்தகை ஆதனங்கள்

#### 1.14.1 நிதி குத்தகை

வழங்கப்பட்ட சொத்தொன்றின் உரிமைக்குரிய இடர்கள் மற்றும் தற்செயலான பரிசளிப்புக்கள் என்பனவற்றில் பெரும்பாலானவை, இணைந்து கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் அவை வங்கிக்கு மாற்றப்பட்டதாக (நிதிக் குத்தகை) கருதப்படும். சொத்தொன்றாக ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகையானது, குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதியில் குத்தகை காலத்திற்கு மேல் செலுத்தத்தக்க ஆகக் குறைந்த நடைமுறை பெறுமதியிலும் குறைவானதாக இருக்கின்றது. ஒத்தசைவான குத்தகை இணக்கப்பாடானது பொறுப்பாக காட்டப்படுகின்றது.

குத்தகை கொடுப்பனவுகள் முதலுக்கும் வட்டிக்கும் இடையில் பகுப்பாய்வு செய்கின்றன. வட்டியானது குத்தகை பொறுப்பின் நிலையான விகிதாசாரத்தனை பிரதிபலிக்கின்றவாறு கணிப்பிடப்பட்டு குத்தகை காலப்பகுதிக்கு மேலான திரண்ட வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றது. மூலதன மூலகமானது குத்தகையாளருக்குரிய மீதியினைக் குறைக்கின்றது.

#### 1.14.2தொழிற்பாட்டு குத்தகை

வங்கிக்கு மாற்றப்படாத (தொழிற்பாட்டு குத்தகை) உரிமைக்கான தற்செயலான வெகுமதிகள் மற்றும் வெகுமதிகளின் பெரும்பாலானவை என்பன வழங்கப்பட்ட சொத்தொன்றின் உரிமைக்குரிய இடர்கள் மற்றும் தற்செயலான பரிசளிப்புக்கள் என்பனவற்றில் பெரும்பாலானவை, குத்தகை காலத்திற்கு மேல் நேர் கோட்டு அடிப்படையில் திரண்ட வருமானக் கூற்றில், குத்தகையின் கீழ் செலுத்தத்தக்க மொத்த வாடகையான அறவீடு செய்யப்படுகின்றன. குத்தகை உடன்படிக்கையின் மொத்த பயனானது நேர்கோட்டு அடிப்படையில் குத்தகை காலத்திற்கு மேல் வாடகை செலவினத்தின் குறைப்பாக அங்கீகரிக்கப்படுகின்றது.

## 1.15பொருள்விபர பட்டியல்

காகிதாதி இருப்புக்கள் போன்ற பொருள் விபர பட்டியல்கள் குறைந்தளவில் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு செலுத்த வேண்டியுள்ளகொடுப்பனவுகளை முழுமையாக மேற்கொண்டதன் குறைந்த பின்னரான குறைந்த செலவில், தேறியறிய தேறக்கூடிய பெறுமதியில் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## 1.16 கடன் வழங்கல் செலவுகள்

சொத்தொன்றின் கொள்ளல், நிருமாணம் அல்லது உற்பத்தி தொடர்பில் நேரடியாக ஏற்படுகின்ற கடன் பெறல் செலவுகளாவை, அதன் பயன்பாடு அல்லது விற்பனைக்குத் (தகமை வாய்ந்த சொத்து) தயாராவதற்குத் தேவையான காலப்பகுதி என்பன உரிய சொத்துக்களின் கிரயத்தின் பகுதியாக மூலதனமாக்கப்படும். ஏனைய அனைத்து கடன் பெறல் செலவுகளும் அவை இடம் பெறும் காலப்பகுதியில் செலவு செய்யப்படுகின்றன. கடன் பெறும் செலவுகள் நிதியினை பெறுவது தொடர்பில் ஏற்படுகின்ற வட்டி மற்றும் உரமையாணமையில் ஏற்படுகின்ற ஏனைய செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

## 1.17 இழைப்பாறல் பயன் செலவு

### 1.17.1வரையறுத்த பங்களிப்பு திட்டங்கள்

ஊழியர்கள் உரிய நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்குப் பங்களிப்பு செய்வதற்கான தகமையினைக் கொண்டுள்ளனர். வங்கியானது ஊழியர்களின் மொத்த வேதனாதிகளில் முறையே 12% மற்றும் 3% ஆகியவற்றினை ஊழியர்சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

### 1.17.2 வரையறுத்த பயன்திட்டங்கள் – பணிக்கொடை

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் எல்கேஎஸ் 19 – இன்படியான ஊழியர் பயன்களுடன் இணங்கி, அனைத்து ஊழியர்களுக்குமான முதல் சேவை ஆண்டிலிருந்து இழைப்பாறல் பணிக்கொடைக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இல. பணிக்கொடை சட்ட கொடுப்பனவின் கீழ், ஊழியர் ஒருவருக்கான பொறுப்பானது ஐந்து வருட தொடர்ச்சியான சேவை பூர்த்தியின் போது மட்டுமே எழுகின்றது. பொறுப்பானது வெளியிலிருந்து நிதியளிக்கப்படுவதில்லை.

வரையறுத்த பயன் திட்டமொன்று வரையறுத்த பங்களிப்பு திட்டமல்லாத வேலை வாய்ப்பின் பின்னரான பயனளிக்கும் திட்டமாகும்.ஊழியர்களின் எதிர்காலபயன் தொகையினை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிப்பிடு செய்யப்படுகின்ற வரையறுத்த ஓய்வூதிய திட்டமிடல்கள் தொடர்பான வங்கியின் தேறிய கடப்பாடானது,அதன் தற்போதைய பெறுமதியினை தீர்மானிப்பதற்கு கழிவழிக்கப்படுகின்ற பயனான, அவர்களின் நடைமுறை அல்லது முன்னைய காலப்பகுதிகளிலுள்ள அவர்களின் சேவைக்காலத்திற்காக ஊழயர்கள் சம்பாதித்துள்ள ஊழியர்களின் எதிர்கால பயன்தொகையினை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுகின்றது.அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கடந்த கால சேவை கிரயங்கள் கழிக்கப்படுகின்றன.

கழிவு வீதமானது, உயர் தரத்திலான ஒருங்கிணைந்த முறிகள் மீதான அறிக்கையிடல் திகதியில் ஈட்டப்படுகின்றது. பயனளிக்கப்படுகின்ற அதே நாணயத்தில் விசேட நாணய அலகில் வெளிப்படுத்தப்படுகின்ற வங்கி கடப்பாடுகளின் நியதிகளின்படியான அண்ணளவான முதிர்வுத் திகதிகளில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கணிப்பீடானது முறைப்படுத்தப்பட்ட கடன் அலகு முறையினைப் பயன்படுத்தி தகமை

பெற்ற இடர் மதிப்பீட்டாளர் ஒருவரினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

திட்டமொன்றின் பயன்கள் மேம்படுத்தபடுகின்ற போது, ஊழியர்களினால் கடந்த சேவையுடன் தொடர்புடைய பயன் அதிகரிக்கப்பட்ட பகுதியானது பயனானது உரித்தளிக்கப்படும் வரையில் சராசரி காலத்திற்கு மேல் நேர்கோட்டு அடிப்படையிலான இலாபம் அல்லது நட்டத்தினை அங்கீகரிக்கின்றது. உரித்தளிக்கப்பபடுகின்ற பயன்களை உடனடியாக விரிவாக்குவதற்கு, செலவானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றது. வங்கியானது, ஏனைய திரண்ட வருமானத்தில் வரையறுத்த பயன் திட்டங்களிலிருந்து எழுகின்ற அனைத்து இடர் மூலமான சம்பாத்தியங்கள் அல்லது நட்டங்களை அங்கீகரிக்கின்றது.

## 1.18 வரிவிதிப்பு

### 1.18.1 நடைமுறையிலுள்ள வரிகள்

நடைமுறை வரி, அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது அதனைத் தொடர்ந்து சட்டமாக்கப்பட்ட வரி வீதங்களினைப் பயன்படுத்தி குறித்த ஆண்டிற்கான வரி விதிக்கத்தக்க வருமானம் அல்லது நட்டத்தின் மீது செலுத்தத்தக்க அல்லது பெறத்தக்க வரியினை, மற்றும் முன்னைய ஆண்டுகளின் செலுத்தத்தக்க வரிக்கான ஏதேனும் சீராக்கலினை எதிர்பார்க்கின்ற வரியாகும்.

### 1.18.2 நீடித்த வரி விதிப்பு

நீடித்த வரி, நிதி அறிக்கையிடல் நோக்கங்கள் மற்றும் வரி அறவிடல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் தொகைகள் ஆகியவற்றுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கொண்டிருக்கின்ற தொகைகளுக் கிடையிலான தற்காலிக வேறுபாடுகள் தொடர்பில் அங்கீகரிக்கப்படுகின்றது. நீடித்த வரியானது பின்வரும் தற்காலிக நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப் படவில்லை. வியாபார ஒன்றிணைப்பில்லாத கொடுக்கல் வாங்கலொன்றிலுள்ள சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் பூர்வாங்க அங்கீகாரம் மற்றும் கணக்கீடு அல்லது வரி விதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தினைப் பாதிக்கின்ற அல்லது துணைக் கம்பனிகளிலுள்ள முதலீடுகளுடன் தொடர்புடைய வேறுபாடுகள், விரிவாக்குவதற்கான இணைந்த கட்டுப்படுத்தப்பட்ட உரிமையாண்மைகள் போன்றவை எதிர்காலத்தில் மீளளிக்கப்பட மாட்டாதவையாகும். அத்துடன், நீடித்த வரியானது நன்மதிப்பின் ஆரம்ப அங்கீகாரம் தொடர்பில் எழுகின்ற வரிவிதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளை அங்கீகரிப்பதில்லை. நீடித்த வரியானது, அறிக்கையிடல் திகதியின் மூலம் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது அதனைத் தொடர்ந்து சட்டமாக்கப்படும் சட்ட விதிகளின் அடிப்படையில் அவை மீளளிக்கப்படும் போது தற்காலிக வேறுபாடுகளுக்கு பொருந்தக் கூடியவாறு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவீடு செய்யப்படுகின்றது.

நடைமுறை வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கவனத்தில் கொள்வதற்கு சட்டபூர்வமாக அமுல்படுத்தக் கூடியதாக இருக்குமாயின் நீடித்த வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் குறித்த வரி விதிக்கக்கூடிய உரிமையாண்மையின் அல்லது, வேறுபட்ட வரி உரிமையாண்மைகள் மீதான குறித்த வரி அதிகாரத்தின் மூலம் விதிக்கப்படுகின்ற வருமான வரிகளுடன் அவை தொடர்புபடுவதுடன் ஆனால், அவர்கள் தேறிய அடிப்படையில் நடைமுறை வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கொடுத்து தீர்க்கும் நோக்குடன் கவனத்தில் கொள்ளப்படும் அல்லது அவற்றின் வரி பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் ஒரே நேரத்தில் வசூலிக்கப்படும்.

பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள், வரி கடன்கள் மற்றும் எதிர்கால விரி விதிக்கத்தக்க இலாபங்களை சாத்தியமான வகையில் விரிவாக்குவதற்கான கழிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள் அவை பயன்படுத்தப்படக் கூடியமானவற்றிற்கு எதிராக

கிடைக்கக்கூடியதாக இருக்கும். நீடித்த வரி சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் வரி பயனுடன் தொடர்புடைய கூடிய விரைவில் விரிவாக்குவதற்காக குறைக்கப்படுகின்ற நீடித்த வரி சொத்தானது வசூலிக்கப்படும்.

### 1.19 பங்கு மூலதனம்

#### 1.19.1 உரிமை மூலதனம்

வங்கியினால் வழங்கப்படும் நிதி ஆவணங்கள் நிதி பொறுப்பு அல்லது நிதி சொத்துக்களின் வரைவிலக்கணத்திற்கு ஏற்புடையாகாத வரிவாக்குவதற்கு மட்டுமான உரிமையாக வகைப்படுத்தப்படுகின்றன.

வங்கியின் சாதாரண பங்குகள் உரிமை ஆவணங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

#### 1.19.2 பங்குலாபங்கள்

பங்குலாபங்கள் பெறுதலுக்கான உரிமையானது நிலைநிறுத்தப்படும் போது அங்கிகரிக்கப்படுகின்றது.உரிமைப் பங்குதாரர்களுக்கான இடைக்காலப் பங்குலாபம் வழங்கப்படுகையில் இது பணிப்பாளர்களினால் பிரகடனப்படுத்தப்படுகின்றது. இறுதிப் பங்குலாபம் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பங்குதாரர்களினால் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 1.20 ஏற்பாடுகள்

வங்கியானது நிச்சயமற்ற காலப்பகுதி தொகைகளின் பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளை அங்கிகரித்துள்ளது. ஏற்பாடானது அறிக்கையிடும் திகதியிளைள கடப்பாடுகளை தீர்ப்பதற்கு தேவைப்படும் செலவினத்தின் சிறந்த மதிப்பீட்டிலை,பணப் பெறுமதியின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய வீதத்தில் கழிவு வழங்கப்பட்ட பெறுமதியில் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

## 2. நெருக்கடியான கணக்கிட்டு மதிப்பீடுகளும் தீர்ப்புகளும்.

வங்கியானது எதிர்காலம் தொடர்பில் குறித்த சில மதிப்பீடுகளையும் கருதுகோள்களையும் கொண்டுள்ளது. மதிப்பீடுகளும் கருதுகோள்களும் வரலாற்று அநுபவங்கள் மற்றும் சூழ்நிலைகளில் நியாயமானதாக இருக்குமொன நம்பப்படுகின்ற எதிர்கால நிகழ்வுகளின் எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்கலான ஏனைய காரணிகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. எதிர்காலத்தில், உண்மையான அநுபவமானது இத்தகைய மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களிலிருந்து வேறுபடலாம்.

## 3. நிதி ஆவணங்கள்–இடர் முகாமைத்துவம் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு

பணிப்பாளர் சபையானது ஒட்டு மொத்த இடர் முகாமைத்துவ பணியினை தீர்மானிப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டுள்ளதுடன் இடர் முகாமைத்துவ தந்திரோபாயங்களை வினைத்திறனுடன் அமுல்படுத்துவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. அதற்கிணங்க, சபையானது இடர் முகாமைத்துவ கொள்கைகளை அங்கீகரிப்பதுடன் இடர்களை முறியடிப்பதற்கான தந்திரோபாயங்களை வகுப்பதற்கும் அங்கீகாரமளிக்கின்றது. சபையானது வங்கியினால் எதிர்நோக்கப்படும் அனைத்து வகையான இடர்களையும் சமாளிப்பதற்காக சபை உப குழுக்களை தாபித்துள்ளது. சபையானது, வங்கியின் ஒட்டு மொத்த இடர் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான பொறுப்புணர்வினைக் கொண்டுள்ளது.

**ஒன்றிணைந்த இடர் முகமைத்துவ குழு சபையானது (BIRMC)** இடர் முகாமைத்துவ செயல்முறை மீதான பணிப்பரைளை வழங்குவதுடன் பணிப்பாளர் சபையினால் உறுதிப்படுத்துவதற்காக கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வகுத்தல், அத்தகைய அனைத்து தொழிற்பாடுகளையும் உறுதி செய்வதுடன் அத்தகைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமுலாக்கம் செய்தல் ஆகியவற்றுடன் சபையினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் கொள்கைகளுக்ப் பொறுப்பும் வாய்ந்தாகும்.

தயாரிக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகளை மற்றும் தீர்மானம் நிறைவேற்றுதல் என்பன இலங்கை சேமிப்பு வங்கியின் நாளாந்த தொழிற்பாடுகளை ஒருங்கிணைக்கின்றன. வங்கியினுடான இடர் முகாமைத்துவ நடைமுறையானது போதுமான நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கான வங்கியின் இணக்கப்பாடுகள் என்பவற்றினை செவ்வை பார்க்கும் உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டினால் (உள்ளக) வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுகின்றது. உள்ளக கணக்காய்வானது முகாமைத்துவத்துடனான அனைத்து மதிப்பீடுகளின் பெறுபேறுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளதுடன் கணக்காய்வு குழுவிற்கு அதன் காண்புகளையும் பரிந்துரைகளையும் அறிக்கையாக சமர்ப்பிக்கின்றது.

ஒன்றிணைந்த இடர் முகமைத்துவ குழு சபையானது இரண்டு நிறைவேற்று அதிகாரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்களில் ஒருவர் பணிப்பாளர்/பிநிஉ, சிரேஸ்ட தொழிற்பாட்டு முகாமையாளர், சிரேஸ்ட ஒருங்கிணைந்த உறவுகள் முகாமையாளர், கடன் முகாமையாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் ஆகியோர் கலந்து கொள்கின்ற கூட்டங்களுக்கு தலைமை வகிப்பார்.

குழுவானது, சந்தை, கடன், திரவத்தன்மை, தொழிற்பாடு, இணக்கப்பாடு மற்றும் மதிப்புமிக்கதும் முறையானதுமான தந்திரோபாய இடர்கள், மீளாய்வுகள் மற்றும் கண்காணிப்பு தொழிற்பாடுகள் மற்றும் ALCO மற்றும் கடன் எல்லைகளுடனான வங்கியின் இடர்களை முகாமை செய்வதற்கான கடன் போன்ற குழுக்களின் வினைத்திறனை மதிப்பிடுவதன் மூலம் வங்கியானது இடரினை கட்டுப்படுத்துகின்றது

இது சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகள், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் வியாபார தொழிற்பாடுகளின் அனைத்து விடயங்களுக்குமான அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் அகியவற்றினை மதிப்பீடு செய்வதற்கான இணக்கத் தொழிற்பாட்டினையும் தாபித்துள்ளது.

அனைத்து ஏனைய வியாபாரங்களுக்கும் பொதுவில், வங்கியானது அதன் நிதி ஆவணங்களைப் பயன்படுத்துவதிலிருந்து எழுகின்ற இடர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துகின்றது. இது வங்கியின் நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் அத்தகைய இடர்களை கட்டுப்படுத்துவதற்கான செயல்முறைகள் ஆகியவற்றினையும் விபரிக்கின்றது. மேலும், இத்தகைய இடர்கள் தொடர்பான தகவல்கள் இத்தகைய நிதிக்கூற்றுக்களினூடாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களின் இடர்கள், அதன் நோக்கம், கொள்கைகள் மற்றும் குறிப்புக்களில் தெரிவிக்கப்பட்டாலன்றி முன்னைய காலப்பகுதிகளிலிருந்து அவற்றினை அளவீடு செய்வதற்கு பயன்படுத்தப்படும் அத்தகைய இடர்கள் அல்லது முறைகளை நிர்வகிப்பதற்கான நிதி ஆவணங்களுக்கு வங்கியின் வெளிப்படுத்தலில் போதுமான மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

## கடன் இடர்

கடன் இடரானது வங்கிக்கு நட்டத்தினை ஏற்படுத்துகின்ற இடராகும். ஏனெனில், வாடிக்கையாளர்கள் அல்லது ஒத்திசைவான தரப்பினர் தமது ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறுவதனால் இது ஏற்படுகின்றது. வங்கியானது தனிநபர் ஒத்திசைவான தரப்புக்களுக்கு விரும்புகின்ற இடர் தொகையின் மீது எல்லைகளை நிர்ணயிப்பதன் மூலமும் அத்தகைய எல்லைகளுடன் தொடர்புடைய விடயங்களை கண்காணிப்பதன் மூலமும் கடன் இடரானது நிருவகிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றது

வங்கியானது முறையான ஒருங்கிணைந்த மீளாய்வுகள் உள்ளடங்கலான ஒத்திசைவான தரப்புக்களின் கடன் பெறுமதியிலுள்ள சாத்தியமான இனங்காணலை அளிப்பதற்கு

கடன் தர மீளாய்வு நடைமுறையொன்றினை தாபித்துள்ளது. கடன் சேகரிப்பு முறைகள் முறையாக பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் சேகரிப்புக்களில் காணப்படும் அசாதாரண தாமதங்கள் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டன.

### பெறுமதி குறைப்பு மதிப்பீடு

கணக்கீட்டு நோக்கத்திற்காக, வங்கியானது பெறுமதி குறைக்கப்பட்ட நிதிசொத்துக்களின் மீதான நட்டங்களை அங்கீகரிப்பதற்காக ஏற்பட்ட நட்ட மாதிரியொன்றினைப் பயன்படுத்துகின்றது. அவதானிக்கப்பட்டிருந்த குறித்துரைக்கப்பட்ட நட்டமொன்றின் ஆதாரத்தினை நோக்குகையில் அங்கீகரிக்கப்பட முடியுமானவற்றினை மட்டுமேஇது குறிக்கின்றது. கட்டுப்படுத்தப்படக் கூடிய நிகழ்வுகள் பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றன:

- வாடிக்கையாளரின் குறிப்பிடத்தக்க நிதி இடர்பாடு
- கொடுப்பனவினை மேற்கொள்ளாமை போன்ற ஒப்பந்த மீறல்
- வாடிக்கையாளர் நிதி நெருக்கடியினை எதிர்நோக்குகையில் வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு இச்சலுகை வழங்கப்படுகின்றது.
- வாடிக்கையாளர் முறிவடைதல் நிலைக்கு அல்லது ஏனைய நிதி மீள் ஒழுங்கமைப்பு நிலைக்கு செல்லும் வாடிக்கையாளராக வருகையில்.
- கடன்களிலிருந்தான மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாயச்சலில் குறைவு ஏற்படுகையில் அவதானிக்கக்கூடிய தரவுகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

இந்த அணுகுமுறையானது பசல் 11 இனை அடிப்படையாகக் கொண்ட இலங்கை அரசாங்கத்தின் பணிப்புரைகளுக்கமைவாக ஒழுங்கு முறையிலான மூலதன நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படுவதற்குஎதிர்பார்க்கப்படும் நட்ட மாதிரிகளிலிருந்து வேறுபடுகின்றது.

### தனித்தனியாக மதிப்பிடப்பட்ட படிகள்

வங்கியானது, வட்டிகளின் காலாவதி கொடுப்பனவுகள், கீழிறங்கிய தரத்திலான அல்லது கடன் ஒப்பந்தத்தின் மூல நிபந்தனைகள மீறுதல் உள்ளடங்கலான ஏதேனும் காலாவதியான தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த கடனுக்கு அல்லது தனிநபர் அடிப்படையிலான முற்பணம் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான படிகளை தீர்மானிக்கின்றது. படி தொகையினை தீர்மானிக்கின்ற போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் ஒத்த தரப்பின் வியாபார திட்டமிடலின் உறுதியான தன்மை, நிதி நெருக்கடியிலிருக்குமாயின் அதன் இயலுமையினை மேம்படுத்துவதற்கான செயற்பாடு, திட்டமிடப்பட்ட பெறுகைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகள், ஏனைய நிதி ஆதரவுகளின் கிடைப்பனவு, ஒருங்கிணைந்தவற்றின் தேறக்கூடிய பெறுமதி மற்றும் எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்களின் கால அளவு என்பன உள்ளடங்குகின்றன. பெறுமதி குறைப்பு படிகளானவை அதிக கவனமுடைய சூழ்நிலைகள் காணப்படாதவிடத்து ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

### சேர்ந்த மதிப்பீடு செய்யப்பட்ட படிகள்

படிகள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான நட்டங்களுக்காகவும் தனித்தனியாக முக்கியத்துவமல்லாத கடன் முதலீடுகளின் முதிர்வில் வைத்திருப்பதற்காகவும் ஒவ்வொன்றாக மதிப்பிடக்கூடிய கணிசமானளவு கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஒவ்வொன்றிற்குமாகவும் சேர்ந்து திரட்டாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் பெறுமதி குறைக்கப்பட வேண்டியவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வங்கியானது, பொதுவாக வரலாற்று அநுபவத்தின் அடிப்படையில் அதன் பகுப்பாய்வுகளை மேற்கொள்கின்றது. எவ்வாறாயினும், கணிசமானளவு சந்தை அபிவிருத்திகள், பிராந்திய அபிவிருத்திகள் போன்று முக்கியத்துவம் பெறுகின்ற போது வங்கியானது அதன் மதிப்பீடுகளில் நுண்பாக பொருளியல் காரணிகளையும் உள்ளடக்கும்.

இத்தகைய காரணிகள், தனித்தனியான அல்லது சேர்ந்த மதிப்பீடுகளின் பண்பில் தங்கியுள்ள வேலையில்லா வீதம், அறவிட முடியாக்கடன்களின் நடைமுறை வீதம், சட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ஏனைய பாவனையாளர் தரவு ஆகியவற்றினையும் உள்ளடக்குகின்றது. வங்கியானது, பெறுமதி குறைப்பு படிகளைச் சீராக்குவதற்குப் பொருத்தமான காரணிகளை மேற்குறித்தவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

